2820

T.N.C.A Debates

official Report.

VOL II NO I

13th March 1985

V2II, 31 N85

N85.2.1
136365

வெளியீடு 8-7-85] [Issued 8-7-85

3528 | 85
1 6 . . 1985
2820

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 13, 1985 - தொகுதி II எண் 1
Wednesday the 13th March 1985 - Volume II No 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

D

V211, 31 N85

N85.2.1

136365

சென்னை-600 009

16 1985

## உள்ளடக்கம்.

13—3—1985

| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | i—vii |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | ix—x |
| (iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல் | xi—xx |
| 1. கவன ஈர்ப்பு : | |
| கச்சா முந்திரி கிடைக்காததால் கன்னியா குமரி மாவட்ட முந்திரி ஆலைத் தொழிலா ளர்கள் பாதிக்கப் பெறுவது | 1—5 |
| 2. அரசினர் சட்ட முன்வடிவு : | |
| கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985 | 5—8 |
| 3. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி) | 8—135 |
| டாக்டர் கே. பி. இராமலிங்கம் | 8—20 |
| திரு. மா. கதிர்வேலு | 20—27 |
| திரு. சா. துரைசாமி | 27—38 |
| திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் | 38—44 |
| திரு. என். விஜயபாலன் | 45—54 |
| திரு. பொன் முத்துராமலிங்கம் | 54—66 |
| திரு. எச். ஜி, ஆறுமுகம் | 70—76 |
| திரு. கு. தமிழரசன் | 76—82 |
| திரு. கே. அன்பழகன் | 82—87 |
| திரு. இரா. சண்முகம் | 87—92 |
| டாக்டர் ந. மாசிலாமணி | 93—100 |
| திரு. சி, சுப்புராயர் | 100—106 |
| திரு. எஸ். என். இராமசாமி | 106—109 |
| திரு. மு. தங்கமணி | 109—111 |
| திரு. எ. தெய்வநாயகம் | 112—116 |
| திரு. கோ. வீரய்யன் | 116—123 |
| திரு. சா. ஜெயச்சந்திரன் | 124—128 |
| திரு. டி. எம். வெங்கடாசலம் | 128—134 |
| 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 134—136 |

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

## தமிழ்நாடு ஆளுநர் :

திரு. சுந்தர்லால் குரானா.

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப் பாகு கழிவு, தொல்பொருள் இயல், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), ஆயத்துறை மற்றும் பயண இசைவுச் சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) : நிதி, வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்) : மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் அச்சுத்துறை, மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) : தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்): செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

* 6. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழில்துறை அமைச்சர்) : பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்): கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்): வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவு சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்ட அமைச்சர்): சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு மற்றும் கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்பட).

10. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்): மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்று சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

11. மாண்புமிகு திரு. க. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்): போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

12. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (உணவு அமைச்சர்): உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

* 13. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் (கைத்தறி துறை அமைச்சர்): கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

14. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் (உள்ளாட்சித் துறை அமைச்சர்): நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை.

* 15. மாண்புமிகு திரு. தா. வீராசாமி (வணிக வரித்துறை அமைச்சர்): வணிக வரிகள்.

16. மாண்புமிகு திரு. என். நல்லுசாமி (வீட்டு வசதித்துறை அமைச்சர்): வீட்டு வசதி மற்றும் குடிசைமாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.

* 17. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் (ஊரகத் தொழில் அமைச்சர்): கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

* 18. மாண்புமிகு திரு. க. இராமசாமி (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்): வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.



* 19. மாண்புமிகு திரு. எ. அருணாசலம் (ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்): ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

20. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்): பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளம்.

21. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை மற்றும் சத்துணவு அமைச்சர்): சத்துணவு, மகளிர் குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

22. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த்துறை அமைச்சர்): கதர், பூமிதானம் மற்றும் கிராம தானம்.

23. மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப் (பொதுப் பணித்துறை அமைச்சர்): பொதுப்பணித் துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

24. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கூட்டுறவு.

---

* 3—3—1985 அன்று பதவியேற்றனர்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU:

Thiru SUNDAR LAL KHURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. The Hon. Dr. M. G. RAMACHANDRAN (Chief Minister): Public, General Administration. Indian Administrative Service and other All-India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaelogy, Prohibition excluding grant of Liquor Permits, Excise and Passports.

2. The Hon. Dr. V. R. NEDUNCHEZHIAN (Minister for Finance): Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-servicemen.

3. The Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity): Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. The Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Labour): Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments): Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquor permits.

*6. The Hon. Thiru K. RAJARAM (Minister for Industries): Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. The Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education): Education, Official Language, Tamil Development and Culture.

8. The Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture): Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water-Supply and Drainage Board.

9. The Hon. Thiru C. PONNAIYAN (Minister for Law): Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

10. The Hon. Dr. H. V. HANDE (Minister for Health): Health and Environmental Pollution Control.

11. The Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport): Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports and Highways.

12. The Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Food): Food, Price Control and Census.

* 13. The Hon. Thiru V. V. SWAMINATHAN (Minister for Handlooms): Handlooms and Textiles.

14. The Hon. Thiru R. SOUNDARARAJAN (Minister for Local Administration): Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

* 15. The Hon. Thiru T. VEERASAMY (Minister for Commercial Taxes): Commercial Taxes.

* 16. The Hon. Thiru N. NALLUSAMY (Minister for Housing): Housing, Slum Clearance Board. Town-Planning and Accommodation Control.

* 17. The Hon. Thiru ANOOR P. K. JAGADEESAN (Minister for Rural Industries): Rural Industries including Village, Cottage and Small Industries.

* 18. The Hon. Thiru T. RAMASAMY (Minister for Rehabilitation and Employment): Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.



* 19. The Hon. Thiru A. ARUNACHALAM (Minister for Adi-Dravidar Welfare): Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

20. The Hon. Thiru M. R. GOVENDAN (Minister for Backward Classes): Backward Classes and Fisheries.

21. The Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare and Nutritious Meals): Nutritious Meals, Social Welfare including Women and Children Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration.

* 22. The Hon. Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY (Minister for Khadi): Khadi, Bhoodan and Gramdhan.

23. The Hon. Thiru Y. S. M. YUSUF (Minister for Public Works): Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

24. The Hon. Thiru K. K. S. S. R. RAMACHANDRAN (Minister for Co-operation): Co-operation.

---

* Sworn-in on 3rd March 1985.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### †பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### †பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்ரமணியன்.

### ††மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு.
திரு. செ. செம்மலை.
திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்.
திரு. மு. இராமநாதன்.
திரு. வே. இரா. ஜெயராமன்.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணை செயலாளர்கள்.

திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்கள்.

திரு. கா. சீனிவாசன், பி.எஸ்சி.
திரு. கு. அ. சீனிவாசன், பி.ஏ.

## சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.

திரு. பொ. பாலகிருஷ்ணன், பி.காம்.

திரு. பெ. ச. கனகசபாபதி, பி.எ., பி.எல்.

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.

திரு. வ. சா. ஜான், பி.ஏ.

திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.

## எஸ்டேட் அலுவலர்கள்.

திரு. கே. தியாகராஜன், பி.எ., பி.எல்.

திரு. கேசவராம், பி.ஏ.

## பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. பி. கோதண்டராமன்.

## துணை செயலாளர் (பதிப்பாளர்).

திரு. ஜி. எஸ். அனந்த நாராயணன். பி.லிட்.

## தலைமை நிருபர்.

திரு. வை. இராமச்சந்திரன். எம்.ஏ., எல்.எல்.பி.

---

† 27—2—85 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

†† 11—3—85 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 1. அப்துல் லதீப், திரு. ஆ. கா. அ. | திருவல்லிக்கேணி |
| 2. அப்துல் மஜீத், திரு. எச். | வாணியம்பாடி |
| 3. அரங்கநாயகம், திரு. செ. | தொண்டாமுத்தூர் |
| 4. அரிக்குமார், திரு. இரா. | பெரணமல்லூர் |
| 5. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 6. அருணாசலம், திரு. எ. | வராகூர் (செ.வ.) |
| 7. அன்பழகன், திரு. க. | பார்க் டவுன் |
| 8. அன்பழகன், திரு. கே. | ஓசூர் |
| 9. அன்பழகன், திரு. கி. | நாட்றாம்பள்ளி |
| 10. அன்பழகன், திரு. பொ. | இளையான்குடி |
| 11. ஆண்டி அம்பலம், திரு. பெ. | நத்தம் |
| 12. ஆபிரகாம் என்கிற தில்லை காந்தி | ஆண்டிமடம் |
| 13. ஆபிரகாம், திரு. ம. | ஆலந்தூர் |
| 14. ஆறுமுகம், திரு. அ. | வந்தவாசி |
| 15. ஆறுமுகம், திரு. எச். ஜி. | பென்னாகரம் |
| 16. ஆறுமுகம், திரு. ஆர். எஸ். | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 17. ஆறுமுகம், திரு. எ. எஸ். எ. | விருதுநகர் |
| 18. ஆறுமுகம், திரு. செ. | மதுராந்தகம் |
| 19. ஆறுமுகம், திரு. சேலம் மு. | சேலம்-2. |
| 20. ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | பூந்தமல்லி |
| 21. ஆனந்தன், திரு. மு. | ஜோலார்பேட்டை |
| 22. இரகுபதி, திரு. கோ. | காட்பாடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 23. இரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 24. இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 25. இரத்தினவேலு, திரு. சே. | முசிறி |
| 26. இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செ.வ.) |
| 27. இராசமாணிக்கம், திரு. எல்ல. | தாராபுரம் |
| 28. இராசரத்தினம், திரு. எப். எம். | கொளச்சல் |
| 29. இராசரத்தினம் என்கிற மணி, திரு. எம். | விழுப்புரம் |
| 30. இராசாங்கம், திரு. மு. | திருவிடைமருதூர் |
| 31. இராசாம்பாள், திருமதி த. | தலைவாசல் (செ.வ.) |
| 32. இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 33. இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 34. இராசு, திரு. வி. கே. | அரக்கோணம் (செ.வ.) |
| 35. இராசேந்திரன், திரு. எஸ். என். | காரைக்குடி |
| 36. இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37. இராமச்சந்திரன், திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர் |
| 38. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | [illegible] |
| 39. இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 40. இராமச்சந்திரன், திரு. சோ. மா. | அண்ணாநகர் |
| 41. இராமச்சந்திரன், திரு. ப. ந. | பட்டுக்கோட்டை |
| 42. இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 43. இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 44. இராமநாதன், திரு. மு. | கோயம்புத்தூர் மேற்கு |
| 45. இராமலிங்கம், டாக்டர் கே. பி. | ராசிபுரம் |
| 46. இளங்கோவன், திரு. ஈ. வே. கி. ச. | சத்தியமங்கலம் |
| 47. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 48. உச்சி, திரு. கே. | கடலூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 49. உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 50. எத்திராசன், திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 51. கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52. கதிர்வேலு, திரு. மா. | ராணிப்பேட்டை |
| 53. கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54. கந்தசாமி, திரு. பெ. | பொங்கலூர் |
| 55. கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 56. கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 57. காளிமுத்து, டாக்டர் கா. | மதுரை கிழக்கு |
| 58. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 59. கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. | அணைக்கட்டு |
| 60. கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. | கும்பகோணம் |
| 61. கிருஷ்ணராஜ், திரு. ஜி | சேலம்-1 |
| 62. குப்புசாமி, திரு. கு. | ஒட்டன்சத்திரம் |
| 63. குமர குருபர ராமநாதன், திரு. ச | விளாத்திகுளம் |
| 64. குமரி அனந்தன், திரு. | ராதாபுரம் |
| 65. குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 66. குருசாமி என்கிற அண்ணாதாசன், திரு. எம். | திருவாம்பூர் |
| 67. கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 68. கோவிந்தசாமி, திரு. ஆர். | குடியாத்தம் |
| 69. கோவிந்தசாமி, திரு. ச. | எடப்பாடி |
| 70. கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 71. சங்கரலிங்கம், திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ. வ.) |
| 72. சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 73. சண்முகம், திரு. என். | சோளிங்கர் |
| 74. சண்முகம், திரு. ப. உ. | மேல் மலையனூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 75. சண்முகையா பாண்டியன், திரு. | ஆலங்குளம் |
| 76. சந்திரசேகரன், திரு. ஆ. | சோழவந்தான் |
| 77. சந்திரசேகர், திரு. மு. | ஓமலூர் |
| 78. சம்சுல் ஆலம், திரு. வி. எஸ். டி. | பாளையங்கோட்டை |
| 79. சமரசம், டாக்டர் கோ. | காவேரிப்பட்டினம் |
| 80. சரோஜா, திருமதி இரா. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 81. சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் (செ.வ.) |
| 82. சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 83. சிந்தன், திரு. வி. பி. | வில்லிவாக்கம் |
| 84. சிவக்குமார், திரு. ஆ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 85. சிவக்குமார், திரு. எம். | குன்னூர் (செ.வ.) |
| 86. சிவஞானம், திரு. என். | திருவோணம் |
| 87. சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 88. சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 89. சிவராஜ், திரு. க. | ரிஷிவந்தியம் |
| 90. சின்னக்குழந்தை, திரு. மு. | ஆரணி |
| 91. சின்னச்சாமி, திரு. கா. | தர்மபுரி |
| 92. சின்னசாமி, திரு. வே. கு. | பவானிசாகர் |
| 93. சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 94. சின்னராசு, திரு. மா. | மேட்டுப்பாளையம் |
| 95. சுந்தரதாஸ், திரு. மா. | விளவங்கோடு |
| 96. சுப்புராயர், திரு. சி. | கம்பம் |
| 97. சுப்பராயன், திரு. கு. | திருப்பூர் |
| 98. சுப்பிரமணிய ஆதித்தன் என்கிற சுப்பிரமணியன், திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 99. சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 100. சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 101. சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 102. செங்காளியப்பன், திரு. ஆர். | சிங்காநல்லூர் |
| 103. செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 104. செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர்மலை |
| 105. செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 106. செல்லமுத்து, திரு. மொ. | திருவாரூர் (செ.வ.) |
| 107. செல்லப்பா, திரு. வி. கோ. | கடலூர் |
| 108. செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 109. சேகர் என்கிற குலசேகரன், திரு. கே. பி. | பொன்னேரி (செ.வ.) |
| 110. சொர்ணலிங்கம், திரு. கா. | திருவாடனை |
| 111. சோலைராசு, திரு. க. | மருங்காபுரி |
| 112. சைதை துரைசாமி, திரு. சா. | சைதாப்பேட்டை |
| 113. சௌந்திரராசன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 114. சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராயநகர் |
| 115. ஞானசுந்தரம், திரு. சா. | மன்னார்குடி |
| 116. டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 117. தங்கமணி, திரு. மு. | மாயூரம் |
| 118. தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 119. தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 120. தங்கராசு, திரு. செ. | மங்கலூர் (செ.வ.) |
| 121. தங்கவேல்ராஜ், திரு. ப. ம. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 122. தங்கவேலு, திரு. வி. | வால்பாறை (செ.வ.) |
| 123. தமிழ்மணி, திரு. | திருப்போரூர், (செ.வ.) |
| 124. தமிழரசன், திரு. கு. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 125. தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 126. தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 127. தியாகராசன், திரு. ர. | விருத்தாசலம் |
| 128. திருஞானம், திரு. பி. ஆர் | எற்காடு (ஆ.வ.ர.) |
| 129. திருநாவுக்கரசு, திரு. எஸ் | அறந்தாங்கி |
| 130. திருமலைசாமிக் கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை |
| 131. தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மோரப்பூர் |
| 132. தீர்த்தராமன், திரு. ப. | பாலக்கோடு |
| 133. துரை அன்பரசன் என்கிற இராமலிங்கம், திரு. | நெல்லிக்குப்பம் |
| 134. துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர் |
| 135. துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு |
| 136. துரைராசு, திரு. எஸ். பி. | காரைக்குடி |
| 137. துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 138. தெய்வநாயகம், திரு. எ. | மதுரை சென்ட்ரல் |
| 139. தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 140. நடராசன், திரு. ஆ. | பேரூர் |
| 141. நரசிம்ம பல்லவன், திரு. க. | உத்திரமேரூர் |
| 142. நரசிம்மன், திரு. பூ. மு | பள்ளிப்பட்டு |
| 143. நல்லமுத்து, டாக்டர் க | பெரம்பலூர் (செ.வ.) |
| 144. நல்லுசாமி, திரு. என். | திருச்சிராப்பள்ளி-2. |
| 145. நாச்சிமுத்து, திரு கே. பி. | மேட்டூர் |
| 146. நாராயனன், திரு. எஸ். | திருநெல்வேலி |
| 147. நாராயணன், திரு. பு. கோ. | பவானி |
| 148. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர் |
| 149 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 150. பரமசிவம், திரு. பா. கு. | பல்லடம் |
| 151. பரிதி இளம்வழுதி, திரு. | பெரம்பூர் |
| 152 பழனி, திரு. த. | ஆற்காடு |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 153. பழனிச்சாமி, திரு. கா. செ. | காங்கேயம் |
| 154. பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 155. பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 156. பாண்டுரங்கன், திரு. மு. | கலசபாக்கம் |
| 157. பாப்பா சுப்பிரமணியன், திரு | குத்தாலம் |
| 158. பாரதி, திரு. ஜி. கே. ஜெ. | திருவொற்றியூர் |
| 159. பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 160. பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 161. பாலகிருஷ்ணன், திரு. வ. | சிவகாசி |
| 162. பாலசந்திரன், திரு. வை. | பத்மநாபபுரம் |
| 163. பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 164. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 165. பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 166. பாலன், திரு. சு. | எழும்பூர் |
| 167. பாலாஜி, திரு. கே. | காஞ்சிபுரம் |
| 168. பாலுச்சாமி, திரு. எ. | பரமக்குடி (செ.வ.) |
| 169. பாலுசாமி, திரு. அ. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 170 பிச்சை, திரு. மு. | அருப்புக்கோட்டை |
| 171 பிரணவநாதன், திரு. அ. | கடலாடி |
| 172 பிரேம்குமார், திரு. ஆ | திண்டுக்கல் |
| 173. புருசோத்தமன், திரு. எஸ். | அரியலூர் |
| 174. புஷ்பராசு, திரு. த. | திருமயம் |
| 175. பெரியசாமி, திரு. அ. | தாராபுரம் (செ.வ.) |
| 176. பெரியசாமி, திரு. ஈ. | தொட்டியம் |
| 177. பெருமாள், திரு. தெ. | கடையநல்லூர் |
| 178. பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
| --- | --- |
| 179. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | பழனி (செ.வ.) |
| 180. பொன்னுசாமி, டாக்டர் அ. | பெருந்துறை |
| 181. பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம் |
| 182. பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 183. மணவாளன், திரு. | திருப்பத்தூர் |
| 184. மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ. வ) |
| 185. மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 186. மனோகரன், திரு. நாஞ்சில் கி. | புரசைவாக்கம் |
| 187. மனோகரன், திரு. தி. நா. கோ. அ. | திருநாவலூர் |
| 188. மாசிலாமணி டாக்டர் ந, | ஜெயங்கொண்டான் |
| 189. மாதவன், திரு. செ. | திருப்பத்தூர் |
| 190. மாதையன், திரு. யு. பி. | அந்தியூர் (செ.வ.) |
| 191. மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ. வ) |
| 192. மாரிமுத்து, திரு. மு. | திருப்பரங்குன்றம் |
| 193. மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம் |
| 194. முகம்மது கனி, திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 195. முகம்மது சலீம், டாக்டர் த. | பெரியகுளம் |
| 196. முசிறிபுத்தன், திரு. பி. | குளித்தலை |
| 197. முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 198. முத்துராமலிங்கம், திரு. பி. கே. எம். | உசிலம்பட்டி |
| 199. முத்துராமலிங்கம், திரு. பொன். | மதுரை மேற்கு |
| 200. முத்துவேல், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 201. முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 202. முருகன், திரு. கி. | செய்யாறு |
| 203. முருகானந்தம், திரு. டி. என். | செஞ்சி |
| 204. முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 205. யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
| --- | --- |
| 206. ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 207. ரவீந்திரன், திரு. ஏ. எஸ். | திருவண்ணாமலை |
| 208. ராமஜெயம், திரு. ம. நா. | வானூர் (செ. வ) |
| 209. ராமன், திரு. சீ. | இராஜபாளையம் (செ.வ.) |
| 210. ராஜாபாபு, திரு. ஜெ. | பேரூர் |
| 211. ரெங்கசாமி, திரு. ஆர். | கோவில்பட்டி |
| 212. ரெத்தினராஜ், திரு. எஸ். | நாகர்கோவில் |
| 213. லட்சுமி, திருமதி பி. | அவினாசி (செ. வ.) |
| 214. வஜ்ஜிரவேலு, திரு. எ. | தண்டராம்பட்டு |
| 215. வடிவேல், திரு. கு. | கரூர் |
| 216. வளர்மதி, திருமதி பா. | மயிலாப்பூர் |
| 217. விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 218. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி. ப. | வீரபாண்டி |
| 219. வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 220. வீரய்யன், திரு. கோ. | நாகப்பட்டினம் |
| 221. வீராசாமி, திரு. தா. | ஒரத்தநாடு |
| 222. வெங்கட்ரமணன், திரு டி. ஆர் | தென்காசி |
| 223. வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 224. வெங்கடாசலம், திரு. அ. | ஆலங்குடி |
| 225. வெங்கடாசலம், திரு. இ. | லால்குடி |
| 226. வெங்கடாசலம், திரு. டி. எம். | பர்கூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 227. வேணுகோபால், திரு. எஸ். | டாக்டர் ராதாகிருஷ்ண நகர் |
| 228. வேணுகோபால், திரு. கே. வி. | தள்ளி |
| 229. ஜான் வின்செண்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 230. ஜகதீசன், திரு. ஆரூர் பு. கோ. | செங்கல்பட்டு |
| 231. ஜெகதீசன், திரு. சு. | அரவக்குறிச்சி |
| 232. ஜெயச்சந்திரன், திரு. சா. | காட்டுமன்னார்கோவில் (செ. வ) |
| 233. ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| | நியமன உறுப்பினர். |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.**

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
3. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்—அமைச்சர்.
4. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1985, மார்ச் 13, புதன்கிழமை.**

**மாசி 30, ரக்தாட்சி, திருவள்ளுவர் ஆண்டு-2016.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினிதே அறம்."

முகத்தால் விரும்பி இனிமையுடன் நோக்கி உள்ளம் கலந்த இன்சொற்களைக் கூறும் தன்மையில் உள்ளதே அறமாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று வினாக்கள்-விடைகள் இல்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. கவன ஈர்ப்பு.

**கச்சா முந்திரி கிடைக்காததால் கன்னியாகுமரி மாவட்ட முந்திரி ஆலைத் தொழிலாளர்கள் பாதிக்கப்பெறுவது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேவையான கச்சா முந்திரி இல்லாத காரணத்தினால், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து முந்திரி ஆலைகளும் மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் படும் இன்னல்

குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முந்திரி உற்பத்தியாளர்கள் தமிழ்நாட்டில் தற்சமயம் உரிமம் பெற்ற முந்திரிப் பருப்பு தயாரிக்கும் ஆலைகள் சுமார் 175 இருக்கின்றன என்று தெரிவித்துள்ளனர். இவ்வாலைகள் இறக்குமதி மூலமாக கிடைக்கும் கச்சா முந்திரியையும் தமிழகம், கேரளம் மற்றும் இதர மாநிலங்களில் பயிராகும் கச்சா முந்திரிகளையும் கொண்டு வருடம் முழுவதும் இயங்கிக் கொண்டிருந்தன. இந்திய முந்திரி கார்ப்பரேஷன் மூலமாகத்தான் முந்திரி இறக்குமதி செய்யப்பட வேண்டும் என்பதாலும், கேரள மாநில அரசு அயல் மாநிலங்கள் முந்திரி வாங்குவதையும் விநியோகத்தையும் தடை செய்து இருப்பதாலும் தமிழகத்து முந்திரி ஆலைகளுக்கு விநியோகிக்கப்படும் கச்சா முந்திரி வரத்து தடைப்பட்டதால் தமிழகத்திலுள்ள பல முந்திரி ஆலைகள் இயங்கவில்லை. இதனால், ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் உள்ளனர்.

தமிழகத்தில் முந்திரி விளையும் நிலப்பரப்பு சுமார் 23,000 ஹெக்டேர்கள். இதில் உற்பத்தியாகும் முந்திரியின் அளவு ஆண்டுக்கு 10,000 டன்கள் ஆகும். இதில் வனத்தோட்ட நிறுவனம் உற்பத்தி செய்வது 1,500 டன்கள். இது, மொத்த உற்பத்தியில் 17 சதவீதம் ஆகும். இக் குறையைத் தவிர அண்மைக் காலங்களில் முந்திரி இறக்குமதி அளவும் குறைந்துள்ளது. மேற்கூறிய 175 ஆலைகளில் 150 ஆலைகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளன. இவ்வாலைகளின் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 1,24,000 டன்கள். ஆனால், தமிழகத்தில் தயாராகும் முந்திரியின் அளவு 10,000 டன்கள் மட்டுமே. இறக்குமதி மூலம் கிடைப்பது 4,000 டன்கள். ஆக மொத்தம் 14,000 டன்கள் முந்திரி மட்டுமே கிடைக்கிறது. 1,10,000 டன்கள் ஒவ்வொரு ஆண்டும் மூலப்பொருள் தட்டுப்பாடு ஏற்படுகிறது.



இக்குறைபாடுகளைக் களையும் பொருட்டு மைய அரசை இம்மாநிலத்திற்கு இறக்குமதி செய்யும் முந்திரியின் ஒதுக்கீட்டு அளவை அதிகரிக்கவும், கேரள மாநிலம் விதித்துள்ள தடையை அகற்ற தக்க ஏற்பாடு செய்யுமாறும் கோருவதன் மூலம் தமிழக ஆலைகளுக்கு முந்திரி வரத்தை அதிகரிக்கும்படி தக்க நடவடிக்கை எடுக்குமாறு மைய அரசை இவ்வரசு வலியுறுத்தியுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் அதிகமான முந்திரி ஆலைகள் உள்ளதால், எர்ணாகுளத்தில் அமைந்துள்ள இந்திய முந்திரி நிறுவனத்தில் தமிழ்நாட்டை ஒரு பிரதிநிதியாக சேர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் மைய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. மைய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 175-க்கும் அதிகமான முந்திரி ஆலைகளில் வேலை செய்து வந்த 50,000க்கும் அதிகமான தொழிலாளர்கள், கச்சா முந்திரி கிடைக்காத காரணத்தினால் வேலையின்றி கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதால் மத்திய அரசை அணுகி அதிகமாகக் கச்சா முந்திரியை வெளிநாட்டிலிருந்து வரவழைப்பதற்கும், கோவா, ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களிலிருந்தும், தமிழகத்திலிருந்தும் கொள்முதல் செய்து ஆலைகளுக்கு விநியோகம் செய்வதற்கும் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கும், அதேபோன்று தமிழ்நாடு வனத்துறை உற்பத்தி செய்யும் கச்சா முந்திரியைத் தற்சமயம் வெளிச்சந்தையில் விற்பதைத் தவிர்த்து, அதை வாங்கி ஆலைகளுக்கு விற்பதற்கும், தொழிலாளர்களின் எண்ணிக்கை விகிதாச்சாரப்படி முறைப்படுத்தி விநியோகம் செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதற்காக முந்திரி வளர்ச்சிக் கழகம் ஒன்றை, கேரளாவில் இருப்பதைப்போலத் தமிழகத்திலேயும் அமைப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. இந்திய முந்திரி கார்ப்பரேஷன் மூலமாக நமக்குத் தேவையான அளவிற்கு முந்திரி இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால், இப்பொழுது ஆண்டு ஒன்றுக்கு 4,000 டன் மட்டுமே நமக்கு இறக்குமதி ஆகிறது. ஆகவேதான், தமிழ்நாட்டில் அதிகமான முந்திரி ஆலைகள் இருப்பதால்,

எர்ணாகுளத்தில் அமைந்திருக்கிற இந்திய முந்திரி நிறுவனத்தில் தமிழ்நாட்டை ஒரு பிரதிநிதியாகச் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மைய அரசுக்கு நாம் கடிதம் எழுதியிருக்கிறோம். அது மட்டுமல்ல, தமிழகத்தைப் பொறுத்தவரையில், இப்பொழுது 10,000 டன்கள் முந்திரிதான் உற்பத்தியாகிறது. உற்பத்தியாகின்ற அந்தக் கச்சா முந்திரியை நாம் பொது ஏலத்தின் மூலம் விட்டுக்கொண்டிருக்கிறோம். பொது ஏலத்தில் விடுவதை நிறுத்தி, நேரடியாகக் கொள்முதல் செய்யும்பொழுது, பகிரங்கமாக ஏலம் விடக்கூடாது என்று தடையை நாம் விதித்தால் அது கேரள அரசு விதித்துள்ள தடையைப் போன்றதாக ஆகிவிடும். அதனால், கேரள அரசு தடை விதித்துள்ளதை ரத்து செய்ய வேண்டுமென்று நாம் கோருவதற்கான உரிமை இல்லாமற்போய்விடும். ஆகவே, நமக்குத் தேவையான முந்திரியை வாங்குவதற்கு மைய அரசுக்குத் தொடர்ந்து கடிதங்களை எழுதிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 50,000 தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருப்பதால் அந்தத் தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கவோ அல்லது அவர்களுக்கு மாற்றுத் தொழிலுக்கு ஏற்பாடு செய்யவோ அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, நாம் மைய அரசுக்குக் கடிதம் ஒன்றை 29—9—1984 அன்று எழுதியிருக்கிறோம். தொடர்ந்து, 15-11-1984, 21-12-1984, 24-1-1985 ஆகிய தேதிகளில் நினைவூட்டுக் கடிதங்களை எழுதிக்கொண்டிருக்கிறோம். அப்படி எழுதுவதால், தமிழகத்திற்கு, இறக்குமதி செய்யும் முந்திரியில் ஒதுக்கீட்டின் அளவை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்; கேரளத்தில் விதித்திருக்கின்ற தடையை அகற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்; எர்ணாகுளத்தில் அமைந்துள்ள இந்திய முந்திரி நிறுவனத்தில் தமிழ்நாட்டை ஒரு பிரதிநிதியாகச் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதன் மூலம் நமக்கு முன்பு கிடைத்ததைப் போல, ஏறக்குறைய 1,24,000 டன்கள் அளவிற்கு முந்திரி நமக்கு உற்பத்திக்குப் போதுமான அளவிற்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. மத்திய அரசினுடைய பதிலை



எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். பதில் வந்ததற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை நாம் பரிசீலிக்கலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் இறக்குமதிக் கொள்கை காரணமாகத்தான் இந்த விளைவு ஏற்பட்டிருக்கின்றது என்ற காரணத்தால் தொழில் இல்லாதிருக்கும் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும் வரை அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு unemployment relief or free ration வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அதற்காக மத்திய அரசை அணுகி தேவையான நிதியினை வாங்கி தொழிலாளர்களுக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு தருவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல ஆலோசனையை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலம் தடை விதித்துள்ளது. இந்தத் தடையைப் போக்க மத்திய அரசிடம் வேண்டுகோள் நாம் விடுத்தாலும் கோர்ட் மூலமாகச் சென்று இந்தத் தடையை நீக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை பரிசீலனை செய்ய ஏற்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2. அரசினர் சட்ட முன்வடிவு.

### கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

[1985 மார்ச் 13

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். அதற்குரிய காரணத்தை மட்டும் இப்போது சொல்லி அமர்ந்து விடுகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவு இன்னொரு ஆர்டினன்ஸை ரிப்பீல் பண்ணுவதற்காக வந்திருக்கின்றது. ஏற்கனவே சட்டசபை கூடி அதை ரிப்பீல் பண்ணுவதற்கு முடியவில்லை. அப்போது வந்தது மீண்டும் இப்போது வந்திருந்தாலும் அதனை நியாயம் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இந்தச் சட்டத்திலே கவர்னர் சொல்வதை கவர்னரே மறுக்கிறார்.

because it expires on the 9th September 1984.

9 ஆம் தேதிக்கு மேலேதான் ஆர்டினன்ஸ் தேவை என்று அதிலே சொல்கிறார். அவ்வாறு க்ளியராக சொன்ன கவர்னர் ஆர்டினன்ஸிலே "

"The Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Third Amendment Ordinance, 1984 (Tamil Nadu Ordinance 18 of 1984) was promulgated by the Governor on the 17th November 1984 for continuing the extension of the term of the Special Officers for a period of one year beyond the 9th September 1984.

9-வது மாதம் 9-வது தேதிக்குப் பிறகு சட்டம் இல்லாததால் தான் ஆர்டினன்ஸ் வருகின்றது; அதனால் ஆர்டினன்ஸ் அவசியம் தேவை என்று சொல்கிற அதே கவர்னர் அதாவது 9 ஆம் தேதிக்கு மேலேதான் ஆர்டினன்ஸ் தேவை என்று சொல்கிற அதே கவர்னர் பிறகு என்ன சொல்கிறார்? "it shall be deemed to have come into force on the 6th day of September 1984. என்று சொல்கிறார். இப்படி 9 ஆம் தேதிக்குப் பிறகுதான் ஆர்டினன்ஸ் தேவை என்று சொல்கிற அதே கவர்னர் 6 ஆம் தேதி கொண்டு வருகிறார். இப்படி ஆர்டினன்ஸிலே முரண்பாடு; சட்ட அறிமுகத்திலே முரண்பாடு என்று பல முரண்பாடுகள் இருக்கின்றன. 9 ஆம் தேதிக்குப் பிறகுதான் வரும் என்று சொன்ன அதே கவர்னர் 6 ஆம் தேதி அந்த சட்டத்தைக் கொண்டு வருகிறார் என்றால் அது முரண்பாடு இல்லையா? எனவே இப்படிப்பட்ட ஆர்டினன்ஸை எதிர்த்து நிராகரிப்புத் தீர்மானம் தந்திருக்கிறேன். அது டேபிளிலே வைக்கப்பட்டிருக்கின்றது. ஆர்டினன்ஸ் தப்பு; பில் தப்பு....



1985 மார்ச் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிமுக நிலையில் விவரமாகப் பேசவேண்டியதில்லை. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம்: ஆகவே ஆர்டினன்ஸும் தவறாக இருந்து, பில்லும் தவறாக இருப்பதால் இந்த பில்லை நான் எதிர்ப்பதோடு இதனை வாபஸ் வாங்குவதுதான் கௌரவம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த சட்டத்தை அறிமுகம் செய்வதை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கடுமையாக எதிர்க்கிறேன். ஏற்கெனவே சென்ற செப்டம்பர் மாதத்தில் இதைப்போன்றதொரு சட்டத்தை அந்த நேரத்தில் புதிதாக பதவியேற்ற அமைச்சர் அவர்கள் கொண்டுவந்தார்கள். இது சம்பந்தமான விவரங்களை எல்லாம் காரண காரிய விளக்கத்தில் கூறியிருக்கிறார்கள். என்னுடைய எந்த நோக்கத்திலே எதிர்ப்பு சொல்ல விரும்புகிறேன் என்றால் ஏற்கெனவே 1983 ஆம் வருஷத்தில் இந்த கூட்டுறவுச் சட்டத்தை இந்த அவையிலே நிறைவேற்றியபோது அன்று அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. சி. பொன்னையன் அவர்கள் இந்த அவைக்கு ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள். ஒரு மாத காலத்திற்குள்ளே செலக்ட் கமிட்டியை கன்சல்ட் செய்து, இதற்கான ரூல்ஸ் எல்லாம் கொண்டுவருவேன்; 6 மாதத்தில் தேர்தல் நடத்தப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை என்றால், 1983-ம் போய், 1984-ம் போய், 1985-வது வருஷத்திற்கு நாம் வந்திருக்கும்போது மீண்டும் அமைச்சர் ஒரு வருஷ காலத்திற்கு தனி அதிகாரிகள் காலத்தை நீட்டிக்கக் கூடிய முறையில் ஒரு சட்டத்தை இங்கே கொண்டு வந்திருப்பது மிகவும் துரதிர்ஷ்டம் என்று கூற விரும்புகிறேன்.

இன்று கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில், அவற்றின் நிலைமைகளை நாம் பார்க்கிறபோது, தனி அதிகாரிகளுடைய ஆட்சி நடந்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில், அவர்களுடைய காட்டு தர்பார் நடந்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில், மிக விரைவிலே தேர்தலை நடத்துவதற்குப் பதிலாக மீண்டும் ஓராண்டு காலத்திற்கு அவர்களுடைய பதவியை நீட்டிப்பது எந்த வகையிலும், சரியல்ல. ஆகையால் இந்தச்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 மார்ச் 13

சட்ட முன்வடிவை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்; அமைச்சர் இந்த சட்ட முன்வடிவை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே தேர்தல் நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமே தவிர, மேலும் ஒரு வருஷத்திற்கு தனி அதிகாரிகள் காட்டாட்சி தமிழ்நாட்டில் நடக்க ஒரு சட்டத்தைக் கொண்டுவருவது சரியல்ல. ஆகையால் இந்தச் சட்டத்தை வாபஸ் பெற்று, விரைவிலே தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 3. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி).

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கண்ணியமிக்க மாமன்றத்தில் இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கே வந்து பேசுவதற்கு வாய்ப்பு தந்திருக்கிற என்னுடைய இராசிபுரம் தொகுதி வாழ் பொதுமக்களுக்கு என்னுடைய முதற்கண் நன்றியைச் சொல்லி, அதற்கு அடித்தளம் அமைந்திட்ட என்னுடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை வணங்கி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வழிமொழிந்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



1985 மார்ச் 13] [டாக்டர் கே. பி. இராமலிங்கம்]

இன்றைக்குத் தரப்பட்டிருக்கிற ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ள அனைத்து சாரத்துக்களும் வருகிற மார்ச் 26-ந்தேதி தமிழ்த் தாயின் திருமுடியிலே, தமிழ் தாயின் மணி முடியிலே மீண்டும் சூட்டப்படப் போகிற ஒரு நல்முத்தாக வரப்போகிற பட்ஜெட். அதற்கு ஒரு முன்னோடியாக விளங்குகிற முத்தாக இருக்கிற இந்த உரை ஒரு முத்துச்சிப்பியாக விளங்குகிறது. இந்த முத்துச சிப்பியை உடைத்துப் பார்த்தால்தான் வருகிற பட்ஜெட் நிலைமை உங்களுக்குப் புரியும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாமன்றத்திலே பேசிய சிலர் இந்த உரையை வேறு வகையிலே விமர்சித்தார்கள். அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாகத்தான் தெரியும். அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? புனிதத் தலைவர், புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்த நாளிலேயிருந்து இன்றைக்கு வரை பல்வேறு விதத்திலே, பல்வேறுதரப்பட்ட விமர்சனங்களை சந்தித்துக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள். அந்த விமர்சனங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நாட்டு மக்களுடைய வாக்குகளைப் பெற்று, மீண்டும் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் இந்த நாட்டு மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ய முனைப்பான திட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றுகிறார் என்பதை இந்த நாட்டு மக்கள் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இந்தக் காரணம் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கோ, அல்லது எதிர்க்கட்சியில் இருக்கிற நண்பர்களுக்கோ தெரிந்து இருக்க வேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கலாம். அதற்கு என்ன காரணம் என்ன என்பது எனக்குப் புரியவில்லை. எதிர்க் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள், எதிரிக் கட்சியைப் போல பேசினார்கள். அதிலே ஒருவர் பலகாலம் நண்பர்களாக இருந்தவர்; நடந்து முடிந்த தேர்தலிலே எதிர்க்கட்சி வரிசையிலே வந்தவர், அவர்கள் பேசினார்கள். நடக்க முடியாதவனுக்குத்தான் நடை வண்டி தருவார்கள், நடக்க முயற்சி செய்யுங்கள் என்று அவர்கள் ஒரு உவமையைச் சொன்னார்கள். நான் சொல்வதெல்லாம் 1977-க்கு முன் இருந்த ஆட்சிகள் எந்த நியாயமான அடிப்படைத் தேவைகளை இந்த நாட்டு மக்களுக்குச் செய்யவேண்டுமோ, அத்தத் தேவைகளை பூர்த்தி செய்யவேண்டுமோ, அதைச் செய்யாமல் விட்டுவிட்டார்கள். ஆனால் 1977-க்குப் பிறகு,

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1985 மார்ச் 13

புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலேதான் தமிழகம் என்ற குழந்தைக்குப் படிப்படியாக திட்டங்கள் என்ற வகையிலே, 'பேஸ்ட் புரோகிராம்' என்ற அடிப்படையிலே திட்டங்கள் போடப்பட்டு, இந்த நாட்டு மக்களுக்கு என்ன என்ன தேவைகளைச் செய்தால், அவர்களுடைய அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்ற முறையிலே படிப்படியாகத் திட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். முதலிலே குழந்தைகளுக்கு நடை வண்டிதான் தேவைப்படும். சாதாரண மக்களுக்கு அடிப்படைத் தேவைகளைச் செய்ததற்குப் பின்னாலேதான் அதுவும் 1977-க்குப் பின்னால் புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே தான் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். 1977-க்கு முன்னாலே நடக்க முடியாமல் இருந்த தமிழகம் என்ற குழந்தைக்கு முதலிலே அடிப்படைத் திட்டங்கள் என்ற நடைவண்டியைக் கொடுத்தபிறகுதான் அவர்கள் இப்போது நடக்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அடிப்படைத் திட்டங்கள் தான் இந்த நடைவண்டி. அந்த வேலையைத்தான் புரட்சித் தலைவர் அவர்கள் செய்துகொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த சாதாரண உண்மைகூட புரியாதவர்களுக்கு மற்றவைகளை என்னால் புரிய வைக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, இந்த அரசுக்கு கொள்கையில்லை என்று சொன்னார்கள். புரட்சித் தலைவருக்குக் கொள்கை கிடையாது என்றும், கொள்கையற்ற அரசு என்றும் சொன்னார்கள். இந்த அரசு கடந்த 7½ ஆண்டுக்காலமாக எந்தத் திட்டங்களையும் அமுல்படுத்தாமல் "விலாங்கு மீன் போல் வழுக்கிக்கொண்டே போகிறது" என்று சொன்னார்கள். அப்படிச் சொன்ன அந்த உறுப்பினர் வேண்டுமானால் இந்த மன்றத்திற்கு புதியவராக இருக்கலாம். ஆனால் உலகுக்கு அவர் புதியவர் அல்ல. அவர் என்ன வானத்திலேயிருந்து திடீரென்று இந்த மன்றத்திற்கு குதித்து வந்தாரா? அல்லது கானகத்திலேயிருந்து அவர்கள் குதித்து வந்தாரா? அல்லது ரஷ்யாவிலேயிருந்து நேரடியாக இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறாரா? என்று புரியவில்லை. காரணம் 7½ ஆண்டுக்காலம்—பழைய மாவாக இருந்தாலும்



1985 மார்ச் 13] [டாக்டர் கே. பி. இராமலிங்கம்]

நானும் அரைக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் எதுவும் செய்யவில்லை என்றார்கள். இந்த அரசு கொள்கையற்ற அரசு, திட்டங்கள் எதுவும் இல்லாத அரசு என்று சொன்ன காரணத்தால், நானும், இந்த அரசு நிறைவேற்றிய திட்டங்களைப் பற்றியும், கொள்கைகளைப் பற்றியும் இங்கே கோடிட்டுக் காட்ட வேண்டிய நிர்பந்தத்திலே நிற்கிறேன். சிலவற்றை நான் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

1977-க்குப் பிறகு புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலேதான் குடிசைகளுக்கு மின் விளக்கு அளிக்கும் திட்டங்களை அறிமுகப் படுத்தினார்கள், ஒவ்வொரு கிராமத்திற்கும் குடிநீர் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார்கள். வறட்சி ஏற்பட்ட சமயங்களில், அதைச் சமாளிக்கின்ற விதத்திலே பல்வேறு நிவாரண நடவடிக்கைகளை எடுத்தார்கள். கிராமங்களை நகரங்களோடு இணைக்கும் வகையிலே, தன்னிறைவு என்ற திட்டத்தைக்கொண்டு வந்து, 3 ஆண்டுக்காலம் பல்வேறு நலத்திட்டங்களை இந்த நாட்டிலே அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.

அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் வயது 55 என்று இருந்ததை, 58 ஆக உயர்த்தி, அவர்களுடைய சேவையை இந்த நாட்டுக்காக தக்கவகையில் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து மாவட்ட நிர்வாகங்களை செம்மைப்படுத்தியிருக்கிறார்கள், அதை ஊக்கப்படுத்தியிருக்கிறார்கள். தமிழுக்கு என்று தனியாக ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கினார்கள். தமிழுக்கு நாங்கள் தான் உண்மையான வாரிசு என்று சொல்லிக்கொண்டவர்கள் எல்லாம் எதுவும் செய்ய முடியவில்லை. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழுக்கு என்று தனியாக ஒரு பல்கலைக் கழகச் சட்டத்தை இதே மன்றத்திலே கொண்டு வந்து நிறைவேற்றி, புதிய பல்கலைக்கழகத்தை கொண்டு வந்தார்கள். எட்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய பேருந்துகளை கிராமப் புறங்களிலே விட்டு அவைகளை நகரங்களோடு இணைப்போம் என்று 1977-லே தேர்தல் அறிக்கையிலே சொன்ன அந்த வாக்குறுதியை புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றிக் காட்டினார்கள்.

(முற்பகல் 9-20)

முதியவர்களுக்கு உதவித் தொகையை உயர்த்திக் கொடுத்ததும் இந்த அரசு. அதைப் போல், ஏழை சிறு விவசாயிகளுக்கும், விவசாயக் கூலிகளுக்கும் இலவசமாக வேட்டியும் சேலையும் வழங்கியதும் இந்த அரசுதான். வேலை இல்லா பட்டதாரிகளுக்கு உதவித்தொகையை வழங்கியதும் புரட்சித் தலைவர் அரசுதான். பெண்களுக்குத் தனியாகப் பல்கலைக் கழகம் கண்டதும் இந்த அரசுதான். பாரே போற்றும், உலகம் வியக்கும் சத்துணவுத் திட்டம் கொண்டு வந்து இந்த நாட்டிலே நன்மதிப்பை பெற்றதும் இந்த அரசுதான். 6, 7 இடங்களில் பால் குளிரூட்டும் நிலையங்களை நிறுவியுள்ளதும் புரட்சித் தலைவர் அரசுதான். பல்லாயிரக்கணக்கான கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களை நிறுவி, வெண்மைப் புரட்சியைக் கண்டதும் இந்த அரசுதான். விவசாயிகளுக்குப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்ளும் யாரும், கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா கட்சி, விவசாயிகள் நலனைப் பாதுகாக்க உள்ளதே உயர்மட்டக் குழு, அது கூட பரிந்துரை செய்யாதபொழுது, மக்கள் பிரதிநிதிகளாகிய நாமெல்லாம்—நான் உட்பட—சொல்லாத ஒரு திட்டத்தைச் சிறு விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டாக வேண்டும், வழங்கப்படும் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இந்த நாட்டிலே முதன்முதலில் அருமையாக முடிவெடுத்திருக்கிறார். ஒன்றா, இரண்டா? இந்திய நாட்டிலே யாரும் செய்யத் துணியாத ஒரு மாபெரும் திட்டத்தை அமலாக்கத் துணிந்தது இந்த அரசே தவிர, வேறு எந்த அரசு என்று அவரைப் பார்த்து கேட்க விரும்புகிறேன். விவசாயிகளுக்கு ரூ. 200 கோடி கடனைத் தள்ளுபடி செய்தது இந்த புரட்சித் தலைவர் அரசுதான். குடும்பக் கார்டுதாரர்களுக்கு மாதத்திற்கு 20 கிலோ அரிசி நியாயவிலைக் கடைகளில் நியாயவிலையில் வழங்கப்படும் என்று அறிவித்தது இந்த அரசுதான். 3,000-க்கு மேற்பட்ட நியாய விலைக் கடைகளைத் துவங்கி கிராமப்புற மக்கள் நியாயமான விலையிலே பண்டங்கள் வாங்குவதற்கான வசதியை இந்த அரசுதான் செய்து கொடுத்திருக்கிறது.

அதைப் போல், தொழில் துறையிலே புகளூர் பேப்பர் ஆலையை நிறுவியதும் இந்த அரசுதான். திருத்தணியில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை நிறுவியதும் இந்த அரசுதான்





சென்னைக்குக் கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வர முயற்சி மேற்கொண்டு அதிலே ஓரளவு வெற்றி கண்டது புரட்சித் தலைவர் அரசுதான் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இன்றைக்குப் பாரத நாட்டின் இளைய வீரராக, எழுச்சி வீரராக விளங்கும் பிரதமர், இந்தியாவிலே தொழில் கல்வி முறையைக் கொண்டு வர வேண்டுமென்று ஆணித்தரமாக சொல்கிறார்களே, அந்த ஆணித்தரமான கருத்துக்களைத் தோற்றுவித்ததே தமிழகம்தான். அதுவும் புரட்சித் தலைவர் தான் இந்தியத் துணைக் கண்டத்திற்கு எடுத்துக் காட்டாக தமிழ் நாட்டிலே தொழில் கல்வித் திட்டத்தை விரைவாக அமல் படுத்தப் போகிறேன் என்று அறிவித்து அது இந்த நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அறிவித்து. அதை படிப்படியாகக் கொண்டு வரப்போவதாக அறிவித்தார்கள். இந்த ஆண்டு பட்ஜெட்டிலே அதற்கான முனைப்பான திட்டங்கள் வர இருக்கின்றன என்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே பக்கங்கள் 20 முதல் 23 வரை பிள்ளைகளுக்கு இலவசச் சீருடைகள், இலவசப் பாடப் புத்தகங்கள் போன்ற 15 திட்டங்களை இந்த அரசு அறிவித்திருக்கிறது. இதுபோன்ற பல்வேறு முனைப்பான மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களைத் தீட்டிய எங்கள் அரசைப் பார்த்துதான் இவர்கள் சொல்கிறார்கள், கொள்கை அற்ற அரசு என்று. இதுபோன்ற பல்வேறு முனைப்பான திட்டங்களைத் தீட்டிய அரசுதான் மீண்டும் எங்களை ஆளவேண்டுமென்று தமிழகமக்கள் புரட்சித் தலைவருக்கு மூன்றாம் முறையாக வாக்களித்து, அவரை அரியணையிலே ஏற்றி வைத்திருக்கிறார்கள். ஆனால், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனுதாபத்தால் எங்களை மக்கள் அரியணையில் ஏற்றி வைத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்; அதை நான் மறுக்கவில்லை. கிராமப்புற மக்களையும், ஏழை விவசாயிகளையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் மேம்படுத்த பாடுபடுகின்ற இந்த அரசைப் அகற்ற எதிர்க்கட்சிகள் முயற்சி செய்கின்றனவே, என்றென்றும் எதிர்க்கட்சிகள் இந்த அரசமீது குற்றச்சாட்டுகள் சொல்லி கேலி பேசி வருகின்றனவே. இது நியாயம்தானா? இப்படிப்பட்ட நல்ல அரசைப் பார்த்து குறை கூறுவது சரிதானா என்று மக்கள்

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1985 மார்ச் 13

எங்கள் மீது அனுதாபப்பட்டு நாங்கள் வெற்றி பெற வாக்களித்திருக்கிறார்கள். வேறு எந்த அனுதாபமும் கிடையாது. நல்ல திட்டங்களை நாட்டிற்குத் தந்திருக்கிற இந்த அரசைப் பார்த்து கேலி செய்கிறார்களே, இது நியாயமா, இப்படியெல்லாம் செய்யலாமா என்று அனுதாபப்பட்டுதான் எங்களை மீண்டும் இந்த ஆட்சிப் பீடத்திற்கு அனுப்பியிருக்கிறார்களே தவிர, வேறு எதுவும் இல்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் எங்கள் அரசைப் பார்த்து கொள்கையற்ற அரசு என்று அடிக்கடிச் சொல்கிற அந்த நண்பரைப் பார்த்து, அந்த மாமன்ற உறுப்பினரைப் பார்த்து எனக்கு சற்று சிரிப்புதான் வருகிறது. காரணம் அவர்கள் சார்ந்திருக்கிற இயக்கமும் அவர்களும் மாறுபட்ட கொள்கைகளை மாறுபட்ட எண்ணங்களைக் கொண்டவர்களா என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் திருப்பிச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அவர்கள் துணையுடன் மேற்கு வங்கத்தை ஆளுகிற மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்ன செய்துள்ளது? இங்கே பேசிய நண்பர் அவர்கள் தமிழ்நாட்டில் ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் தமிழ்நாட்டில் விவசாயிகள் ஜப்தி செய்யப்பட்டு சொல்லொணாத் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள் என்று சொன்னார்கள். நேற்றே நான் எழுந்து அவரைக் குறுக்கிட வேண்டும் என்று கருதினேன். கன்னிப் பேச்சு, ஆகவே விட்டு விட்டேன். எந்த இடத்திலாவது, எங்கேயாவது ஒரு விவசாயியின் சொத்துக்களை இந்த அரசு ஜப்தி செய்திருக்கிறதா? இந்த ஏழரை ஆண்டுக் காலத்தில் எங்கேயாவது அப்படி நடந்திருக்கிறதா? அப்படி அவர்கள் சுட்டிக்காட்டி, அதற்கான உதாரணத்தை சுட்டிக்காட்டிச் சொல்வார்களானால் அதற்கு நானே பொறுப்பேற்றுக்கொள்கிறேன். எங்கேயும் அதுபோன்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால் மேற்கு வங்கத்தில் என்ன நடந்திருக்கிறது என்றால் ரூ. 2,000-க்கு மேல் இருக்கிற கடனைத் திருப்பி வசூல் செய்வதற்கு காவல் துறையினரை அழைக்கலாம் என்று சட்டமே இயற்றுகிறார்கள். காவல் துறையை அழைக்கிறார்கள். அது எங்கே போய் முடிகிறது என்றால் இவர் சார்ந்திருக்கிற வலது கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இவர்கள் தோழமை பூண்டிருக்கிற மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் [illegible] என்னங்கள். காரணம் என்னவென்றால்,



1985 மார்ச் 13] [டாக்டர் கே. பி. இராமலிங்கம்]

200 ரூபாய் கடன் இருந்தால் போலீஸை அழைத்து வசூல் செய்வது, இதுதான் முறை என்று மேற்கு வங்க அரசு கருதுகிறது. மதிப்பிற்குரிய ஜோதிபாசு அரசு கருதுகிறது, கூறுகிறது. ஆனால் அவர்களோடு தோழமை பூண்டிருக்கிற வலது கம்யூனிஸ்ட் கட்சி என்ன சொல்கிறதென்றால் இரண்டாயிரம் ரூபாய்க்குக் கீழே இருப்பதை விட்டுவிடலாம். இரண்டாயிரம் ரூபாய்க்கு மேலே இருந்தால் அந்தத் தொகையை வசூல் செய்வதற்கு மட்டும் போலீஸை அழைக்கலாம் என்று கூறுகிறது. இவர்கள் எங்களைப்பார்த்து அராஜகம், போலீஸ் ராஜ்யம் என்று கூறுகிறார்கள். ஆனால், உண்மையிலேயே போலீஸை வைத்து ராஜ்யம் நடத்துவது இவர்களும் இவர்கள் தோழமை பூண்டிருக்கிற ஆட்சிகளே தவிர இந்த ஆட்சியோ அல்லது இன்று மத்தியில் ஆளுகிற காங்கிரஸ் ஆட்சியோ கிடையாது என்பதைத் தான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பொறுத்த வரையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இது வரையில் 200 கோடி ரூபாய் அளவிற்கு கடனை தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல. கடந்த 31-ம் தேதி வரை நிலுவையில் உள்ள கடன்கள் அத்தனைக்கும் உள்ள வட்டி தள்ளுபடி, அசலை செலுத்தினால் போதும் என்று அறிவித்தார்கள். இப்போது அந்த நாளையும் நீட்டித்திருக்கிறார்கள். இதைவிட பெரிய மகத்தான காரியங்களை நாட்டு மக்களுக்கு யார் செய்துவிடமுடியும்? நீங்கள் அந்தக் காலத்தில் உழவு மாடுகளை ஜப்தி செய்யவில்லையா? விவசாயிகளுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களைப் பார்த்துச் சொல்கிறேன். கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னால் நடந்ததை மறந்துவிட்டீர்களா? ஒரு விவசாயி எல்.டி. பாங்கில் கடன் வாங்கியிருந்தால் அவர் அந்தக் கடனைக் கட்டவில்லையென்றால் நிலத்தில் உழுகிறபோதே உழவு மாடுகளைப் பிடித்து வருகிற காட்சியை மறந்துவிட முடியுமா? அப்படி இன்று எங்கேயாவது நடக்கிறதா? கடனைத் திருப்பிக் கட்டுங்கள் என்று கூப்பாடு இருக்கலாம். ஆனால் அராஜகமோ அல்லது ஆதிக்க வெறியோ அல்லது அரசாங்கத்திற்கு இருக்கிற அதிகாரத்தை மக்களிடம் கொண்டுபோய், நம் கைக்கு யார் அதிகாரத்தைத் தந்தார்களோ அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்த மக்களையே வாட்டவேண்டும் என்ற உணர்வு இந்த அரசுக்கு என்றைக்கும் இருந்தது கிடையாது. (மணியடிக்கப்பெற்றது.)

அதேபோல் தொழிலாளர்களுக்காக வாதாடுகிற அந்த உறுப்பினர் இங்கே வந்து முதலாளிகளுக்காக வாதாடிவிட்டு விடை பெற்றுச் சென்றிருக்கிறார்கள். பனியன் தொழிற்சாலை வைத்திருக்கிற அந்த முதலாளிகளுக்காக — அவர்கள் வெற்றி பெற்றதற்கு அவர்கள் காரணமோ என்னவோ தெரியவில்லை, அதனாலோ என்னவோ தொழிலாளர்கள் கட்சியில் இருக்கிறவர்கள் முதலாளிகளுக்காக விற்பனை வரியில் ஐந்து சதவீதம் குறைக்க வேண்டும் என்று — அந்தக் கட்சிக்கு அப்படி ஒரு கொள்கை இருப்பதாக இதுவரை, நான் படித்தவரை தெரியவில்லை. மற்றவர்களும் அப்படிச் சொல்லி நான் கேள்விப்பட்டதில்லை. தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர்கள் நலக் கொள்கைகளில் அக்கறை காட்டுகிறவர்கள் இப்படி முதலாளிகளுக்காக விற்பனை வரியில் 5 சத விதம் குறைக்க வேண்டும் என்று கேட்டதாக ஞாபகம் இல்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் 5 சதவீதம் விற்பனை வரியைக் குறைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இதுதான் அவர்கள் நிலை. ஆளும் கட்சியின் செயலை கூர்மையாக்குவதுதான் எதிர்க்கட்சிகளின் வேலை என்று சொன்னார்கள். சொல்வதற்கு அழகாக இருந்தது. நான் கேட்பதற்கும் இது இனிமையாக இருந்தது. ஆளும் கட்சியின் செயல் கூர்மையாகட்டும் நல்லதைத்தானே சொல்கிறார்கள் என்று விடும்போது திடீரென்று ஏதாவது சமயத்தில் அந்தக் கூர்மையை வைத்து எங்கள் கட்சியை குறி பார்த்து முதுகில் குத்துகிற கட்சியை எதிர்க்கட்சி என்று அழைப்பதா அல்லது வேறு என்ன பதத்தால் அழைப்பது என்று எனக்குப் புரியவில்லை. அதேபோல் இடிக்கும் துணையை வெறுக்கிறீர்களே என்று கேட்டார்கள். அப்போதைக்கப்போது இடித்து வருகிற துணையை ஏன் வெறுக்கிறீர்கள் என்று கேட்டார்கள். நான் அவர்களைப் பார்த்து ஒன்று கேட்க விரும்புகிறேன். இடிக்கும் துணை சிலசமயங்களில் அல்லது பல சமயங்களில் அதைச் செய்யும்போது துணை மாறி விடுகிறது. ஆகவே ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் நாங்கள் இருக்கிறோம் என்பதை நான் இந்த இடத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 9-30)

இந்த ஆளுநர் உரையில் ஆதி திராவிடர் நல மேம்பாட்டிற்காக புரட்சித் தலைவர் அவர்கள் அரசு விரிவான திட்டங்களை வெளியிட்டு வருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஒவ்வொரு





ஆதிதிராவிடருக்கும் ஒரு வீடு என்ற முறையில் இந்த நாட்டிலே திட்டங்கள் கொண்டு வருவோம் என்று அவர் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால், வறட்சியானாலும் சரி, வெள்ளமானாலும் சரி, அல்லது பஞ்சமானாலும் சரி, ஏன் இன்னும் சொல்லப்போனால், தேர்தல் ஆனாலும் சரி, பாதிக்கப்படுகின்றவர்கள் ஆதிதிராவிட மக்கள்தான். குறிப்பாக, எந்தப் பிரச்னையாக இருந்தாலும், அதிலே ஆதி திராவிட மக்களை அடிமைப்படுத்த வேண்டுமென்ற உணர்வு இன்னும் நாட்டிலே பலருக்குப் போகவில்லை. ஜனநாயகத்திலே அரசியல் கட்சிகள் வாக்குகள் கேட்கும்போது, எதிர்க்கட்சியாக இருக்குமானால், தாங்கள் ஆண்ட காலத்தில் இன்னின்ன திட்டங்களைச் செய்திருக்கிறோம், இன்னும் பல திட்டங்களை வருங்காலத்திலே செய்ய இருக்கிறோம் என்று வாக்குகளை கேட்பார்கள். ஆளும் கட்சியாக இருந்தால், இந்த ஆண்டில் நாங்கள் இன்னும் பல திட்டங்களைக் கொண்டு வருவோம் என்று சொல்லி வாக்குகளைக் கேட்பார்கள். ஆட்சிக்கு வரமுயலுகின்ற கட்சிகள் போட்டியிட்டால், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இவைகளை நாங்கள் செய்வோம் என்று சொல்லுவார்கள். ஆனால், ஜனநாயக இந்தியாவில், ஒரே ஒரு கட்சி மட்டும்தான், ஆதி திராவிட மக்களை, தாய்மார்களை ஓட்டுச்சாவடிக்கு கடந்த டிசம்பர் 24 ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில், வரவேண்டாம் என்று சொன்னார்கள் என்றால், அந்தக் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை இந்த மாமன்றத்தில் விளக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதிதிராவிட மக்களை ஓட்டுச் சாவடிக்கு வரவேண்டாம் என்று ஒவ்வொரு கிராமத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கேட்டுக் கொண்டார்கள். அப்படிச் சொல்லுகின்ற நிகழ்ச்சியை கடந்த தேர்தலில் பார்த்தோம். இந்த நாட்டிலே சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தல் நடக்கின்றது என்றால், அந்தத் தேர்தல்களில் மக்களிடமிருந்து வாக்குகளைப் பெறுவதற்கான எத்தனையோ வேலைகளைச் செய்யலாம். ஆனால், அதை விட்டுவிட்டு வாக்குகளைப் பெறுவதைத் தடுக்கின்ற முறையிலே ஈடுபட்டார்கள் என்றால், இதைப்போன்ற ஒரு ஜனநாயக விரோத போக்கு எங்காவது இருக்க முடியுமா? ஆனால், அவர்கள் இந்த அரசைப் பார்த்து இது ஜனநாயக விரோத அரசு என்று சொல்லுகிறார்கள். ஜனநாயகத்தின் அடித்தளத்திலே இருந்து வளர்ந்து வந்தது இந்த இயக்கம்.

அதைப்போலவே, இலங்கைப் பிரச்னையைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். இந்தப் பிரச்னையில் இந்த அரசு எதையுமே செய்யவில்லை, கொள்கையற்ற அரசு, திட்டமிட்ட கொள்கை இந்த அரசுக்கு இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். மதிப்பிற்குரிய உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கடந்த சட்டமன்றத்தில், இலங்கை பற்றிய தீர்மானத்தின்மீது பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இந்திரா காந்தி அம்மையார் பாரதப் பிரதமராக இருக்கிறபோது, அவர்கள்மீது நம்பிக்கை கிடையாது, அவரால் இந்த இலங்கைப் பிரச்னை தீரும் என்று நான் நம்பவில்லை, நம்பிக்கையற்றுப் போயிருக்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், பேராசிரியர் நேற்று முன்தினம் இந்திரா காந்தி அம்மையார் மறைவுகுறித்து கொண்டுவரப்பட்ட இரங்கல் தீர்மானத்தின்மீது பேசும்போது, திருமதி இந்திரா காந்தி அவர்கள் இருக்கும்போது நாங்கள் நம்பிக்கை வைத்திருந்தோம். ஆனால் இப்போது என்ன ஆகுமோ தெரியவில்லை என்று சொல்லுகிற மாறுபட்ட கருத்தைச் சொன்னார்கள். இப்படி மாறுபட்ட கருத்துக்களையும் எண்ணங்களையும் கொள்கைகளையும் வைத்திருக்கிற அந்த இயக்கம்தான், மற்றவர்களுடைய கொள்கைகளை விமர்சனம் செய்கிறார்கள். ஆனால், இலங்கைப் பிரச்னையில் உண்மையில் அவர்கள் பாடுபடவில்லை. அவர்கள் பாடுபட்டிருந்தால், அந்தக் காரணத்தைக் காட்டி, சட்டமன்றத் தேர்தல் அறிக்கையிலே அதைக் குறிப்பிட்டிருக்கலாமே. ஆனால், அதை விட்டுவிட்டு, சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, மேலவையிலே இன்றைக்கு அமர்ந்து கொண்டிருக்கின்றார். ஆனால், இதைப் பற்றியெல்லாம் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடவில்லை. என்ன காரணம்? (குறுக்கீடு)

திரு. ப. பொன்னுரங்கம்: மேலவைக்குப் போனதிலே என்ன தவறு?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவருடைய கருத்து; அதை அவர் சொல்லுகிறார்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: நாட்டு மக்கள் மத்தியில் ஏன் அந்தக் காரணத்தைச் சொல்லவில்லை? அந்தக் காரணத்தைச் சொல்லி ஏன் வாக்குகளைக் கேட்கவில்லை? போதாக்குறைக்கு தேர்தலில் நாட்டு மக்கள் மத்தியில் அந்தக் காரணத்தை [illegible]





சொல்லவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தேர்தலில் இந்த நாட்டு மக்கள் அவர்களுக்கு கற்பித்திருக்கிற பாடம், எத்தனையோ ஆண்டுகாலமாக இந்த நாட்டு மக்களுக்கு செய்திருப்பதாகச் சொன்னது அத்தனையும் நடிப்பு, இந்த நாட்டுமக்கள் மத்தியில் வாக்குகளைப் பெறுவதற்காக நீலிக்கண்ணீர் வடித்திருக்கிறார்கள், அதற்கு இந்த நாட்டுமக்கள் நல்ல பதிலைத் தந்திருக்கிறார்கள் என்று கூறி, ஆளுநர் அவர்கள் உரையை வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தன்னிலை விளக்கம் தரவேண்டியிருக்கிறது. தயவுசெய்து அனுமதிக்க வேண்டும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேசுகிற போது நான், திருப்பூர் சட்டமன்றத் தொகுதியில், பனியன் தொழில் மீது விதிக்கப்பட்டிருந்த விற்பனை வரி 5 சதவீதத்தை ரத்து செய்ய வேண்டும் என்ற வகையில் தலையிட்டதால், உள்நோக்கத்தோடு முதலாளிகளின் ஆதரவு பெற்று வெற்றி பெற்றதாகக் குற்றம் சாட்டுகிறார். அவர் நல்ல வாதம் புரிந்திருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பேன். ஆனால் பலவீனத்தினால் விதண்டாவாதம் புரிகிறார்கள்.

அந்த பனியன் தொழில் மீது 5 சதவீதம் விற்பனை வரி விதிப்பதால் அகில இந்திய அளவில் திருப்பூர் பனியன்கள் போட்டியிட முடியாத பலவீனம் ஏற்படுகிறபோது, அது 25 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை இழப்பை ஏற்படுத்தும். தொழிலாளர்கள் மீது அக்கறையற்ற கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இதுபற்றி அக்கறை இருக்காது என்றுதான் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் சட்டமன்றத் தொகுதியின் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள், தொழிலாளர்கள் மீது உள்ள அக்கறையைப்பற்றி பேசினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய முயற்சியினால்தான், இன்றைக்கு பனியன் தொழிலாளர்கள் பிரச்னை தீர்க்கப் பட்டிருக்கிறது என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (கரவொலி)

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதை அவர் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார் என்று கருதுகிறேன். திருப்பூர் சட்ட மன்ற உறுப்பினர் எப்படி வெற்றிபெற்றார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் எங்கள் இயக்கத்தைச் சார்ந்த முன்னாள் கொறடா, திருப்பூர் மணிமாறன் அவர்கள் தோல்வியடைந்தது, அந்தப் பனியன் தொழிலாளர்களுக்கு டி.ஏ. தரவேண்டும் என்று போராடியதினால்தான். முதலாளிகளுக்கு எதிராகப் போராடியது தான். ஆகவேதான் அந்த முதலாளிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து எங்களைத் தோற்கடித்திருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். தொழிலாளர்கள் மீது உண்மையான அக்கறைக் கொண்ட காரணத்தினால்தான் தோல்வியைப் பற்றிக் கூட கவலைப்படாமல் பாடுபடுகிறோம் என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

திரு. கு. சுப்பராயன்: ஆளும் கட்சி தரப்பிலேயிருந்து உள்நோக்கத்தோடு வெளியிடப்படும் இத்தகைய ஒரு தவறான கருத்தை சட்டசபை அவைக்குறிப்பேட்டிலே பதிவு செய்வது சரியா என்று தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு நான் ஆட்சேபணை தெரிவிக்கிறேன். அதை பதிப்பது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் எதுவும் தவறாகச் சொல்லிவிடவில்லை. தன்னிலை விளக்கம் என்று நீங்கள் எழுப்பாமல் இருந்திருந்தால், இந்த விவாதமே வந்திருக்காது.

* திரு. மா. கதிர்வேலு: பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, முதன் முறையாக இந்த அவையிலே நான் வந்தமைக்கு, எனக்காக வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அதோடு மட்டுமல்லாமல் நான் வணங்கும் பெரும் தலைவர் காமராசர் அவர்களுக்கும், அன்னை இந்திரா காந்தி அம்மையாருக்கும், நான் இந்த நிலைமைக்கு உருவாகக் காரணமாக இருந்த பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கும் அண்ணன் சிவாஜி அவர்களுக்கும், தமிழக காங்கிரஸ் தலைவர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





மேதகு ஆளுநர் அவர்கள் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர் அவர்களையும், சக அமைச்சர் அவர்களையும் பதவியில் அமர்த்தி, ஜனநாயக முறையை நிலை நாட்டியமைக்காக, ஆளுநர் அவர்களுக்கும் அவைத் தலைவர் மூலமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல், அனுதாப அலைகள் மூலமாகத்தான் நாங்கள் வெற்றி பெற்றோம் என்று திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். நான் அவர்களுக்கு மெத்த பணிவன்போடு சொல்லிக்கொள்வதெல்லாம், அனுதாப அலை என்பது ஒரு பக்கம் இருந்தாலும், உலகளவில் இந்த மண்ணின் பெருமையை நிலை நாட்டிய அன்னை இந்திரா காந்தியின் திட்டங்கள்தான், விரிவாகச் சொல்லப்போனால், சுய வேலை வாய்ப்புத் திட்டம், 20 அம்சத் திட்டம் இந்திய ஒருமைப்பாடு, பங்களா தேஷ் வெற்றி, விஞ்ஞான வளர்ச்சியில் ஆரிய பட்டா விட்டது, 110 நாடுகளின் ஒருமித்த தலைவியாக இருந்து உலக சமாதானத்தை நிலை நாட்டியது போன்றவைகள் மட்டுமல்ல, புரட்சித் தலைவர் அவர்களின் தர்மமும் தான் எங்களுடைய வெற்றிக்கு அடிகோலியது, என்பதை கனம் உறுப்பினர் அவர்களுக்கு சொல்லிக் கொள்கிறேனே தவிர, அனுதாப அலையால் நாங்கள் வெற்றிபெறவில்லை என்று சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய ஆளுநர் உரையில் இன்றையதினம் அறிவிக்கப்பட்டிருக்கிற சத்துணவு திட்டம் என்பது எல்லா மாநிலங்களும் பார்த்து, பின்பற்றப்பட வேண்டிய ஒரு திட்டம். பெரும் தலைவர் காமராசர் அவர்கள் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டத்தை நீட்டித்து, மேலும் 8 ஆம் வகுப்பு வரை அந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பிள்ளைகளுக்கு உணவும் சீருடையும் வழங்கும் வகையில் அதை மேம்படுத்தியிருப்பதற்காக முதல்வர் அவர்களுக்கு, தலைவர் மூலமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எட்டாவது நிதிக் கமிஷனில் ஒதுக்கப்பட்ட நிதி இந்த மாநிலத்திற்கு பற்றாக்குறையாக இருக்கிறது, அதை அதிகப் படுத்தித் தரவேண்டும் என்று இந்த அமைச்சரவை கூறியிருக்கிறது. இதில் நான் மெத்தப் பணிவன்போடு சொல்லிக் கொள்வதெல்லாம், நிச்சயமாக இந்திய தேசிய காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்கள் அதற்கு உறுதுணையாக இருப்பார்கள்

என்பதுதான். ஃவெல்பேர் இலாக்காவிலே கொடுக்கப்பட்ட பணம் முழுவதுமாக செலவிடப்படாமல் மத்திய சர்க்காருக்கு திருப்பி அனுப்பப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளை தவிர்த்து நிதி உதவிகளை முழுமையாக செலவிட இந்த அரசு உறுதிபூண்டு அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

அதோடு மட்டுமல்ல. பள்ளிக்கூடங்களுக்கு சீருடையும் உணவும் மட்டும் கொடுத்துவிட்டால் போதாது. பெருகி வருகின்ற மாணவர்களுக்கு, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ஏற்ற வகையில் மரத்தடி பள்ளிக்கூடங்களை நீக்குகின்ற வகையில் நிரந்தர கட்டிடங்களை உருவாக்கித் தந்து அவர்களுக்கு ஆசிரியப் பெருமக்களையும் அதிகப்படுத்த வேண்டும். ஏனென்றால் என் தொகுதியைப் பொறுத்தவரையில் உயர்நிலைப் பள்ளிகளில் பார்க்கின்றபோது ஏறக்குறைய நூறு மாணவர்கள் ஒரு வகுப்பில் இருக்கிறார்கள். இப்படி இருந்தால் அவர்களுடைய போதனை எந்த அளவிற்கு வெற்றி பெறும், எப்படி அறிவுள்ள மாணவர்கள் வெளிவர முடியும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல. டாக்டர் ராதாகிருஷ்ணன் போன்றவர்கள் படித்த, நூற்றாண்டுகளாக பெயர்பெற்ற, வாலாஜாபேட்டை நகராட்சியிலிருந்து நான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன். அந்த பழமையான நகராட்சிக்கு சொந்தமான உயர்நிலை பள்ளியில் ஒரு ஆங்கில மீடியம் வரவேண்டுமென்று போராடி வருகிறார்கள். நான் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த ஆண்டு அதனை தொடங்குவதற்கு உங்களுடைய அனுமதி தேவை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தொகுதியை சேர்ந்த ஒருவன் என்ற முறையிலும், நீண்ட காலத்திற்கு பிறகு என்னை தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள் என்ற முறையிலும் நான் கல்வி அமைச்சர் அவர்களை, அவைத் தலைவர் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, பெண்களுக்கு கழிப்பிடம் என்று அறிவித்து இருக்கிறார்கள். அது தேவையான ஒன்று தான். கிராமங்களிலே அவைகள் சுகாதார அடிப்படையிலே இருக்க வேண்டும். அவற்றை பராமரிப்பதற்கு ஆட்கள் வசதி, தண்ணீர் வசதி போன்றவற்றை ஏற்படுத்தினால் நிச்சயமாக வெற்றிகரமாக அமையும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அது மட்டுமல்ல. இங்கே நாம் எடுக்கின்ற திட்டங்களை செயலாக்குவதற்கு அடித்தளமாக இருக்கின்ற பஞ்சாயத்து யூனியன்களும், நகர சபைகளும் அரசுக்கு இரண்டு கண்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் மட்டும் அரசாங்க ஊழியர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் நகராட்சியில் பணிபுரியும் ஊழியர்கள் அரசாங்க ஊழியர்களாக மாற்றப்படாமல் இருக்கின்றார்கள். எனவே நகராட்சி ஊழியர்களையும் அரசாங்க ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நில உடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு 10,000 ஊழியர்கள் 1982-ல் எடுக்கப்பட்டு அவர்கள் பணி இந்த ஆண்டோடு முடிக்கப்படுவதாக இருக்கிறது. அவர்கள் அந்த சூழ்நிலையிலிருந்து விடுபட்டால் அந்த 10,000 தொழிலாளர்களுடைய குடும்பங்கள் பாதிக்கப்படும். வேலையற்ற இந்த சூழ்நிலையில் அப்படிப்பட்ட 10,000 குடும்பங்கள் நடுத்தெருவிலே நிற்கின்ற நிலைமை ஏற்படும். எனவே முதல்வர் அவர்கள் அவர்களுக்கு கால நீட்டிப்பு உத்தரவினை பிறப்பிக்க வேண்டும் என்று நான் அவைத் தலைவர் மூலமாக கேட்டுக்கொள்கிறேன். நிதியமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தனியார் கல்லூரிகள். தொழிற் கல்விக் கூடங்கள் இவைகளைப் பற்றி சொல்லத் தேவையில்லை. ஏழை எளிய மக்களுக்கு பயன்படுகின்ற வகையில் இவைகள் இருக்கின்றனவா என்றால் நிச்சயமாக இல்லை. அந்த தனியார் நிறுவனங்கள் அங்கே நன்கொடை என்ற பெயரால் 5,000, 10,000, 50,000 என்று வியாபார பொருளாக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். தனியார் நடத்தும் பரிசு சீட்டுக்களை ஏதோ திட்டமாக கொண்டுவந்தார்கள். குட்டி வட்டிக் கடை போல் இயங்கிக்கொண்டிருக்கிற தனியார் கல்லூரிகளையும் தனியார் தொழில் நுட்ப கல்லூரிகளையும் நீங்கள் கண்காணிக்க வேண்டும். பெரும் தலைவர் காமராஜர் அவர்கள், இந்த அவையிலே, மருத்துவ கல்லூரி தேர்வுகளில் ஊழல் என்று சொல்லியவுடன் அந்த தேர்வுகளில் உறுப்பினர்களை கண்காணிப்பதற்காக கண்காணிப்பாளர்களை போட்டார்கள். அவ்வாறு செய்தால் அந்த ஏழை எளிய மக்கள் பயன்பெறுவதற்கு உண்டான சூழ்நிலை ஏற்படும். அதனை கல்வி அமைச்சர் அவர்கள் செய்து தர வேண்டும். இதனைத்தான்

செட்டிநாட்டு பள்ளிக்கூடத்திலே அறநிலையத்துறை அமைச்சர் பேசியபோது சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்று கடந்த வார பத்திரிகையை பார்த்தபொழுது அறிந்துகொண்டேன் என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பஸ் எங்கள் மாவட்டத்திற்கு வருகிறது. ஆனால் அந்த பட்டுக்கோட்டை அழகிரி பஸ் பட்டுப் போன போக்குவரத்துக் கழக பஸ்ஸாக இருக்கிறது. அந்த பஸ்ஸை பராமரிக்கிறார்களா என்று சொன்னால், நிச்சயமாக இல்லை. 100-க்கு 75 பஸ்ஸில் ஷட்டர்ஸ் கிடையாது. மழை பெய்தால், ஒழுகும்; கடும் பனியில் அவர்கள் வேதனையை நான் கண்டேன். அந்த அளவுக்கு, வேதனை உள்ள அளவுக்கு அந்தப் போக்குவரத்துக் கழகம் இயங்குகிறது. அதைச் செப்பனிட வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் வாலாஜாவிலிருந்து சட்டமன்றத்தில் கலந்துகொள்வதற்கு சென்னை வரும்போது நின்று கொண்டு வருகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. வேலூரிலிருந்து அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் ஏறி உட்கார்ந்து விட்டால், வழியில் ஏறுகிற எனக்கு வசதி செய்துகொடுப்பதற்கு அந்த கண்டக்டரால் எப்படி முடியும்? தாலுக்கா தலைநகரிலிருந்து நான் வருகிறேன். வாலாஜாவிலிருந்து சென்னைக்கு போக்குவரத்து பஸ்ஸை விட வேண்டுமென்று கேட்டபோது, சர்வே செய்வதாகச் சொன்னார்கள். 100-க்கும் மேற்பட்ட அரசாங்க ஊழியர்கள் பணிபுரிவதற்காக தொழிற்கூடங்களுக்குச் செல்கிறார்கள். அவர்கள் காலை 5 மணியிலிருந்து நின்றுகொண்டு வருகின்ற சூழ்நிலை தினமும் இருக்கிறது. தாலுக்காத் தலைநகரிலிருந்து நான் வந்திருக்கிறேன். ஆகவே வாலாஜாவிலிருந்து சென்னைக்கு வருவதற்கு, சிப்காட் தொழிலாளர்கள் பயனடையும் அளவுக்கு வசதிகளை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, சிப்காட் தொழிற்பேட்டைகள் தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் இருக்கின்றன. சென்னை பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் போன்று நீங்கள் சிறு யூனிட்டுகளாக, ஆங்காங்கே இருக்கின்ற சிப்காட்டுகளுக்கு அமைத்துத் தந்தால், அதற்கு மட்டும் உதவிகரமாக இருக்காது, அனைத்து கிராமங்களுக்கும் உதவிகரமாக இருக்கும். அதை அமைத்து மின்

பெரும் மின்சார வெட்டிலிருந்து தடுத்து நிறுத்தவேண்டுமென்று அமைச்சர் அவர்களை கனம் அவைத் தலைவர் மூலமாக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதிக்கு நான் வருகிறேன். அங்கு இருக்கும் அரசாங்க மருத்துவமனையைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், 32 பெட்களைக் கொண்டு, மாணிக்கவேலர் காலத்தில் தொடங்கப்பட்ட அந்த நிலையில், பழமையாக, பழுதடைந்த மருத்துவமனையாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த மருத்துவமனை அமைந்திருக்கக் கூடிய சூழ்நிலையைச் சொல்கிறேன். சுங்குவார் சத்திரத்தில் ஏற்படுகின்ற ஆக்சிடெண்ட்டுகள், ஓச்சேரி, விசாரம் ஆகிய இடங்களில் ஏற்படுகின்ற ஆக்சிடெண்ட்கள் அத்தனையும் ஒரு வருடத்தில் ஏறத்தாழ 200 ஆக்சிடெண்ட்கள், போஸ்ட் மார்ட்டங்கள் வருகின்றன. அதோடு மட்டுமல்ல, ஒரு நாளைக்கு ஆயிரம் புற நோயாளிகள் சிகிச்சை பெறுகின்ற தலைமை மருத்துவமனையாக இருக்கிறது. அங்கே ஆக்சிடெண்ட் வார்டு இல்லை. ப்ளட் பாங்க் இல்லை, பெட் வசதி இல்லை. இத்தனை காலத்திற்குப் பிறகு பெட் வசதி ஏதாவது ஏற்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. 12 பெட் வசதி அனுமதிக்கப்பட்டிருந்தும்கூட, அடுத்தடுத்துப் போய்க்கொண்டே வருகிறதே தவிர, இன்னும் கட்டப்படாத சூழ்நிலை இருக்கிறது. அது தாலுக்காத் தலைநகர். 1.54 இலட்சம் வாக்காளர்களைக்கொண்ட ஒரு தாலுக்கா தலைநகரில் உள்ள மருத்துவமனையாக இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் வந்து பார்த்தார்கள். அவர்கள் கூட சற்று வேதனைப்பட்டார்கள். அவர்களும் நீண்ட கால அடிப்படைத் திட்டம், குறுகிய கால அடிப்படைத் திட்டம் என்ற வகையில் வேகப்படுத்துகின்ற சூழ்நிலையை உருவாக்கித் தருகிறேன் என்று உறுதியளித்திருக்கிறார்கள். ஆகவே தான் நான் இங்கே மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த அவைத்தலைவர் மூலமாக இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறேன். நான் சின்ன பையனாக இந்த சட்ட மன்றத்திற்கு வந்திருக்கிறேன். ஆகவே என்னுடைய தொகுதிக்கு கருணைபுரிந்து அதையெல்லாம் செய்துதரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு அமைச்சர் திரு. யூசுப் அவர்கள் எங்களுடைய தொகுதிக்கு தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்திருந்தார்கள். அந்த நேரத்தில் எங்கள் தொகுதி மக்களுக்கு அவர்கள் சொன்னதை குறிப்பிட விரும்புகிறேன். பொன்னை ஆற்றுப் பாலத்திற்கு பக்கத்தில் வசூர் என்று ஒரு கிராமமும், கொண்ட குப்பம் என்ற ஒரு கிராமமும் இருக்கிறது. வசூரை அடுத்து 10 கிராமங்களும், கொண்டகுப்பத்தை அடுத்து 10 கிராமங்களும் இருக்கின்றன. அந்த கிராமங்கள் வெள்ளம் வந்தால் பாதிக்கப் படுகின்றன. வெள்ளம் வந்துவிட்டால் நான்கு மாதங்களுக்கு வேதனைப் படவேண்டியிருக்கிறது. இது ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய விஷயம். வெள்ளம் வந்துவிட்டால், அந்தப் பகுதியைச் சார்ந்த மக்களின் கழுத்தளவுக்கு மேல் தண்ணீர் வரக் கூடிய நிலை இருக்கிறது. வெள்ளம் வந்துவிட்டால், மூன்று, நான்கு நாளைக்கு பட்டினி இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை அந்தப் பகுதி மக்களிடையே இருக்கிறது. வெள்ளத்தில், கழுத்தளவு தண்ணீரில் நீந்தி, மாற்றுத் துணியை எடுத்துக்கொண்டு மறு கரையைக் கடக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

(முற்பகல் 9-50)

இதை தேர்தல் நேரத்திலே வாக்குறுதியாக சொல்லியிருக்கின்ற நிலையில், ஜனநாயக முறையில் பொறுப்புக்கு வந்திருக்கிற போது, அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் அந்த பாலங்களை கட்டிக்கொடுத்தால் மக்கள், நகரங்களுக்கு வந்து பொருள்களைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும். புரட்சித் தலைவர் அவர்கள் இதைச் செய்தால் மக்களுக்கு கொடுத்த பொக்கிஷமாக இருக்கும் என்பதை அவைத்தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாலாஜாவில் உள்ள பெண்கள் கல்லூரிதான் வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிற ஒரே அரசு பெண்கள் கல்லூரி. இந்த கல்லூரியில் பி.காம். வகுப்பு வரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். கையெழுத்து ஆகிற சூழ்நிலை இருப்பதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வருடம் அங்கே பி.காம். வகுப்புகள் வருவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.





இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நாங்கள் மாற்று கருத்து உடையவர்கள் அல்ல. எங்களுடைய உடம்பிலே ஓடுகிற ரத்தமும் தமிழ் ரத்தம்தான். மாற்றார்கள் பேசுவதைப் போல் நாங்கள் தமிழ் உணர்வு அற்றவர்கள் அல்ல. அந்த உணர்வும் இனி என்ன செய்ய வேண்டும் என்ற உறுதியும் எங்களிடத்திலே இருப்பதால் தான் நாங்கள் இலங்கை அகதிகளுக்கு நிதி வசூலித்துக் கொடுத்து இருக்கிறோம். அ.இ.அ.தி.மு. கழக உறுப்பினர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்களும் இலங்கை அகதிகளுக்கு நிதியைப் பெற்று தந்து இருக்கிறோம். அந்த எண்ணத்தோடுதான் பாரத பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் கடற்படையை உஷார் படுத்தியிருக்கிறார்கள். திரு. ராஜீவ் காந்தி அவர்கள் மூலமாக அவர்களுக்கு நல்வாழ்வு வரும் என்று நம்புகிறோம். ஆகவே, இதனை அரசியல் ஆக்க வேண்டாம். திருப்பத்தூர் தேர்தலில் தாலியையும் கயிறையும் வைத்துப் பேசினீர்கள். ஆனால் அதிலேயும் தோற்றுவிட்டீர்கள். ஆகவே இதை அரசியல் ஆக்காமல் அனைத்து மக்களின் பிரச்சினையாகக் கருதி தமிழக முதல்வர் அவர்களும் பாரத பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களும் இதை நிரந்தரமாக தீர்த்து வைப்பார்கள் என்று தெரிவித்து எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைக் கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம். ஜெய் ஹிந்த்.

* **திரு. சா. துரைசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்னே என்னை சட்டமன்ற உறுப்பினராக அடையாளம் காட்டிய எங்களது இதய தெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னை தேர்ந்தெடுத்த எனது தொகுதி வாக்காள பெருமக்களுக்கும் குறிப்பாக தாய்மார்களுக்கும் எனது வெற்றிக்காக பாடுபட்ட செயல்வீரர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் முதலிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் முன்மொழிந்த இந்த தீர்மானத்தை யொட்டி வழிமொழிந்து பேசுகின்ற வாய்ப்பு பெற்றமைக்காக நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையின்மீது இங்கே

[திரு. சா. துரைசாமி] [1985 மார்ச் 13]

பல்வேறு உறுப்பினர்கள் பலதரப்பட்ட கருத்துக்களை எடுத்துச் சொல்லி தமிழகத்தின் தள நாயகர் புரட்சித் தலைவர் அவர்கள் மூன்றாவது முறையாக முதல்வராக பொறுப்பேற்ற அந்த நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டி வெற்றி பெற்ற அந்த இமாலய சாதனையை கொச்சைப்படுத்துகின்ற வகையில் அந்த வெற்றியை ஏற்றுக்கொள்ள இயலாத வகையில் அதற்கு மூலாம் பூசுகின்ற வகையில் அனுதாப வெற்றி, அனுதாப வெற்றி என்று இங்கே ஆர்ப்பரித்துச் சொன்னார்கள். தமிழகத்தின் தள நாயகர் புரட்சித் தலைவர் அவர்கள் மக்களின் நம்பிக்கையைப் பெற்று மக்களுடைய உயிர் நாடியாக மக்களின் சக்தியாக விளங்கிக் கொண்டு வருகிறார்கள் என்பதை அரசியல் விற்பன்னர்கள் கடந்த அரசியல் வரலாற்றைப் பார்க்கிற நேரத்திலே புரிந்து கொள்ளுகிற சான்றுகள் ஏராளமாக இருக்கின்றன என்பதை மறந்துவிட்டு இங்கே அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழக மக்கள் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆற்றலால் அன்பால் இந்த திராவிட முன்னேற்றக் கழகம் என்கின்ற இயக்கத்தையே அடித்தளத்து மக்களிடம் பிடிப்பு ஏற்படச் செய்தது. அதையொட்டி 1967-லே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் மனம் திறந்து சொல்லியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்கு பிறகு 1971 ஆம் ஆண்டு ஏற்பட்ட மிகப்பெரிய வெற்றி புரட்சித் தலைவருடைய வெற்றி என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழுவே அங்கீகாரம் வழங்கியிருக்கிறது. அதற்குப்பிறகு புரட்சித் தலைவர் அவர்கள் இல்லாத திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற இயலாது என்பதை இடைத்தேர்தல், திண்டுக்கல் இடைத்தேர்தல் எடுத்துக்காட்டியது. நாட்டு மக்களுக்கு அதை எடுத்துக்காட்டி அடையாளம் தெரியாத ஒருவரை புரட்சித் தலைவர் தம்பி என்பதாலே லட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றிபெறச் செய்து 2,000 வாக்குகள் வித்தியாசத்திலே ஜாமீன் தொகையை தக்க வைத்த நிகழ்ச்சியையும் இன்னும் மறந்துவிடவில்லை. 1972-க்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகமும் மக்கள் மத்தியில் எப்படிப்பட்ட சக்திகளாக விளங்கின, மக்கள் அவர்களை எப்படி அங்கீகரித்தார்கள் என்ற வரலாற்று நிகழ்ச்சியை நாடு மறந்துவிடவில்லை. 1972-லிருந்து



1985 மார்ச் 13] [திரு. சா. துரைசாமி]

இன்றையவரை தொடர்ந்து வெற்றியையே தழுவிக்கொண்டு இருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். இடையிலே சில சறுக்கல்கள் இருக்கலாம். அந்த சறுக்கல்களுக்கு காரணம் இந்திய தேசிய காங்கிரஸ் ஆதரவால், பிச்சையால் பெற்ற வெற்றியாகும். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்பட்ட செல்வாக்கு அல்ல, ஆதரவு அல்ல என்பதை திரு. ரகுமான்கான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 1980-லே பாராளு மன்றத் தேர்தலிலே வெற்றிபெறவில்லையா, பாண்டிச்சேரியிலே வெற்றிபெறவில்லையா என்று கேட்டார்கள். 1980-லே நாடாளு மன்றத்திற்கும், பாண்டிச்சேரியில் நடைபெற்ற சட்டமன்றத் திற்கும் நடைபெற்ற தேர்தலில் வெற்றிப்பெற்றது உங்களுடைய தனித் தன்மையால் அல்ல. இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்ததால் வெற்றிப்பெற்றீர்கள். அந்த நேரத்தில் 16-ம் பெற்றவன் வாழ்த்துகிறேன் என்று எல்லாம் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் சொன்னார்கள். ஆனால் மக்களுடைய சக்தி, மக்களுடைய எழுச்சி, மக்களுடைய நம்பிக்கை புரட்சித் தலைவர் அவர்களுடைய பக்கம் தான் என்பதை ஒவ்வொரு தேர்தலும் நிரூபித்துக்கொண்டு வருகின்றது. அப்படி ஒவ்வொரு தேர்தலும் நிரூபித்துக்கொண்டு வருகிற நேரத்திலேயும் அவர்கள் ஏதாவது ஒன்றைச் சொல்லுகிறார்கள். கவர்ச்சி, மாயை, அரசியலிலே ஏமாந்துவிட்டார்கள் என்று சொல்லி ஒவ்வொரு வெற்றியையும் கொச்சைப்படுத்திய வரலாறுகளும் உண்டு. 1977-லே வெற்றிப் பெற்றோம் ஏற்றுக்கொண்டீர்களா? 1980-லே வெற்றிப் பெற்றோம் ஏற்றுக்கொண்டீர்களா? இன்றைக்கு மீண்டும் தமிழகத்தினுடைய முதல்வராக மூன்றாவது முறையாக வரலாற்று சிறப்புமிக்க தகுதியைப் பெற்று இருக்கிறார்கள். ஏற்றுக்கொண்டீர்களா? இன்னும் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்கள். மக்கள் உங்களை புறக்கணித்துவிட்டார்கள் என்பதை மறந்துவிட்டு மக்கள் சக்தி, மக்கள் சக்தி என்று சொல்கிறீர்கள். பேராசிரியர் அவர்கள் பேசும்போது எண்ணிக்கை குறைவாக இருக்கலாம் ஆனால் 86 லட்சம் மக்களுடைய ஆதரவை நாங்கள் பெற்று இருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். கடந்த காலத்தில் நடந்ததை எண்ணிப் பாருங்கள். 1972-ல் புரட்சித் தலைவர் அவர்களை கட்சியை விட்டு நீக்கியபோது அவர்கள் 15 சட்டமன்ற உறுப்பினர்களோடு சட்டமன்றத்தில் அமர்ந்த நேரத்தில் என்ன சொன்னீர்கள்? மக்களுடைய ஆதரவு பற்றி

[திரு. சா. துரைசாமி] [1985 மார்ச் 1:

சொன்னீர்களா? உங்கள் ஆட்சிக்கு அப்போது புரட்சித் தலைவர்
அவர்கள் ஜீவநாடி என்பதை ஏற்றுக்கொண்டீர்களா? இன்றைக்கு
சொல்கிறீர்கள், காலம் கடந்து மக்கள் சக்தியைப் பற்றி, மக்கள்
எண்ணிக்கையைப் பற்றி சொல்கிறீர்கள். சட்டமன்ற
உறுப்பினர்கள் எண்ணிக்கையைப் பற்றி இப்போது சொல்
கிறீர்கள். புள்ளிவிவரத்தைச் சொல்கிறீர்கள். இந்த புள்ளி
விவரத்தை தான் அண்ணா அவர்கள் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட
போதும் சொன்னார்கள். 1971-லே வெற்றிப் பெற்றவர்கள்
சொன்னார்கள். வெற்றிப் பெறாதவர்கள் யாரும் தங்கள்
தோல்வியை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதை

(முற்பகல் 10-00)

ஏற்றுக்கொள்ளுகின்ற மனப்பான்மையை நீங்கள் பெற்றால்தான்
இந்த 22-ம்கூட அப்படியே இருக்கலாம்; இல்லையென்றால்
48 என்பது 38 ஆக ஆகி, அந்த 38 என்பது 22 ஆகிவிட்டது, பிறகு
அது என்னவாகுமோ தெரியாது. ஆகவே, உண்மைகளை நீங்கள்
ஏற்றுக்கொள்ள வேண்டும். கொள்கைகளைப்பற்றி இன்றைக்கு
மரியாதைக்குரிய காம்ரேடுகள் சிந்தன் அவர்களும், இளவல்
சுப்பராயன் அவர்களும் பேசுகிறார்கள். அவர்களுக்கு நான்
தெரிவித்துக்கொள்கிறேன், இன்றைக்கு உங்களிடையே
ஏற்பட்டுள்ள கொள்கைக் குழப்பத்தினால்தான் நீங்கள் தேய்ந்து
வந்திருக்கிறீர்கள். 12, 13 ஆக இருந்தவர்கள், இன்றைக்கு
5 ஆகவும், 2 ஆகவும் மாறியிருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்
கிறது. இதற்குக் காரணம் என்ன? உங்களுக்கு ஏற்பட்ட
கொள்கை மாறாட்டம்தான், உங்களுக்கு ஏற்பட்ட கொள்கைக்
குழப்பம்தான். மக்கள் நலனில் அக்கறை கொள்ளாத கூட்டணியை
அமைத்தீர்கள். அதனால்தான் மக்களும் உங்களைப் புறக்கணித்து
விட்டார்கள். அப்படியில்லையென்றால் மக்கள் உங்களை ஏற்றுக்
கொண்டிருப்பார்கள்.

இலங்கை வாழ் தமிழர்களைப் பற்றிப் பேசுகின்ற நீங்கள்
உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே அதைப்பற்றிச்
சொன்னீர்களா? ஏன் அதைச் சொல்லவில்லை? அதில்
உங்களிடையே மாறுபட்ட கருத்து இருந்திருக்கிறது. மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒரு கருத்து, இந்தியக் கம்யூனிஸ்ட்
கட்சிக்கு ஒரு கருத்து, ஜனதாக் கட்சிக்கு ஒரு கருத்து. ஆகவே
தான், நீங்கள் தேர்தல் அறிக்கையில் இலங்கைத் தமிழர்களைப்



1985 மார்ச் 13] [திரு. சா. துரைசாமி]

பற்றிய பிரச்னையை வைக்கவில்லை. அந்தப் பிரச்னையை நீங்கள் தேர்தல் அறிக்கையில் வைப்பதுதானே? அந்த இலங்கைத் தமிழர்களுக்காகத்தான் தங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்தார் மரியாதைக்குரிய கலைஞர் கருணாநிதி அவர்கள். இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்கிறேன் என்று சொல்லி, அத்துடன் எங்களுடைய பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்களையும் சேர்த்து அழைத்துக்கொண்டு அன்றைக்கு இராஜிநாமா செய்தார்கள். ஆனால் இன்றைக்கு பேராசிரியர் அவர்கள் மட்டும் இங்கே அமர்ந்திருக்கிறார்கள்; அவர்கள் மேலவையில் அமர்ந்திருக்கிறார்கள்.

நான் கேட்பதெல்லாம். நீங்கள் இராஜிநாமா செய்தீர்கள். அப்படி இராஜிநாமா செய்த பிறகு மீண்டும் ஒரு தேர்தலைச் சந்தித்து பேராசிரியர் அவர்கள் இங்கே சட்டமன்ற உறுப்பினராக அமர்ந்திருக்கிறார்கள். ஆனால், கலைஞர் அவர்கள் மேலவையில் உறுப்பினராக இருக்கிறார்கள். இதன்மூலம் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தீர்ந்துவிட்டதா? ஆகவே, யாரை ஏமாற்றுவதற்காக, எந்த மக்களை ஏமாற்றுவதற்காக இன்னும் இந்த அரசியல் நாடகத்தை ஆடிக்கொண்டிருக்கிறீர்கள்? உண்மையிலேயே உங்களுக்கு இலங்கைத் தமிழர்களின் பிரச்னையில் ஈடுபாடு உண்டா? அக்கறை உண்டா? அப்படி இலங்கைத் தமிழர்களின் நலனில் உங்களுக்கு உண்மையிலேயே அக்கறை இருக்கிறது என்றால், எந்த அடிப்படையில் நீங்கள் சட்டமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்தீர்களோ அந்த அடிப்படையில், அந்த எண்ணம், அந்தக் கருத்து முற்றுப் பெற்று விட்டதா, முடிவு பெற்று விட்டதா, அதற்குத் தீர்வு வந்து விட்டதா? ஆகவே. நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற ஒவ்வொரு முயற்சியும் அரசியலில் மக்களை ஏமாற்றுவதற்காக, இழந்த பதவியை மீண்டும் எப்படியாவது பெறுவதற்காக, எப்படியாவது எதைச் சொல்லியாவது, ஏதாவது ஒரு தத்துவத்தைச் சொல்லி, பல முறை ஒரு உண்மைக்கு மாறான செய்தியைச் சொன்னால் அது உண்மையாகிவிடும் என்று கருதி அவதூறுகளைச் சொல்லி ஆட்சி பீடத்தில் ஏறிவிடலாம் என்ற ஒரு சின்ன தத்துவத்தைத் தவிர உங்களுக்கு வேறு மக்களின் நலனில் அக்கறை இல்லை;

[திரு. சா. துரைசாமி] [1985 மார்ச் 13

அவர்களது எதிர்கால வாழ்வைப்பற்றிக் கிஞ்சித்தும் உங்களுக்கு ஈடுபாடு கிடையாது என்பதைத்தான் உங்களுடைய தேர்தல் அணுகுமுறைகள் சொல்லிக்கொண்டு வருகின்றன. இல்லையென்றால் நடைமுறையிலே மாறுபட்ட கொள்கைகளையுடைய நீங்கள் கூட்டணி அமைத்துக் கொள்வது, 1977-இல், 1980-இல் ஆட்சியைப் பிடிப்பதற்காக காங்கிரஸோடு கூட்டு சேர்ந்து கொள்வது; அதற்குப் பிறகு மீண்டும் மாறுபட்டவர்களோடு கூட்டுச் சேர்ந்து கொள்வது என்ற அடிப்படையில் சேர்ந்தால் அதற்கெல்லாம் ஒரே காரணத்தைத்தான் சொல்ல முடியும். நீங்களெல்லாம் அரசியலில் கடந்த காலங்களிலே நடந்து கொண்ட மாதிரி நடந்து கொண்டிருக்கிறீர்களே தவிர, மக்களின் நலனில் ஈடுபாடு, மக்களின் வளர்ச்சியில் ஈடுபாடு, எதிர்காலச் சமுதாயம் வளர வேண்டுமென்ற அக்கறை ஆகியவை இல்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டாகும். அதையும் மக்கள் தெளிவாகப் புரிந்துகொண்டார்கள்.

தமிழக மக்கள் இருக்கிறார்களே, அந்த வாக்காளர்கள் மிக அற்புதமானவர்கள். "இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கொப்ப, மூன்றாவது முறையும் புரட்சித் தலைவரவர்கள் அமோக செல்வாக்கோடு வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதுவும்கூட புரட்சித் தலைவரவர்கள் தமிழ்நாட்டிலே இல்லாத நேரத்தில் இப்படிப்பட்ட வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் சொன்னார்கள், நான் படுத்துக்கொண்டே ஜெயிப்பேன் என்று. ஆனால் அவர்களால் அப்படிச் செய்ய இயலவில்லை. புரட்சித் தலைவர் ஒருவர்தான், ஏழாயிரம் மைல்களுக்கு அப்பால் படுத்துக் கொண்டே, தான் மட்டுமல்ல, 133 சட்டமன்ற உறுப்பினர்களையும் வெற்றிபெறச் செய்திருக்கிறார் என்றால், உலக வரலாற்றிலேயே வேறு எவருக்குமே அந்தப் பெருமை கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்படிப்பட்ட மக்களின் உயிர் நாடியாக விளங்குகின்ற எழுச்சி கீதமாக விளங்கிய அந்தப் புரட்சித் தலைவரவர்கள் பெற்ற வெற்றியை கொச்சைப்படுத்தி, கேவலமாகப் பேசுகின்ற முறையில், அனுதாபம் அனுதாபம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். எந்த அனுதாபம்? புரட்சித் தலைவரவர்கள்



1985 மார்ச் 13] [திரு. சா. துரைசாமி]

ஏழாண்டுக் காலம் ஆட்சி செய்தார்களே அந்த ஆட்சியிலே மக்கள் பெற்றிருக்கின்ற நன்மைகள் இருக்கின்றனவே அதையெல்லாம் மறந்துவிட முடியுமா? உங்களது ஆட்சியில் நீங்கள் செய்தீர்கள். வெள்ள நிவாரணம் வழங்கினீர்கள்; முதியோர் உதவித்தொகை வழங்கினீர்கள். அந்த வெள்ள நிவாரணமும், முதியோர் உதவித் தொகையும் முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேர்ந்ததா? அப்போது நீங்கள் வழங்கிய தொகை என்ன? இப்போது புரட்சித் தலைவர் வழங்கிய தொகை என்ன? வெள்ள நிவாரணத்திற்கு 200 ரூபாயும், 50 கிலோ அரிசியும், வேட்டிகளும், சேலைகளும் வழங்கி மக்களுடைய துயரைத் துடைத்தார் புரட்சித் தலைவர். அந்தச் செயலை நன்றியுள்ள தமிழ்ச் சமுதாயம் மறக்கவில்லை. ஆகவேதான் அந்த நன்றியுள்ள தமிழ்ச் சமுதாயம் புரட்சித் தலைவருடைய இதயத்தின் அடித்தளத்திலே இருந்து புறப்பட்டு வந்த அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட அந்தச் செயலை எண்ணி மக்கள் மறக்காமல் வாக்களித்தார்கள். அந்தச் செயலுக்குப் பெயர்தான் அனுதாபம் என்றால் அந்த அனுதாபம் தொடரும்.

நாட்டிலே கவனிக்க முடியாத, அனாதைகளாக, விதவைகளாக இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு அளிக்கப்பட்ட 20 ரூபாயாக இருந்த தொகையை 35 ரூபாயாக உயர்த்திக் கொடுத்து மக்களை வாழ வைத்ததன் காரணத்தால் அந்த அனாதைகளும், விதவைகளும், ஆதரவற்றவர்களும் புரட்சித் தலைவரின் ஆட்சியை மீண்டும் உருவாக்கத் துடித்தார்கள். அதுமாத்திரமல்ல. கிராமப் புறங்களில் ஏழை விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு, பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் இலவச வேட்டி, சேலைகள் கொடுத்தார்கள். அதை வாங்கிக் கட்டிய உள்ளங்களின் வாழ்த்துக்கள்தான் அந்த வாழ்த்துக்களின் காரணத்தால் மீண்டும் புரட்சித் தலைவரின் ஆட்சியே வேண்டும் என்று மக்கள் எண்ணியதன் காரணத்தால் எழுந்ததுதான் இந்த எழுச்சியே தவிர இது அனுதாபம் அல்ல.

கிராமங்கள்தோறும், பேருந்துகள் செல்லாத இடங்களுக்கெல்லாம் பேருந்துகள், சாலைவசதி இல்லாத இடங்களுக்கெல்லாம் சாலைப் பணிகள், குடிநீர்வசதி இல்லாத ஊர்களுக்கெல்லாம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்று சொல்லி தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் பணிகளை ஆற்றி அந்தத்

[திரு. சா. துரைசாமி] [1985 மார்ச் 13

திட்டத்தின் பலன் மக்களுக்குச் சென்று சேர்கின்ற நிலையினை ஏற்படுத்தி இப்படி அத்தனை திட்டங்களையும் இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் ஒரு முன்மாதிரியாக நடைமுறைப்படுத்தினார்கள். புரட்சித் தலைவர் அவர்களின் அந்தச் செயலால் ஏற்பட்ட நன்மை, அந்த நன்மையை அனுபவித்த மக்கள் அதையெல்லாம் மறக்க முடியாமல், ஒதுக்கிவிட முடியாமல், அந்தப் புண்ணியவான் அமெரிக்க மருத்துவமனையிலே இருக்கிறார் என்றாலும் அவர் வந்தாலும் வராவிட்டாலும் அவரையே வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற உணர்வோடு மக்கள் எல்லாம் எழுச்சியோடு வாக்களித்தார்கள். அந்த எழுச்சிக்குப் பெயர்தான் அனுதாபம் என்றால் அந்த அனுதாபம் மீண்டும் தொடரும்.

நீங்கள் எல்லாம் சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற குடிசை வாழ் மக்களைப் பற்றிச் சிந்தித்தது உண்டா என்றால் சிந்தித்தது கிடையாது. உங்களால் குடிசைகளுக்கெல்லாம் மின் விளக்கு தர முடியுமா? கற்பனையில் கூட உங்களால் முடியாது. ஆனால் நல்ல உள்ளம் படைத்த கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களைக் கேட்கிறேன், நீங்கள் அந்தக் கொள்கையிலே, அந்தத் திட்டத்திலே நம்பிக்கையோடு இருந்தால் புரட்சித் தலைவரைப் பாராட்டியிருக்க வேண்டாமா? குடிசையிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற அரிசன ஏழை எளிய மக்களின் குடிசைகளுக்கெல்லாம் மின் விளக்கு தருவது என்பது புரட்சிகரமான சூழ்நிலையில் ஏற்பட்ட திட்டம் அல்லவா? அந்தத் திட்டத்தை ஏற்படுத்திய காரணத்தால் ஏழை அரிசன மக்கள், குடிசைவாழ் மக்கள் புரட்சித் தலைவரை ஆதரித்தார்கள். அதனால் ஏற்பட்ட வெற்றிதான் இமாலய வெற்றியாகும். அந்த வெற்றியை அனுதாபம் என்று சொன்னால் அந்த அனுதாபம் மீண்டும் தொடரும்.

சமுதாயத்தின் கீழ்த்தட்டிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் மேலே வரவேண்டும்; அந்தக் குழந்தைகள் எல்லாம் ஆரோக்கியமாக இருக்கவேண்டும்; எதிர்காலச் சமுதாயம் நன்றாக இருக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையில் ஏற்பட்டதுதான் சத்துணவுத் திட்டம். அந்தத் திட்டத்தைக் கொச்சைப் படுத்தினீர்கள்; கேவலப்படுத்தினீர்கள். ஆனால் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சத்துணவுத் திட்டத்தை அற்புதமான



1985 மார்ச் 13] [திரு. சா. துரைசாமி]

திட்டமாகப் போடுவோம் என்று சொன்னீர்கள். எனவே அந்தத் திட்டத்திலே கோளாறு இல்லை; அதனை எதிர்க்க வேண்டும் என்ற மனப்பக்குவம் கொண்ட உங்களிடத்திலே தான் கோளாறு இருக்கின்றது. ஆகவே அந்தத் திட்டத்தைக் கேவலப்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தீர்கள். அதனால் ஏற்பட்ட இமாலய வெற்றிதானே தவிர அனுதாபம் அல்ல. எனவே எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்று சொல்வார்கள். அதைப்போல இன்றைக்கு இந்த நாட்டிலே படித்துவிட்டு பட்டம் பெற்றுவிட்ட வாலிபர்கள் எல்லாம் படித்துவிட்டு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பட்ட சூழ்நிலை உருவானால் எதிர்காலச் சமுதாயம் வீணாகி விடும் என்று நினைத்தார் புரட்சித் தலைவர். அதனால்தான் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கி, மேல்நிலைப் பள்ளியைத் தொழில் பள்ளியாக்கி இன்றைக்கு சமுதாயம் நல்ல முறையில் வாழ்வதற்குரிய திட்டங்களை புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கினார்கள். இந்தியாவிலேயே ஒரு சிறந்த முன்மாதிரியாக கல்வியில் தொழில் பிரிவுகளை ஏற்படுத்தி யிருக்கிறார். அதையெல்லாம் மாணவர் படை நினைத்துப் பார்த்தது. அதனால் தங்களுடைய பெற்றோர்களையும், தகப்பன்மார்களையும் புரட்சித் தலைவருக்கு வாக்களித்து அவர்களை வெற்றிபெறச் செய்யவேண்டும் என்று சொன்னால் அது எழுச்சியல்ல; அனுதாபம்தான் என்று சொன்னால் அந்த அனுதாபம், அந்த வெற்றி மீண்டும் தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி புரட்சித் தலைவர் அரசு இன்றைக்கு ஆன்மீக நெறியில் ஆற்றியிருக்கிற பணிகள் எல்லாம் அளப்பரியன. இந்த அரசு எல்லோருக்கும் பொதுவாக நடை பெறுகிற காரணத்தால்தான் இந்த ஆட்சியை எல்லா தரப்பு மக்களும், அனைத்து தரப்பாரும் ஏற்றுக் கொண்டார்கள். இப்படி யிருக்கிற ஒரு நிர்வாகத்திற்கு, இலஞ்ச இலாவண்யமற்ற ஆட்சிக்கு, நிர்வாகத் தலையீடு இல்லாத ஆட்சிக்கு, மூன்றாவது முறையாக மக்கள் ஆதரவு தந்திருக்கிறார்களே தவிர, இது அனுதாபம் அல்ல, அனுதாபம் அல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.

[திரு. சா. துரைசாமி] [1985 மார்ச் 13

(முற்பகல் 10-10)

எனது தொகுதி சென்னையிலே இருந்தாலும், அந்தத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதியினுடைய பிரச்னைகளை உரிய அமைச்சர்களிடம் எடுத்துச் சொல்லாத காரணத்தினால், அந்தத் தொகுதி மக்களுடைய நலனில் அக்கறை கொள்ளாத காரணத்தினால், பின் தங்கிய நிலையில் அந்தத் தொகுதி இருந்து கொண்டிருக்கிறது. அத்தொகுதி சென்னை மாநகரத்திலே இணைந்திருந்தாலும், அந்தத் தொகுதி ஒரு கிராமப்புறமாகத் தோற்றம் அளித்துக் கொண்டிருக்கிறது. அத்தொகுதியில் அடிப்படை வசதிகள் இல்லாமல், மக்களுக்குச் சுகாதாரம் இல்லாமல், சீர்கேடான நிலையில் ஒவ்வொரு தெருவும் விளங்கிக் கொண்டிருக்கிற காட்சியினை மாற்றி, நாங்கள் கடந்த ஏழு ஆண்டுக்காலமாக ஓரளவு பணிகளைச் செய்திருக்கிறோம். என்றாலும் அந்த நிலையை மாற்றி அந்தப் பணிகள் மேலும் சிறப்படைய, சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனது தொகுதியில், சென்னையில், தனியார் தெருக்கள் என்று சில தெருக்கள் இருக்கின்றன. அந்தத் தெருக்களுக்கு எந்த விதமான அடிப்படை வசதியும் செய்யாமல் மாநகராட்சி இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, சாலை வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி போன்ற அடிப்படை வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க ஆவன செய்ய வேண்டும். அதோடு சென்னை நகரத்தினுடைய கொசுத் தொல்லையைப் போக்குகின்ற வகையில், எப்படி தன்னிறைவுத் திட்டத்தைப் புரட்சித் தலைவர் நிறைவேற்றினாரோ அதைப் போல், சென்னை மாநகரத்திற்கு மாத்திரம் தனியாக ஒரு செயல் திட்டத்தைக் கொண்டு வந்து அந்த வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இன்றைக்கு, கோட்டூரிலே கழிவுநீர் செல்வதற்கு வசதி கிடையாது, பள்ளிப்பட்டு, ஈக்காடு தாங்கல், மடுவாங்கரை போன்ற என் தொகுதியில் எல்லா இடங்களும் கிராமங்களைப் போல் விளங்கிக் கொண்டிருக்கின்றன. எந்தவிதமான அடிப்படை வசதியும் இல்லை. ஆகவே, நடப்பு நிதி ஆண்டில், சாலைவசதி, குடிநீர் வசதி, கழிவு நீர் வசதி போன்ற வசதிகளை அளிக்க நல்ல பல திட்டங்களை தீட்டி, எனது தொகுதி பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று அரசை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.



1985 மார்ச் 13] [திரு. சா. துரைசாமி]

இன்றைக்குக் குடிசை மாற்று வாரியம் பல்வேறு பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. புதிதாக வீடு கட்டும் திட்டத்தினை இப்பொழுது நடைமுறைப்படுத்தாமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். நிறுத்தி வைத்திருப்பதன் காரணத்தை அறிந்து, சென்னை மாநகரில் குடிசை மாற்று வாரியப் பணிகளைத் தொடர வேண்டும். புதிதாகப் போடப்பட்டுள்ள குடிசைகளை அகற்றி, அந்த இடங்களில் மாடி வீடுகள் கட்டுகின்ற திட்டத்தைத் தொடர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் கோட்டூர்புரத்தில் உள்ள தீ பிடிக்காத வீடுகளை மாற்றி, மாடி வீடுகள் கட்டுகின்ற திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். மர்மலாங் பாலம் அருகே உள்ள குடிசை வீடுகளை மாற்றி, மாடி வீடுகள் கட்டித் தர அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்ற எனது நல்லெண்ணத்தையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதி நெசவாளர்கள் மிகுந்த பகுதி. கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொண்டு வந்துள்ள சட்டத் திருத்தத்தைத் தனியார் நெசவாளர்களுக்கும் பொருந்தும் வகையில் கொண்டு வந்து, கூட்டுறவு நெசவாளர்கள் பெறும் அடிப்படை உரிமைகளை தனியார்களும் பெறும் வகையில் அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்களுடைய வருமானத்தை அதிகரிக்க, வெளிநாட்டு மார்க்கெட்டில் அரசாங்கமே நேரடியாக ஒப்பந்தம் செய்ய வேண்டும். கைத்தறி லுங்கிகளை ஏற்றுமதி செய்ய தனியார்களுக்கு உரிமம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு என்னுடைய தொகுதியில் ஈக்காடுதாங்கல் பகுதியில், கிண்டியிலேயிருந்து அசோக் பில்லர் வரை இருக்கிற 200 அடி நெடுஞ்சாலையின் இடையில் தரைப் பாலம் போட்டிருக்கிறார்கள். வெள்ளம் வந்து விட்டால் அங்கே வாகனம் செல்ல முடியாது. ஆகவே, சென்னை மாநகரை இணைக்கின்ற அந்தப் பகுதியில் அரசு மேம்பாலம் கட்டும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சா. துரைசாமி] [1985 மார்ச் 13

சென்னையில் பல்வேறு நகர்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அங்கே வாழ்கின்ற மக்கள் பல்வேறு குறைகளைச் சொல்லி இருக்கிறார்கள். குறிப்பாக, கோட்டூர்புறத்திலே வீட்டு வசதிவாரியக் குடியிருப்புப் பகுதி எம்.ஐ.ஜி. காலனி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிக்கு மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பெயரை வைக்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கேட்டிருக்கிறார்கள். அதைப் அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சைதை மர்மலாங் பாலத்திற்கு அருகில் இரண்டு புறங்களிலும் இருக்கிற குடிசைப் பகுதிகளில் அரிசன மக்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். அந்தப் பகுதிக்கு அம்பேத்கார் அவர்களின் பெயரை வைக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது பேச அனுமதி தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவையில் இல்லா விட்டாலும், மாண்புமிகு முதல்வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே நீங்கள் எல்லோரும் மக்களுக்கு நன்மை செய்ய பாடுபடுங்கள் எனக்கூறி உங்களை வாழ்த்துகிறேன். எங்கள் இதய தெய்வம் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் ஆசியோடு எனது உரையைத் துவக்குகிறேன். என்னை இந்தச் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுத்து அனுப்பிய விருதுநகர் தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களின் உரை மிகுந்த ஏமாற்றமளிப்பதாக இருக்கிறது என இந்த அவையிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆளுங்கட்சியின் தேர்தல் அறிக்கையை செயல்படுத்துவதைப் பற்றிக் கூறாமல், ஏழை மக்களின் வாக்குகளை எப்படி பெறுவது என்ற முறையில் தான் அந்த அறிக்கை அமைந்திருக்கிறது. அரசின் கொள்கைகள் மீது ஆதரவும், மாண்புமிகு முதல்வர் மீதுள்ள நம்பிக்கையிலும் தான் மக்கள் மறுபடியும் இந்த ஆட்சி அமைய, மக்கள் தீர்ப்பளித்ததாகக் கூறியிருக்கிறார். இதை நான் ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. ஆளுங்கட்சிக்குரிய வசதிகளான பிரச்சார சாதனம், சினிமா, டெலிவிஷன் மூலமாக வாக்காளர்களில் பாதிபேராக உள்ள பெண்களின் அனுதாபத்தைப்



1985 மார்ச் 13] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

பெற்றுதான் இந்த ஆட்சி மறுபடியும் வந்திருக்கிறது. நாட்டு அரசியலை சினிமா மூலமும், டெலிவிஷன் மூலமும் பார்த்துத் தான் தெரிந்து கொள்ளக்கூடிய முறையில் நம் நாட்டுப் பெண்களுடைய வாழ்க்கை முறை இருப்பது நாம் அறிந்ததே. ஆளும் கட்சி "இதயக்கனி" என்ற படத்திலுள்ள ஒரு பாடல் காட்சியை அனைத்துத் திரையரங்குகளிலும் காட்டச்செய்து அதன்மூலம் அனுதாபத்தை பெற்றதை மறுக்க முடியுமா? தேர்தல் நேரத்தில் வேட்பாளருக்கு அளிக்கப்பட்ட ஒலிபெருக்கி விளம்பரங்கள் மற்றும் பொதுக் கூட்டங்கள் காலக்கெடு முடிந்த பின்புகூட இரவெல்லாம் சட்டவிரோதமாக தெருத் தெருவாக வீடியோக்களைக் காட்டி மக்களின் அனுதாபத்தைப் பெற்றீர்கள். இதை மறுக்க முடியுமா?

ஆளுநர் அவர்கள் வறுமை ஒழிப்புக்கு ஆவன செய்திருப்பதாக கூறியிருக்கிறார். லாட்டரி சீட்டுக்களை அரசே விற்பனை செய்கிறது. மாநிலம் முழுவதும் மதுக்கடைகளைத் திறக்க அனுமதித்திருக்கிறீர்கள். இதன் மூலம் ஏழை மக்கள் சம்பாதித்த பணத்தை பிடுங்கிக் கொள்கிறீர்கள். பிறகு எப்படி அவர்களின் வறுமை ஒழியும் என கேட்க விரும்புகிறேன். ஆதலால் இவ்விரண்டையும் உடனே தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கைப் பிரச்சினை பற்றிய விஷயத்தில் ஆளுநர் உரையில் வேண்டுகோள் விடுத்ததுடன் முடிந்து விடுகிறது. தினமும் அங்கு சுட்டுக் கொல்லப்படும் நமது இனமக்கள் பற்றி ஒரு வார்த்தைக் கூட இல்லை. அங்கு நடைபெறும் வன்முறை தாக்குதல்களால் அகதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. இவ்விரண்டையும் தடுக்க சரியான ஒரு தீர்மானத்தை சட்டமன்றத்தில் நிறைவேற்றி மத்திய அரசை தக்க நடவடிக்கையெடுக்க வலியுறுத்த வேண்டும். வருகின்ற அகதிகளை இலங்கைத் தமிழர்கள் என்று கூறுவதை விடுத்து, இலங்கை இந்தியர்கள் என்று கூற வேண்டும். அவர்களை அனைத்து மாநிலங்களிலும் குடியேறச் செய்து அவர்களின் வாழ்க்கையினை வளம்பெற செய்ய வேண்டும். இதையும் மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1985 மார்ச் 13

அதேபோல திருவனந்தபுரத்தில் இறங்கிய நம்முடைய மக்களை கொல்வதற்காக வந்த இராணுவத் தளவாடங்களை இரண்டு நாட்களுக்குப் பிறகு அங்கே செல்வதற்கு நம்முடைய மத்திய அரசு அவற்றை அனுமதித்து இருக்கிறது. இதனை நீங்கள் கண்டனம் செய்திருக்கிறீர்களா என்பதையும் அறிய விரும்புகிறேன். நம்முடைய பிரதமர் அவர்கள் ஒரு கட்சி ஆட்சி நடத்த வேண்டுமென்கிற கொள்கையைக் கொண்டிருப்பதால் இலங்கைப் பிரச்சினையில் அவர்கள் பாராமுகமாக இருக்கிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து காமராஜ் மாவட்டம், முத்துராமலிங்கம் மாவட்டம் எனப் பெயர் சூட்டியதை வரவேற்கிறேன். அதேபோல பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெயரால் ஒரு பஸ் போக்குவரத்துக் கழகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட அமைப்புகள் வருகிற போது விருதுநகரில் அனைத்துத் தலைமை அலுவலகங்களும் அமைய வேண்டும். குறிப்பாக மாவட்ட தலைமை நீதிமன்றம் உடனடியாக விருதுநகருக்கு மாற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அரசு அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கோருகிறேன்.

(முற்பகல் 10-20)

அடுத்து மின்சாரம். மின்சாரத்தைப் பொறுத்த மட்டில் மின் வெட்டு, தொழிற்சாலைகளையும் விவசாயத்தையும் கடுமையாகப் பாதித்திருக்கிறது. எந்த முறையில் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென பார்த்து, நிவர்த்தி செய்து, தொழிலாளர்களையும், விவசாயிகளையும் காப்பாற்றும் படியும். தேர்வுக்கு படிக்கும் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு மின்வெட்டு ஏற்படாதவாறு பார்த்துக்கொள்மாறும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தொழில் வளர்ச்சி. தொழில் வளர்ச்சியில் பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் ஆட்சியில் தமிழகம் மூன்றாவது இடத்தை வகித்து வந்தது. இன்று எந்த இடத்தை வகிக்கிறது என்பது உங்களுக்கே தெரியும். அதை பழைய நிலைக்காவது கொண்டுவர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1985 மார்ச் 13] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

அடுத்தபடியாக புதிய திட்டங்கள். ஆளுநர் அவர்கள் புதிதாக அறிவித்துள்ள 15 திட்டங்களில் 1 முதல் 14 முடியவுள்ள திட்டங்களை மக்கள் புகாருக்கு இடமில்லாமல் நிறைவேற்றக் கேட்டுக்கொள்கிறேன். 15-வது திட்டம் பதுக்கல், கள்ளச் சந்தை பற்றிய குறிப்பிடுகிறது. நான் இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, உற்பத்தி அதிகமாக இருக்கும் பொருள்களின் விலை தானாகவே குன்றி விடுவது நாட்டு நடப்பு. விலை யேறுவதற்குக் காரணம் விளைச்சல் இல்லாதது அல்லது அரசு அந்நிய செலாவணி பெறுவதற்காக சரக்குகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால்தான். அதை விடுத்து வணிகர்களைக் குறை கூறுவதும் நியாயமில்லை. வணிகர்களும் சமுதாயத்தில் ஓர் அங்கம்தான் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். மற்றபடி தொழிலாளர்களுக்கு கொடுக்கக் கூடிய கூலியோ, போனஸோ அதிகமாகக் கொடுக்கச் சொல்வதில் தவறில்லை. அதை விடுத்து அதிக வியாபாரம் செய்பவர் அபராதம் விதிப்பதுபோல் கூடுதல் வரி விதிப்பது, வரி அதிகாரிகள் திடீர் சோதனை செய்வது விருதுநகர் போன்ற நகரங்களில் நான்கு பக்கங்களும் சோதனைச் சாவடிகள் நிறுவியிருப்பது போன்ற கெடுபிடிகளால், வணிகர்களை நசுக்க வேண்டாமென்றும். அவர்களை வாழ விடுங்கள் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். அனைத்து பொருள்களுக்கும் ஒருமுனை வரி விதித்தால் அரசுக்கு தற்பொழுது கிடைக்கும் வருமானத்தை விட அதிகம் வருமானம் கிடைக்கும். வரி ஏய்ப்புக்கும் வழி இருக்காது. மிளகாய் வத்தல், தனியா, புளி, வெல்லம் போன்ற அத்தியாவசியப் பண்டங்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்றும், வணிகர்கள் உரிமம் பெறும்பொழுது பட்டியலில் சேர்க்கின்ற மிளகாய் வத்தல், புளி, வெல்லம் போன்ற பொருள்களை நீக்கிவிடுமாறும் இந்த அரசினைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப்பற்றி சிலவற்றைக் கூற விரும்புகிறேன். எனது தொகுதியைப் பொறுத்த மட்டில் மக்களின் அத்தியாவசிய தேவையான குடி தண்ணீர், சுகாதாரம், சாலை வசதி சரியாகப் பராமரிக்கப்படவில்லை. தனது ஆட்சி காலத்தில் நாட்டை வளப்படுத்திய பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் பிறந்த தொகுதி இன்றைக்கு பாலைவனமாக காட்சியளிக்கிறது. கிராமச் சுகாதார நிலையங்களில் மருத்துவ

அதிகாரிகள் கிடையாது. நகராட்சியில் பணம் கிடையாது. 75,000 மக்கள் உள்ள நகரத்தில் குப்பைகளை அகற்ற ஒரே ஒரு லாரிதான் உள்ளது. குடிநீர் திட்டத்திலுள்ள பம்ப் செட்டை ரிப்பேருக்காக கொடுத்ததை இரண்டு ஆண்டுகளாயும் வாங்குவதற்கு பணம் இல்லை. கிராமங்களில் பள்ளிக் கட்டடங்கள் நன்கு பராமரிக்கப்படாமல் இருக்கிறது. சத்துணவுத் திட்டம் முறையாக செயல்படவில்லை. குழந்தைகள் ஒரு ஊரிலிருந்து மறு ஊருக்குச் சென்று சாப்பிட வேண்டியது இருக்கிறது. சாலை வசதி சரியாக இல்லாததால் கிராமப்புறங்களில் பஸ் சரியாகச் செல்லவில்லை. லைட் வசதி கிடையாது. முதியோருக்கு சரியாக பென்ஷன் கிடைக்கவில்லை. நகராட்சி ஆணையர் கிடையாது. தனி அதிகாரியும் கிடையாது. ஆறு மாதத்தில் ஊராட்சித் தேர்தல் நடத்துவோம் என சொன்னீர்கள். ஆளுநர் உரையில் அதைப்பற்றி பேச்சே இல்லை. ஒருமுறையல்ல; மூன்று முறை நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். ஆனால் உள்ளாட்சித் தேர்தலை நடத்த நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள் என்று நான் கருதவில்லை. இரண்டுமுறை ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு முறை உள்ளாட்சித் தேர்தலை நடத்தியிருக்கிறது. மூன்றுமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிக்கு வந்திருக்கிறோம் என்று மார்தட்டிக் கொள்ளும் நீங்கள் உடனடியாக உள்ளாட்சித் தேர்தலை கண்டிப்பாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி, ஊராட்சி இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினராக என்னை எந்த வேலையும் பார்க்க விட மாட்டேன் என்று என் தொகுதியில் பொதுக்கூட்டத்தில் பேசிய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் கூறியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்னிப்பேச்சில் விவகாரத்திற்குரிய பிரச்சனைகளை, குற்றச்சாட்டுக்களை தவிர்ப்பது நல்லது. (குறுக்கீடு) நீங்கள் ஒரு உரிமைப் பிரச்சனையை எழுத்து மூலம் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது.





திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்: உரிமைப் பிரச்சனையாக எழுதிக் கொடுத்திருக்கிறேன். அதை அவைத் தலைவர் அவர்கள் எடுத்துக்கொள்வதாக இருந்தால் நான் இப்போது பேசவில்லை. பத்திரிகையிலே எல்லாம் வந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளிலே வருகின்ற அத்தனையையும் நம்பி இங்கே கொண்டு வந்து பேசக்கூடாது. அதை உரிமைப் பிரச்சனையாகவோ, அல்லது ஒழுங்குப் பிரச்சனையாகவோ எழுதிக் கொடுக்கலாம். எந்தப் பிரிவின் கீழ் அதைக் கொண்டுவர முடியுமோ—மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக—அப்படிக் கொண்டு வரலாம். இங்கேயிருக்கிற எங்களுக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. நீங்கள் ஒன்று சொல்ல, அதற்கு இங்கேயிருந்து பதில் சொல்ல, எங்களுக்கும் ஒன்றும் புரியாத நிலை ஏற்படும். எங்களுக்கும் அந்த விஷயங்கள் தெரிகிற அளவிற்கு நீங்கள் முறையாக எழுதிக் கொடுங்கள்.

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்: அந்த உரிமைப் பிரச்சனையை அவையில் கொண்டுவருவதற்கு அவைமுன்னவர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் எழுதித்தான் கொடுத்திருக்கிறோம்.

அதேபோல் கோயம்புத்தூர் ஜில்லாவில் 6 மில்கள் 6 மாதத்திலிருந்து 2 வருடங்கள் வரை மூடிக் கிடக்கின்றன. அதை அரசு ஏற்று நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விருதுநகர் நாளை மறுதினத்திலிருந்து அது காமராஜர் மாவட்டத்தின் தலைநகரமாக வர இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த மாவட்டம் மிகவும் பின்னடைந்த மாவட்டமாக இருக்கிறது. விருதுநகரில் 75 ஆயிரம் மக்கள் இருக்கிறார்கள். அங்கே ரெயில்வே மேம்பாலம் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ரயில்வே லைனுக்கு கீழ் பக்கத்தில் தான் கல்லூரிகள் மருத்துவமனைகள், மேல்நிலைப் பள்ளிகள், பாலிடெக்னிக்குகள் எல்லாம் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற மாணவர்களும் மற்றவர்களும் ரயில்வே மேம்பாலம் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அமைச்சர்கள்கூட

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1985 மார்ச் 13

அங்கே வருகை தந்திருந்தபோது இதை பார்த்திருக்கிறார்கள். சிலகாலம் அவர்களும் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே அந்தப் பகுதிக்கு பல வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சியிலே பணம் இல்லை என்று சொல்கிறார்கள். நகராட்சிக்கு கடன் கொடுத்தால், அதை அவர்கள் வட்டி கூட கட்ட முடியாத நிலையிலே இருப்பதாக சொல்கிறார்கள். எனவே நகராட்சிககு மானியமாக நிதியுதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கேயிருக்கின்ற மருத்துவமனையில் போதிய படுக்கை வசதிகள் கிடையாது. தற்போது 100 படுக்கைகள்தான் இருக்கின்றன. அங்கே ஆப்பரேசன் செய்யும்பொழுது மின்சாரம் தடைபட்டால் மின் உற்பத்தி செய்ய ஜெனரேட்டர்கள் கிடையாது. அதோடு காலரா நோய் வந்தவர்களுக்கு என்று தனியாக ஒரு ஷெட் கட்ட வேண்டும் என்று கேட்டால், முனிசிபாலிட்டிதான் அதைச் செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். முனிசிபாலிட்டியிலே பணம் இல்லை. காலரா வந்தவர்களுக்கு என்று தனியாக ஷெட் இல்லாத காரணத்தால் அவர்களை, மற்ற நோயாளிகளோடு சேர்த்து வைத்திருக்கிறார்கள். அதனால் காலரா நோய் மற்றவர்களுக்கும் பரவுகின்ற வாய்ப்பிருக்கிறது. எனவே அரசாங்கம் இவைகளுக்கு எல்லாம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. என். விஜயபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வழிமொழிந்து பேசுவதற்கு முன்னால், என்னை ஆளாக்கி பெருமைப்படுத்திய தமிழக முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களுக்கும் முதலில் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய பேச்சைத் தொடருகிறேன்.

(முற்பகல் 10-30)

அவர்கள் இன்றையதினம் புரட்சித் தலைவர் அவர்கள் மூன்றாம் பிறவி எடுத்து மூன்றாம் முறையாக இன்றைக்கு தமிழக முதல்வராக பொறுபேற்றிருக்கிறார்கள், அவருடைய உடல் நலம்



1985 மார்ச் 13] (திரு. என். விஜயபாலன்)

வலிவு பெறுவதற்கும், வளம்பெறுவதற்கும் சிறந்த மருத்துவ வசதிகளை எல்லாம் அளித்த மறைந்த பாரத் பிரதர் இந்திரா காந்தி அவர்களுக்கும், தொடர்ந்து புரட்சித் தலைவருடைய உடல் நலத்தில் அக்கறை கொண்டு பல்வேறு வசதிகளைத் தந்து வரும் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கும், அனைத்து மருத்துவர்களுக்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த அவையிலே பேசிய எதிரணி உறுப்பினர்கள் பலர், புரட்சித் தலைவர் அரசு கொள்கையற்ற அரசு, புரட்சித் தலைவர் அரசு லட்சியமற்ற அரசு, இந்த அரசின் கொள்கைகளை மக்கள் மன்றத்தின் முன்வே வைக்கவில்லை என்றெல்லாம் பல்வேறுதரப்பட்ட கருத்துக்களைச் சொன்னார்கள். கொள்கையையும் லட்சியத்தையும் எடுத்து வைத்து மக்கள் முன்னால் வாக்குகளை கேட்டவர்கள் எப்படி வெற்றி வாய்ப்பை இழந்தார்கள் என்பதை அவர்களுடைய முடிவிற்கே நான் விட்டு விட விரும்புகிறேன். புரட்சித் தலைவர் அவர்களின் அரசு நல்ல கொள்கையையும், நல்ல லட்சியங்களையும் கொண்டு, மக்களுக்கு பல்வேறு பட்ட உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற நல்ல உணர்வையும் கொண்டிருக்கிற பேரியக்கமாக வளர்ந்திருக்கிற காரணத்தினால்தான், மக்கள் அதிலே நம்பிக்கைக் கொண்டு, இந்த ஆட்சி தேவை என்றும், புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றால்தான் நாடு நல்ல முறையில் வளம் பெற முடியும் என்ற நல்ல நோக்கத்தோடும், அவரை இன்றையதினம் ஆட்சி பீடத்திலே அமர்த்தியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு, புரட்சித் தலைவர் அவர்கள் மக்களுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வறுமையால் வாடுகின்ற மக்களுக்காகவும், விவசாயப் பெருங்குடி மக்களுக்காகவும், தொழிலாளப் பெருமக்களுக்காகவும், சமுதாயத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற அனைத்து தரப்பினர்களும் வளம் பெற வேண்டும் என்பதற்காக, பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அவைகளை நடைமுறைப் படுத்தியதன் காரணமாகத்தான் இன்றைக்கு அவரைத் தேடி வெற்றி வாய்ப்பு வந்திருக்கிறது என்பதை தயவுசெய்து யாரும் மறந்துவிடக் கூடாது. எதிர்க்கட்சித் தரப்பில் பேசியவர்கள் அனைவரும்

மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருடைய அனுதாபமும், புரட்சித் தலைவர் அவர்களின் உடல்நிலையால் ஏற்பட்ட அனுதாபமும் தான் இந்த வெற்றிக்கு காரணம் என்றார்கள். 1977 ஆம் ஆண்டு தமிழகத்தினுடைய முதல்வராக புரட்சித் தலைவர் அவர்கள் வெற்றி பெற்று வந்த போது இந்த அனுதாபமும் அலைகளும் இருந்ததா? 1980 ஆம் ஆண்டு மீண்டும் அவர் வெற்றி பெற்று தமிழகத்தின் முதலமைச்சராக வந்தபோது, இந்த அனுதாப அலைகள் இருந்தனவா என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எதற்காகக் கேட்கிறேன் என்றால், 1977-லே தமிழகத்தின் முதல்வராக புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றார்கள். 1980 ஆம் ஆண்டும் தமிழக முதல்வராக புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிறார்கள். இன்றையதினம் 1985 ஆம் ஆண்டும் தமிழகத்தினுடைய முதல்வராக புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிறார்கள் என்றால், கொள்கை இல்லாமல், லட்சியம் இல்லாமல், இந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்யாமல் இப்படிப்பட்ட மாபெரும் வெற்றியை தமிழக மக்கள் அளிப்பார்களா என்பதை தயவுசெய்து, நீங்கள் இந்த நேரத்திலே உணர்ந்து பார்க்க வேண்டும்.

எதற்காக திருப்பித் திருப்பிச் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு அனுதாப அலை என்று பேசிக் கொண்டிருப்பவர்கள், தேர்தல் நேரத்தில் எப்படி எல்லாம் பேசினார்கள், மக்களிடம் போய் என்னென்ன பொய் கூறினார்கள் என்றெல்லாம் உங்களுக்குத் தெரிந்திருக்கும். தமிழக மக்கள் புரட்சித் தலைவர் அவர்கள் மீது அன்பு கொண்டவர்களாக, நம்பிக்கை கொண்டவர்களாக, புரட்சித் தலைவர் அவர்கள்தான் நாட்டுக்கு நன்மை செய்வார்கள் என்பதைப் புரிந்து கொண்டவர்களாக இருப்பதைக் கண்டுதான், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரைச் சொன்னால்தான் வாக்களிப்பார்கள் என்பதை எண்ணிப் பார்த்துக் கொண்டு, எதிர் அணியில் இன்றைக்கு பேசிக் கொண்டிருக்கிற தலைவர், புரட்சித் தலைவர் அவர்களுடைய புகைப்படத்தை, தன்னுடைய புகைப்படத்தோடு போட்டு, பல இடங்களில் போஸ்டர் ஒட்டிய ஒரு வெட்கக் கேடான செயலை செய்து வாக்கு பெற பார்த்தார்கள். இப்படிப்பட்ட செயலை வேறு எந்தத் தலைவரும் செய்யவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





எப்படியெல்லாமோ புரட்சித் தலைவர் அவர்களை இழிவுபடுத்தி பேசி விட்டு, அவருடைய புகைப்படத்தையே போட்டுக் கொண்டு வெற்றி பெற எண்ணியிருக்கிறார்கள் என்றால், எப்படியாவது தமிழகத்தினுடைய முதல்வராக வந்து விட வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவே தவிர, இந்த நாட்டு மக்களுக்கு உதவிகளைச் செய்யவேண்டும், அவர்களுக்கு பல்வேறுபட்ட நன்மைகளைச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தால் அல்ல என்றுதான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். இப்போது பெருமையாகப் பேசுபவர்கள், இன்றைய முதல்வராக இருப்பவருக்கு அன்றைய முதல்வர்தான் ஒரு காலத்தில் தலைவராக இருந்தார் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அன்றையதினம் அவர் முதல்வராக வருவதற்கே, இன்றைய முதல்வராக இருப்பவர்தான் வாய்ப்பு அளித்தார் என்பதையும் தமிழகம் இன்றைதினம் மறந்துவிட முடியாது.

புரட்சித் தலைவர் அவர்களுடைய வாழ்க்கையை உற்று கவனித்தால், அவர் பல்வேறு சோதனைகளுக்குப் பின்னால், பல்வேறு சங்கடங்களுக்குப் பின்னால் மாபெரும் வெற்றிகளை அடைந்திருக்கிறார்கள் என்பதை கடந்த கால வரலாறு சுட்டிக் காண்பித்துக்கொண்டிருப்பது புரியும். அவர் திரை உலகத்திலே தனிப்பட்ட ஈடுபாடு கொண்டு உழைத்தபோது அவருக்கு பல்வேறுபட்ட சங்கடங்கள் ஏற்பட்டு, பிறகு அவர் அந்த சங்கடங்களை சமாளித்து, அங்கே தனிப்பட்ட இடத்தைப் பெற்று வெற்றி பெற்று சிறப்பாக வாழ்ந்த வரலாறு உங்களுக்கெல்லாம் தெரியும் என்று கருதுகிறேன். அதேபோல அரசியல் உலகத்திலேயும் பல்வேறு சங்கடங்களும், பல்வேறு சோதனைகளும் ஏற்பட்டு, அந்த சோதனைகளில் மீறி வெளிவந்துதான் அவர் மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதும் உங்கள் அனைவருக்கும் தெரியும் என்று கருதுகிறேன்.

முதன் முதலாக புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, தமிழகம் வறட்சியால் கொடிய சூழ்நிலைக்கு உருவாக்கப்பட்டது. அந்த நேரத்திலே தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் விரைந்து போர் கால நடவடிக்கையைப் போல, வறட்சியைப் போக்க பாடுபட்டு, மக்களின் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை போக்கிய காட்சி இந்த நாடு அறியும். அதற்குப் பிறகு அவர் ஆட்சிப் பொறுப்பை

[திரு. என். விஜயபாலன்] [1985 மார்ச் 13

ஏற்கிற நேரத்தில், மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தவித்துக் கொண்டிருந்தார்கள். பல கொடுமைகளுக்கு ஆளாகி, உடைமை களையும், உயிர்களையும் இழந்த எங்களுக்கு யார் இருக்கிறார்கள் பாதுகாக்க என்று அவர்கள் கதறியபோது, உங்களுக்கு நான் இருக்கிறேன் என்று அபய குரல் தந்து, அவர்களை 17, 20 நாட்கள் பராமரித்து அவர்களுக்கு உணவு, உடைகள் இலவச மாகத் தந்து, இன்னும் பல்வேறு உதவிகளையும் செய்த, புரட்சித் தலைவர் அவர்களை எண்ணிப் பார்க்கவேண்டும். இன்றைய தினம் தமிழகத்தினுடைய முதல்வராக புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்கு பிறகு இலங்கையி லிருந்து வருகின்ற தமிழர்கள் அகதிப் பிரச்சனை ஒரு பெரும் பிரச்சனையாக இருந்துகொண்டிருக்கிறது. அதையும் தமிழக புரட்சித் தலைவர் அவர்கள் அறிவாற்றலோடு, நிர்வாகத் திறனோடு எப்படி சமாளிக்க வேண்டுமோ அப்படி நல்ல முறையிலே சமாளித்து, அகதிகள் பிரச்சனைகளை நல்ல முறையிலே சீர்படுத்தினார்கள். இந்த இலங்கை தமிழர் பிரச்ச னையை பற்றி பேசுகின்றபோது, யாரோ ஒரு சிலர் தான் இங்கே தமிழர்களாக இருப்பது போலவும், மற்றவர்கள் எல்லாம் வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் போலவும், தமிழர்கள் நாங்கள் தான் வேறு யாரும் இல்லை என்ற உணர்வோடு பேசிக்கொண்டிருக்கி றார்கள். அந்த உணர்வு அவர்களுக்கு இருக்கிறதா என்றால் இல்லை. எந்த அளவிற்கு அவர்களுடைய உரையில் பேச்சில் வீரத்தை காட்டுகிறார்களோ, அந்த அளவுக்கு செயலில் இல்லை என்பது என்னுடைய பணிவான கருத்தாகும். தமிழக புரட்சித் தலைவர் அவர்கள் கடந்த காலத்தில் இதே சட்டமன்றத்தில் இலங்கை தமிழர்களுக்காக எப்படிப்பட்ட போர் குரலைத் தந்தார்கள் என்பதை நாடு அறியும். இலங்கைத் தமிழர்களுக் காக, அனைத்து கட்சித் தலைவர்களையும் சந்தித்து பேசி இலங்கைத் தமிழர்களுக்காக, அவர்களுடைய எதிர்காலம் வளமாக இருக்க வேண்டும் என்பதற்காக அரசே ஒரு வேலை நிறுத்தத்தை தமிழகம் முழுவதும் உருவாக்கியதை நிச்சயமாக யாரும் மறந்து விட முடியாது. இலங்கைத் தமிழர்கள் வாழ்வு பெறவேண்டும் அவர்களுக்கு கொடுமை இழைக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டு மென்று, மறைந்த இந்திரா காந்தி அம்மையாரிடம் எடுத்துச் சொல்லி அவர்களும் தேவையான உதவி செய்ததை யாரும் மறந்துவிட முடியாது. எதற்காக இவற்றை குறிப்பிடுகிறேன் என்றால் மாண்புமிகு புரட்சித் தலைவர் இன்றைக்கு உலகத்திலே



1985 மார்ச் 13] [திரு. என். விஜயபாலன்]

இருக்கின்ற தமிழர்கள் கண்ணீர் விடுகிறார்கள் என்றால் அந்தக் கண்ணீரை துடைக்கின்ற ஒரு மாபெரும் தலைவராக இருக் கிறார்கள்.

அந்த அடிப்படையிலே, சரித்திர நிகழ்ச்சியாக இலங்கைத் தமிழர்களுக்காக எந்த அளவுக்கு உதவிகளை புரிந்தார்கள் என்பது நீங்கள் அறிந்த ஒன்று. இலங்கைத் தமிழர்களுக்காக கண்ணீர் விடுகிறேன் என்று கதறிக்கொண்டிருப்பவர்கள், அரசியல் லாபத்தை பெறுவதற்காக, மக்களை ஏமாற்றுவதற்காக நாடகமாடிகளாக இருக்கிறார்களே தவிர உண்மையாக தமிழர் கள்மீது உணர்வு கொண்டவர்களாக இல்லை என்பது என்னு டைய கருத்து. இன்றைக்கு பேசிக்கொண்டு இருக்கின்ற எதிர் வரிசை உறுப்பினர்கள், 1974-ம் ஆண்டு, இலங்கையிலே நம்முடைய தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட காட்சியை பத்திரிகையிலே படித்திருப்பார்கள். நம்முடைய இன சகோதரிகள் கற்பழிக்கப் பட்ட காட்சியை, கொலை செய்யப்பட்ட காட்சியை பத்திரி கையிலே படித்து இருப்பார்கள். அன்றைய முதல்வர், இன் றைக்கு இலங்கைத் தமிழருக்காக வாதாடுகிறேன், இலங்கைத் தமிழர்களுக்காக கண்ணீர் வடிக்கிறேன் என்று கூறுகிறார். ஆனால் அன்றைய தினம் என்ன கூறினார்கள்? அது உள்நாட்டு பிரச்சனை, நாம் தலையிட முடியாது என்று சொன்னார்கள். இலங்கைத் தமிழர்களுக்காக ஒரு வார்த்தை கூட பரிந்து பேசத் தகுதியற்றவர்கள் எல்லாம் இன்றைக்கு அரசியல் லாபம் பெற வேண்டும் என்பதற்காக சொல்கிறார்கள். அவர்களை நாடு அடையாளம் கண்டுகொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டு வது என்னுடைய கடமை.

இன்றையதினம் புரட்சித் தலைவருடைய ஆட்சியில் எந்த அளவிற்கு திட்டங்கள் தீட்டி செயல்பட இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 44½ கோடி ரூபாய், சாலை வசதி களுக்கு, சாலைகளை சீர்படுத்துவதற்கு என்று அரசு செய்தி ருப்பது ஒரு மாபெரும் சாதனை என்பதை தெரிவித்துக்கொள் கிறேன். தமிழகத்தின் பல்வேறுபட்ட இடங்களில் குறிப்பாக கிராமப்புறங்களில், சாலை வசதிகள் இல்லாமல் எந்த அளவுக்கு மக்கள் அவதிக்கு உள்ளானார்கள் என்பதை நாடு அறியும். சாலையை சீர்படுத்துவதற்கு இன்றைக்கு 44½ கோடி ரூபாய்

[திரு. என். விஜயபாலன்] [1985 மார்ச் 13]

இந்த அரசு செலவு செய்தது மட்டுமல்லாமல் இன்னும் பல்வேறு பட்ட திட்டங்களை தீட்டி செலவு செய்வதற்கும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் குறைபாடுகளை குற்றங்களை எடுத்துச் சொல்கின்றவர்கள், புரட்சித் தலைவர் அரசு இந்த நாட்டிற்காக செய்த நன்மைகளை, இந்த அரசு இந்த இந்த காரியங்களை செய்திருக்கிறது, பாராட்டுகிறேன் என்று சொல்வதோடு இன்னின்ன குறைபாடுகள் இருக்கின்றன, இவற்றையும் இந்த அரசு செய்ய முன்வரவேண்டும் என்று சொன்னால் அவர்களை நாம் பாராட்ட முடியும்.

(முற்பகல் 10-40)

ஆனால் அதற்கு மேலாக இந்த அரசு செய்கின்ற அனைத்தையுமே, குற்றம் சொல்லவேண்டுமென்பதற்காக, குறை சொல்லவேண்டுமென்பதற்காக, எப்படியாவது மக்கள் முன்னால் இந்த அரசைக் குறைகூறி, குற்றம் சொல்லி, எப்படியாவது அகற்றிவிட வேண்டுமென்ற தவறான நோக்கத்தின் காரணமாக இன்றைக்கு அவர்கள் பேசுகின்ற காட்சியை நாம் பார்க்கிறோம்.

தமிழகத்தில் வயது முதிர்ந்தவர்கள் இத்தனை பேருக்குத்தான் ஓய்வூதியம் வழங்கவேண்டுமென்ற நிலையை மாற்றி, தகுதி வாய்ந்தவர்கள் எத்தனை பேர்கள் இருந்தாலும், அத்தனை பேருக்கும் ஓய்வூதியம் அளிக்கலாம் என்று மாற்றித்தந்த அரசு தான் புரட்சித் தலைவர் அரசு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அதுபோன்று மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து, மறைந்த தலைவர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் அவர்களின் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். அதேநேரத்தில் நிர்வாகம் நல்ல முறையில் நடக்கவேண்டுமென்று பிரித்து, புரட்சித் தலைவர் அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மாவட்டங்கள் தோறும் தொழிற்துறைகள் வளர்வதற்கும், பல்வேறு தொழிற்கூடங்கள் உருவாவதற்கும், நமது அரசு முயற்சித்து, நடைமுறைப்படுத்திக் கொண்டிருப்பதை நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1985 மார்ச் 13] [திரு. என். விஜயபாலன்]

அதுபோன்று 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்கு, இலவசச் சீருடை, இலவசப் பாடப் புத்தகம் தருவதற்கு புரட்சித் தலைவர் அரசு திட்டங்கள் தீட்டி செயல்படுவதற்காக, நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

எஸ்.எஸ்.எல்.சி., பி.யூ.சி. தேறியவர்களுக்கு வேலைவாய்ப்பின்மை உதவித் தொகையை இந்த அரசு அளிக்கிறது என்றால், இதுவரை எந்த அரசும் செய்யாத அளவிற்கு இந்த அரசு அளித்துக் கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இதுபோன்ற நல்ல பல திட்டங்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சத்துணவுத் திட்டத்தின் கீழ் 80 இலட்சம் குழந்தைகள் இன்றைக்கு தமிழகத்தில் வயிறார உண்டு, கல்வியறிவு பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையைப் பார்க்கும்போது, புரட்சித் தலைவருடைய அரசு எந்த அளவுக்கு மாணவர்களின் எதிர்கால சமுதாயத்தில் அக்கறைகொண்டு செயல்படுகிறது என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

இந்த சத்துணவுத் திட்டத்தை இந்த அவையிலே கொண்டு வந்த காலத்தில், இங்கேயும், வெளியேயும் பேசியவர்கள், இது ஒரு பிச்சைக்காரத் திட்டம் என்றும், தமிழகத்தினுடைய குழந்தைகளை தட்டேந்த வைத்துவிட்டார்கள் என்றும் சொன்னார்கள். ஆனால் அவர்களே தேர்தல் காலத்தில் முறையாகச் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவருகிறோம் என்று சொல்லி மக்களை ஏமாற்றுவதற்காக அறிக்கைகள் கொடுத்தார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், புரட்சித் தலைவர் அவர்கள் நாட்டு மக்களுக்குச் செய்கின்ற பல்வேறு நன்மைகளைப் புறக்கணித்துவிட்டு, ஏதாவது சொல்லி பதவி பெறவேண்டுமென்ற நோக்கத்தில் இருக்கிறார்களே தவிர, மக்களுக்கு உறுதுணையாக நன்மைகளைச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் இல்லை என்று தெளிவாகத் தெரிகிறது.

அதுபோன்று தமிழ்ப் பல்கலைக் கழகம், விவசாயப் பல்கலைக் கழகங்களைக் கொண்டுவந்த புரட்சித் தலைவர் அவர்கள், இன்றைக்குச் சென்னையில் மருத்துவப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியிருக்கிறார்கள் என்றால், இந்த அரசை, புரட்சித் தலைவருடைய எண்ணங்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று குடிநீர் வசதியை விரிவுபடுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை புரட்சித் தலைவர் அவர்கள் தீட்டிக் கொண்டு வருகிறார்கள். இந்த நோக்கில் என்னுடைய பணிவான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பூம்புகாரில் இப்போது குடிநீர்ப் பிரச்சினை தலைவிரித்து ஆடுகின்ற காட்சியைப் பார்க்கிறேன். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், புரட்சித் தலைவர் அவர்கள் குடிநீர் பிரச்சினைக்காக பணத்தை செலவு செய்யவேண்டுமென்று தீவிரமாக எண்ணினாலும் கூட, ஒரு சில அதிகாரிகளுடைய கவனக் குறைவின் காரணமாக அந்த நன்மைகள் மக்களுக்குச் சரிவரப் போய்ச் சேராமல் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக புரட்சித் தலைவர் அவர்கள் பழைய கிராம அதிகாரிகளை எடுத்துவிட்டு, புதியதாக கிராம அதிகாரிகளை நியமித்தது ஒரு பெருமைபடத்தக்க செயல். பாரம்பரையாக செயல்பட்டு வந்த அந்த கிராம அதிகாரிகளை நாடு முன்னேறவேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், அவர்களை எல்லாம் எடுத்துவிட்டு, கிராமங்கள் போதிய வளர்ச்சி பெறுவதற்கு வழி செய்த அந்த முயற்சியை நாடு பாராட்டிக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், புரட்சித் தலைவர் அவர்களிடம் நான் ஒரு வேண்டுகோளை வைக்கவிரும்புகிறேன். நம்முடைய திட்டங்கள் கிராமப்புறங்களை அடைய வேண்டும் என்று விரும்புகின்ற நோக்கில் அதற்காக நம்முடைய அரசு செய்கின்ற செலவுகள் எல்லாம் முறையாக செய்யப்பட்டதா, அந்தப் பலன்கள் மக்களுக்கு போய்ச் சேர்கிற சூழ்நிலை இருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். எப்படி அந்த கிராம அதிகாரிகளை எடுத்துவிட்டு, புதியதாக கிராம அதிகாரிகளை புரட்சித் தலைவர் அவர்கள் நியமித்தார்களோ, அதுபோன்று தமிழகத்தில் இருக்கின்ற கிராம சேவக்குகளை எடுத்துவிட்டு, அதற்கு மாறாக, வேறு ஏதாவது பணியாளர்களை அமர்த்தி, அவர்களை கிராம மக்களுக்கு உதவிசெய்யும் நிலைமைகளை புரட்சித் தலைவர் அவர்கள் செய்யவேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பூம்புகார்ப் பகுதியில் ஆதிதிராவிடர் குடும்பங்கள் 30,000-க்கும் மேற்பட்டு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்த இடங்களில் எல்லாம் சாலை வசதிகளைச் சீர் செய்து கொடுக்கவேண்டுமென்று





கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய சில உறுப்பினர்கள் இந்த ஆட்சியில் ஆதி திராவிடர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர். அவர்களுக்கு எந்த உதவியும் செய்யவில்லை என்று சொன்னார்கள். தமிழகத்தில் முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்கு பிறகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் ஆதிதிராவிடர்கள் வாழ்க்கை மறுமலர்ச்சி பெற்ற வாழ்க்கையாகவும் சமுதாய அந்தஸ்து உடைய வாழ்க்கையாகவும் மாறியிருக்கிறது என்பதை மனசாட்சியோடு எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பூம்புகார் தொகுதியில் 15,000 மேற்பட்ட மீனவர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். சில நேரங்களில் கடல் கொந்தளிப்பு காரணமாக அவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படுகிற சூழ்நிலை பலயிடங்களில் ஏற்படுகிறது. ஆகவே, கடலோரம் உள்ள அனைத்துப்பகுதிகளிலும் தடுப்புச்சுவர்கள் கட்டப்பட வேண்டும் என்றும் புயல்பாதுகாப்பு இல்லங்கள் கட்டித்தரப்பட வேண்டும் என்றும் நான் புரட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கு வேண்டுகோளாக வைக்க கடமைப்பட்டுள்ளேன்.

அந்தப் பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு அதன் காரணமாக விவசாய பெருமக்கள் பாதிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பல்வேறு நன்மைகளை செய்து இருக்கிற இந்த அரசு, இதையும் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே சந்திரபாடி என்ற கிராமத்திலே நாடு சுதந்திரம் பெற்று இவ்வளவு காலம் ஆகியும் பஸ் போக்குவரத்து கிடையாது. புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்கு பிறகு அங்கே ஒரு சாலை உருவாக்க வேண்டும் என்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது அங்கே ஒரு மதகு கட்டப்படாமல் இருப்பதால் அந்த மதகைக் கட்டினால் தான் அந்த கிராமத்திற்கு பல்வேறு வசதிகளை செய்து கொடுக்க முடியும் என்ற நிலைமை வந்ததற்கு பிறகு அந்த மதகு கட்டப்படவேண்டும் என்று திட்டமிடப்பட்டு அதைக் கட்டுவதற்கு 5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு டெண்டர் விடப்பட்டது. ஆனால் இன்றையதினம் வரை அந்த ஒப்பந்தக்காரர் அதைக் கட்டாமல் இருக்கிறார். இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம்

சொல்லியாகிவிட்டது. அந்த ஒப்பந்தக்காரா செய்யாமல் விட்டுவிட்ட அந்தப் பணியை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லியும் மெத்தன போக்கு இருக்கிற சூழ்நிலையை மாற்றி அந்தப் பகுதியில் சாலை வசதியை ஏற்படுத்தக்கூடிய முறையில் மதகு கட்டித் தரவேண்டும் என நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பூம்புகார் தொகுதி மீனவர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிற தொகுதியாகும். பூம்புகார் நகரம் ஒரு காலத்திலே சிறந்த நகரமாகவும் வர்த்தக நகரமாகவும் விளங்கியது. பெருந்தொழில் நகரமாக அதை மாற்ற வேண்டும் என்று நான் கேட்கவில்லை. அங்கே ஒரு மீன்பிடி துறைமுகம் அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு செம்மையான ஆட்சியாகவும், நல்ல ஆட்சியாகவும் இருந்து மக்களுக்கு உதவிகளை செய்து கொண்டிருக்கிறது. மக்கள் நம்பிக்கை வைத்து மூன்றாவது முறையாக இந்த ஆட்சியை உருவாக்கிக் கொடுத்து அது நடந்து கொண்டிருக்கிறது.

ஒரு சமயம் நாடாளுமன்றத் தேர்தலில் அ.இ.அ.தி.மு. கழகம் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் பெறுகிறபோது மல்யுத்தத்திலே வெற்றி தோல்வி சகஜம் என்று புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை வலியுறுத்தி எதிர் அணியிலே உள்ள உறுப்பினர்கள் சொல்கிறார்கள். ஒருமுறை தோற்றால் அதை ஏற்றுக்கொள்ளலாம், இரண்டு முறை தோற்றால் அதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் மூன்று முறையும் தோற்றுவிட்டால் வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டால் அவர்கள் அப்படி பேசுவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லி மீண்டும் நிரந்தரமாக புரட்சித் தலைவரவர்களுடைய ஆட்சி தமிழகத்திலே இருந்து மக்களுக்கு நல்ல பல காரியங்களை செய்ய வேண்டும் என்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 10.50)

*திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களாக இந்த மாமன்றத்திலே நடந்து கொண்டு இருக்கிற ஆளுநர் உரை மீதான விவாதத்தில் தேர்தல் களத்திலே நின்று வெற்றி





பெற்றது அனுதாப அலையின் காரணமாக வெற்றி பெற்றதா? அல்லது அ.இ.அ.தி.மு. கழக ஆட்சியின் கடந்த காலத்தில் நிறைவேற்றிய திட்டங்களால் வெற்றி பெற்றதா என்ற வாக்குவாதங்களில் ஈடுபட்டு, அ.இ.அ.தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள் சாதித்த திட்டங்களால் வெற்றி பெற்றோம் என்றும் எதிர் அணியில் உள்ளவர்கள் இல்லை இல்லை நீங்கள் அனுதாப அலையினால் தான் வெற்றி பெற்றீர்கள் என்றும் கூறியது கடந்த இரண்டு, மூன்று நாட்களாக நடந்த விவாதத்திலே நிரம்பி இருந்ததை நான் பார்த்தேன். என்னைப் பொறுத்தவரையில் அந்த சர்ச்சைக்கு நான் போக விரும்பவில்லை. நான் தொடர்ந்து அனுதாப அலையால் வெற்றி பெற்றீர்கள் என்று சொன்னால் இதை நீங்கள் ஏற்றுக்கொள்ளப்போவது இல்லை. தொடர்ந்து நீங்கள் எங்கள் சாதனை திட்டங்களால்தான் நாங்கள் வெற்றி பெற்றோம் என்று நீங்கள் சொன்னால் நாங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இல்லை.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அமெரிக்க மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டு இருந்த நேரத்திலேயும் திருமதி இந்திரா காந்தி அவர்கள் வன்கணாளர்களால் சுட்டு படுகொலை செய்யப்பட்ட நேரத்திலேயும் இந்த தேர்தலை நீங்கள் வைக்க வேண்டும் என்று கருதினீர்கள். என்ன எதிர்பார்ப்புகளோடு, காலத்தின் கட்டாயம் இல்லாத நேரத்திலே, சட்டத்தின் நிர்ப்பந்தம் இல்லாத நேரத்திலே நீங்கள் இந்த தேர்தலை நடத்த வேண்டும் என்று எண்ணினீர்கள். அந்த எதிர்பார்ப்புகள் என்ன என்பது உங்களுக்கும் நன்றாகத் தெரியும். எங்களுக்கும் நன்றாகத் தெரியும். அந்த எதிர்ப்பார்ப்பு தான் அனுதாப அலை என்பதை மக்கள் மிக நன்றாக உணர்ந்த காரணத்தால் தான் உங்களுக்கும் தெரிந்த ஒன்றை,' நீங்களும் புரிந்து கொண்ட ஒன்றை மக்கள் ஏற்கனவே தெளிவாக புரிந்து கொண்டு இருக்கின்ற ஒன்றை மீண்டும் மீண்டும் நான் சொல்லி இந்த மாமன்றத்தின் பொன்னான நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. எனவே இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு ஆளுநர் உரைக்கு நான் வர விரும்புகிறேன்.

ஆளுநர் உரை என்பது அரசாங்கத்தின் உரை தான் அரசாங்கம் சொல்லுகிற கருத்துக்களை ஆளுநர் சொல்கிறார். நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிற ஜனநாயக சம்பிரதாயங்களின்

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1985 மார்ச் 13

அடிப்படையில் அரசாங்கத்தினுடைய கருத்துக்களை ஆளுநர் எடுத்து இயம்புகிறார். என்னுடைய ஒப்புயர்வற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை ஆளுநர் உரை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள்.

It should be a message of hopes and ideals.

என்று சொன்னார்கள். ஆளுநர் உரை என்பது நம்பிக்கை தரத் தக்க அளவிலேயும், கொள்கை விளக்கத்தை தரத் தக்க அளவிலேயும் அமைந்திட வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் இங்கே வாசிக்கப்பட்ட ஆளுநர் உரை என்பது திரும்பத் திரும்ப நான் படித்துப் பார்த்தேன், சாதித்துவிட்டதாக திட்டங்களை பட்டியல் போட்டு காண்பித்து இருப்பது என்பது ஒரு பெரிய நிறுவனத்தின் ஆண்டு அறிக்கையைப் போல் இருந்ததே அல்லாமல் என்னுடைய அன்புத் தலைவர் அண்ணா அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போல் கொள்கை விளக்கத்தையும் காணோம், நல்ல திட்டங்களையும் காணோம். எந்த நம்பிக்கையையும் இந்த ஆளுநர் உரை ஊட்டிடவில்லை. இந்த உரை மீது நாம் இன்றைக்கு விவாதத்தை தொடர்ந்து கொண்டு இருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதிலிருந்து ஒரு அசாதாரண சூழ்நிலை இந்த சட்ட மன்றத்திலே உருவாகியிருக்கிறது என்பது தெரிகிறது. தேர்தல் காலத்தில் அ.இ.அ.தி.மு. கழகமும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியும் ஒன்றாக இணைந்து தேர்தல் களத்திலே நின்றன. நீங்கள் வெற்றி பெற்றீர்கள். நான் வாழ்த்துகிறேன்.

ஆனால் அதே நண்பர்கள் சட்ட மன்றத்திற்கு வந்த உடன் நாங்கள் எதிர் அணியில் அமர்ந்து கொள்கிறோம் ஆளும் கட்சி செய்கின்ற தவறுகளை எல்லாம் சுட்டிக்காட்டுவோம், ஜனநாயகத்தில் எதிர்க் கட்சியினுடைய கடமைகளைச் செய்வோம் என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் எதிர் அணியில் அமர்வதும் அ.இ.அ.தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மையில் வெற்றி பெற்றதால் ஆளும் வாய்ப்பினை பெற்று இருப்பதும் ஒரு அசாதாரணமான சூழ்நிலை என்றே கருதுகிறேன். தேர்தல் களத்திலே இருந்த நட்பு இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதைத்தான் நேற்றைய தினம் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் ஆளும் கட்சியின் திட்டங்களை எப்படி அணுகுவது என்பதற்கான தெளிவான அணுகுமுறையை காங்கிரஸ் கட்சி எடுக்க முடியவில்லை என்று



1985 மார்ச் 13] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

சுட்டிக்காட்டி இருக்கிறது. இதற்கு என்ன காரணம், தேர்தலில் தோளோடு தோள் நின்று பணியாற்றியவர்கள் உங்கள் நட்பினை மறந்துவிடவில்லை. அது தொடர்கதையாக இருக்கின்ற காரணத்தால் ஒரு உறுப்பினர் ஆளும் கட்சியின் திட்டங்களை ஒட்டுமொத்தமாக வரவேற்பதும், மற்றொரு உறுப்பினர் ஆளும் கட்சியின் திட்டங்களை ஒட்டுமொத்தமாக எதிர்ப்பதும் இன்றைய சூழ்நிலையாக இருக்கிறது. இவைகள் எல்லாம் ஆரோக்கியமான அரசியலுக்கு வழிவகுக்குமா என்பது கேள்விக்குறியாக இருந்து கொண்டிருக்கிறது. இன்னும் கூட எதிர்வரிசையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள் நீங்கள் எண்ணிக்கையில் குறைந்துகொண்டே போகிறீர்களே, "நீங்கள் எண்ணிக்கை பலத்தை இழந்துகொண்டே போகிறீர்களே" என்று தெரிவித்தார்கள்.

அந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் இந்த மன்றத்தின் மூலமாக தெரிவித்துக்கொள்ள விரும்புவது எண்ணிக்கை பலம் ஜனநாயகத்தில் இரண்டாவது கட்டம் தான். அதிகமாக வாக்குகள் பெற்றவர்கள், மக்கள் சக்தியை அதிகமாகப் பெற்றவர்கள், ஆளுகின்ற வாய்ப்பினை பெறலாம். ஆனால் அந்தப் பெரும்பான்மை மக்களுக்குத்தான் அந்த ஆட்சிக்கு சொந்தமானது என்று எண்ணுவது ஜனநாயக சம்பிரதாயத்திற்கு விரோதமான நடவடிக்கை ஆகும். எனவே பெரும்பாலான மக்கள் உங்களை தேர்ந்தெடுத்து இருந்தாலும், எண்ணிக்கை பலம் அதிகமாக இருந்தாலும், சிறுபான்மையோர் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு இடம் இருந்தால்தான் இந்த மன்றத்தில் ஜனநாயகம் வெற்றி பெற்றதாக கருதப்படும். இதைத்தான் எங்களுடைய அன்புத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னார்கள்.

It is not a question of majority or minorty. It is a question of justice and freedum. It is a question of consultation and concord. It is a question of amity and affection. In that way you will have to decide any question and not through numbers

என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். எனவே, பெரும்பான்மை, சிறுபான்மை என்பதை நீங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டுமே யல்லாமல், பெரும்பான்மைக்குத்தான் இந்த ஆட்சி சொந்தம்.

ஆகவே, சிறுபான்மை என்பது கேட்கக்கூட தகுதியற்றது என்று எண்ணினால் அந்த எண்ணம், அந்தச் சிந்தனை, அந்தக் கூற்று, சர்வாதிகாரத்தின் அடித்தளம்,—சர்வாதிகாரத்தின் படிக்கட்டு,—சர்வாதிகாரத்திற்குச் செல்லுகின்ற பாதை என்பதை இந்த மாமன்றத்தில் எண்ணிக்கை பலத்தை அதிகமாகப் பெற்ற ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு அண்ணாவின் வாயிலாக மெத்த அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

இந்த இரண்டு நாள் விவாதத்தில் இலங்கைப் பிரச்னையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் பேசினார்கள். அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்தில், இலங்கைப் பிரச்னையைப் பொறுத்தவரையில் நான் தமிழனாக இருந்து, ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி என்ற பாகுபாடு இல்லாமல், அந்த வேறுபாடு கருதாமல் உங்களோடு சில யதார்த்தமான எண்ணங்களைப் பகிர்ந்திட விரும்புகிறேன். ஆகவே, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் என்னுடைய வாதத்தைச் சிறந்தது என்று சொல்வதும், ஆளுங் கட்சி உறுப்பினர்கள் என்னுடைய வாதங்களை மட்டம் தட்டுவதும் இலங்கைப் பிரச்னையில் தேவையில்லை என்று திறந்த உள்ளத்தோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கெல்லாம் காரணம், இந்த மாநில அரசு இலங்கைப் பிரச்னையில் எவ்வளவு தூரம் செய்ய முடியும் என்பது எங்களுக்கு மிகவும் நன்றாகத் தெரியும். எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் எவ்வளவு செய்ய முடியும் என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆகவே, இவைகளைச் செய்கின்ற அதிகாரத்தை யார் வைத்திருக்கிறார்கள்? என்பதுதான் கேள்வியாகும்? மத்திய அரசு வைத்திருக்கிறது. எனவே, மத்திய அரசு அவைகளைச் செய்ய வேண்டுமென்று நிர்ப்பந்திப்பதற்காக மாநில அரசு என்ன செய்ய வேண்டும் அல்லது நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றிக் கலந்து பேசி, ஒட்டுமொத்தமான ஒருமித்த கருத்தை இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவிப்பதுதான் இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு நாம் செய்கின்ற நன்மையாக இருக்கும்.

இதைப் பற்றி இங்கே விவாதிக்கின்றபொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், எங்களுடைய அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1973 ஆம் ஆண்டில் குட்டிமணியைக்



காட்டிக் கொடுத்தார்கள் என்று. அடுத்துச் சொன்னார்கள், கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டார்கள் என்று. அடுத்துச் சொன்னார்கள், இப்படி 1974-ல் நடந்த போராட்டத்தில நம தலைவர் சரியான முடிவெடுக்கவில்லை என்று. அடுத்துச் சொன்னார்கள், சட்ட மன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தவர்கள், மீண்டும் ஏன் மேலவைக்கு நுழைந்தார் என்று. இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நடுநிலையில் நின்று, கட்சிகளுக்கு அப்பாற்பட்டு எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் வேதனையாக இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குட்டிமணியை யார் காட்டிக் கொடுத்தது? 1973-ல் வேதாரண்யத்திற்குப் பக்கத்தில் கைது செய்யப்பட்ட குட்டிமணி, தான் விடுதலைப் புலி இயக்கத்தைச் சார்ந்தவர் என்று யாரிடமும் தெரிவிக்கவில்லை. 1982-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் தெரிவித்தார்கள்,—"கலைஞர் கருணாநிதி அவர்கள் குட்டிமணியைக் காட்டிக் கொடுத்தார்கள்" என்று சொல்லிய மாத்திரத்தில், அவருக்குத் துணையாக இருந்த சபாரத்தினம் அவர்கள் 1982-ல் ஒரு தமிழ்த் தினசரியில் அறிக்கை விட்டுத் தெளிவுபடுத்திக் கலைஞர் அவர்கள் காட்டிக் கொடுக்கவில்லை என்று தெளிவாகச் சொல்லி யிருக்கிறார்கள். 1983-ல் அவருக்கு வழக்கறிஞராக இருந்த கரிகாலன் என்பவர், வெளிக்கடைச் சிறையில் குட்டிமணியைச் சந்தித்து விவரம் கேட்டு, கடிதம் பெற்று, தங்கதுரையிடமும் அந்தக் கடிதத்தைக் காண்பித்துவிட்டு அவற்றை அனுப்புத் தலைவர் கலைஞர் அவர்களிடம் கொடுக்க, அது முரசொலி பத்திரிகையில் பிரசுரமாயிற்று. ஜூனியர் விகடன் நிருபர் அவர்களும் பேட்டியிலே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு வெளிக்கடைச் சிறையில் பரிதாபமாகக் கொல்லப்பட்ட குட்டிமணியின் மனைவியிடம், கேட்டுத் தெளிவாக அறிக்கை விட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

இவ்வளவு நிகழ்ச்சிகளுக்கும் பிறகு ஏன்தான் கலைஞர் அவர்கள் காட்டிக் கொடுத்தார்கள் என்று சொல்கிறீர்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள இயலவில்லை. அது

எங்களுக்கு வேதனையாக இருக்கிறது. இதற்குக் காரணம என்ன? இலங்கைப் பிரச்னையில் சரியான முடிவினை எடுப்பதற்கான வாய்ப்பு இல்லாமல், என்ன செய்ய வேண்டும், மத்திய அரசை எப்படி அணுக வேண்டும் என்று நிதானமாகச் சிந்தித்து, தீர்க்கமான, தெளிவான திட்டம் இல்லாமல், கொள்கை இலலாமல் எங்களைத் திசை திருப்பப் பார்க்கிறீர்கள். முடிந்துவிட்ட இந்தப் பிரச்னைகளை யெல்லாம் நீங்கள் எழுப்பா விட்டால் எதற்காக இந்த மன்றத்தினுடைய நேரத்தை அந்தத் தேவையற்ற குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் சொல்லி வீணடிக்க வேண்டும். எதற்காக இந்தக் கருத்துக்களை எல்லாம் சொல்ல வேண்டும்? நீஙகள் நல்ல முறையில் சொல்லியிருந்தால் நானும் உங்களோடு கலந்து ஆலோசனைகளை வழங்குகின்ற ஒருவனாக இருந்திருப்பேன். ஆனால் மாறாக நீங்கள் எதற்கெடுத்தாலும் குட்டிமணியைக் காட்டிக் கொடுத்தவர் என்று சொல்கிறீர்கள்; கச்சத் தீவை வழங்கியவர்கள் என்று சொல்கிறீர்கள். கச்சத் தீவு பிரச்சினை என்ன? அந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் அதனை மத்திய அரசு இலங்கைக்குத் தாரை வார்த்தது. அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்தார்கள். அதற்குப் பின்னால் அது தாரை வார்க்கப்பட்டு விட்டது மத்திய அரசால்.

இன்றைக்கும்கூட அதுபற்றிச் சொல்லப்படுகின்ற ஒரு கருத்தினை இங்கே தர விரும்புகிறேன். உங்களுடைய பத்திரிகை என்று கருதப்படுகின்ற மக்கள் குரல் பத்திரிகையில் உங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த டாக்டர் ஜனார்த்தனன் அவர்கள் தொடர்ந்து கட்டுரை எழுதிக் கொண்டு வருகிறார். அந்தக் கட்டுரையில் என்ன சொல்கிறார். இலங்கைக்குக் கச்சத் தீவைக் கொடுத்தபோது அது கற்பாறை என்று இந்திய அரசு தெரிவித்தபோது இல்லை, இல்லை என்று நான் தெரிவித்தேன். அப்படியிருந்தும் கச்சத் தீவைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று தமிழர் தந்தை செல்வா அவர்கள் என்னிடம் நண்பர் மூலமாகத் தூது அனுப்பினார்கள் என்றும் திரு. ஜனார்த்தனன் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். மேலும் நாளை வர இருக்கும் தமிழ் ஈழத்தின் ஒரு பகுதியாகத்தான் கச்சத் தீவு இருக்கும். எனவே கவலைப்பட வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டதாக





இரண்டு நாட்களுக்கு முன்னாலே மக்கள் குரல் பத்திரிகையில் திரு. இரா. ஜனார்த்தனம் தீட்டிய கட்டுரையிலே இடம் பெற்றிருக்கின்றது. பேரவைத் தலைவரின் அனுமதியோடு அந்தப் பகுதியை இங்கே நான் படிக்க விருமபுகிறேன்.

தந்தி கொடுத்தும், படங்களை அனுப்பியும் நான் செயல்பட்டேன். அந்நேரம் மறைந்த இலங்கைத் தமிழர் தலைவர் தந்தை செல்வா "நாளைய தமிழ் ஈழத்தில் தான் கச்சத் தீவு இருக்கப் போகிறது என்பதால் சனார்த்தனம் வருத்தப்பட வேண்டாம்" என்று இரண்டு நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் ஜனார்த்தனம் அவர்கள் தீட்டியிருக்கிறார்கள். எனவே கச்சத் தீவை வழங்கியது என்பது இரண்டாவது பிரச்சினை.

இப்போது என்ன நடந்து கொண்டிருக்கின்றது. கச்சத் தீவை வழங்கியபோது இலங்கைக்கும், இந்தியாவிற்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி தமிழ் மீனவர்கள் கச்சத் தீவுப் பகுதிக்குச் சென்று மீன் பிடிக்கலாம் என்று இருக்கின்றது. அப்படி தமிழ் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமையைப் பொறுத்தவரையில் இலங்கை அரசு என்ன செய்கின்றது இப்போது? அந்த ஒப்பந்தத்தை மீறி தமிழ் மீனவர்கள் கச்சத் தீவிற்கு வந்தால் சுட்டுத் தள்ளுகிறார்கள். எனவே இதுதான் இப்போது பிரச்சினையே தவிர கச்சத் தீவை வழங்கினார்களா, வழங்கவில்லையா என்ற கேள்வி இப்போது எழவில்லை. எனவே கச்சத் தீவை இலங்கைக்கு வழங்கிய நேரத்தில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள விதிகளை இலங்கை அரசு மீறுகின்றது என்பதைத்தான் சொல்ல வேண்டுமே தவிர கச்சத் தீவை வழங்கியது தவறு என்ற விவாதத்திற்கு வரத் தேவையில்லை. எனவே கச்சத் தீவை வழங்கினார்கள். குட்டிமணியைக் காட்டிக் கொடுத்தார்கள் என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்களே, அதிலே உள்ள உண்மை நிலையை அவர்கள் தெரிந்து கொண்டார்களா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பை ராஜினாமா செய்தவர்கள் மீண்டும் மேலவைக்கு வந்திருக்கிறார்களே என்ற கேள்விக் கணையினைத் தொடுத்தார்கள். நான் உங்களை ஒன்று திருப்பிக் கேட்கலாம்.

நீங்களும் இந்தப் பிரச்சினைக்காகக் கறுப்புச் சட்டை போட்டுக் கொள்ள வேண்டும் என்று சொன்னீர்கள். இப்போது அந்தப் பிரச்சினை தீர்ந்துவிட்டதா? பிறகு ஏன் கறுப்புச் சட்டையைக் கழற்றினீர்கள்? எந்தப் பிரச்சினைக்காகக் கறுப்பு சட்டையை அணிந்தீர்களோ அந்தப் பிரச்சினை தீராமல் இருக்கின்றபோது ஏன் வேறு சட்டையை அணிந்து வந்திருக்கிறீர்கள். எனவே ஜனநாயகத்தில் ஒரு சிம்பாலிக் ரெப்ரசன்டேஷன் (Symbolic Representation) என்ற அடிப்படையில் ஒரு கண்டனத்தைத் தெரிவிக்கின்ற வகையில் இலங்கைப் பிரச்சினையில மாநில அரசு செயல்படாத நிலையில் இருப்பதால், மத்திய அரசு இன்னும உரிய நடவடிக்கையை எடுக்காத காரணத்தால் அதற்குக கண்டனம் தெரிவிக்கின்ற அடிப்படையில் நான் என்னுடைய பதவியை ராஜினாமா செய்கிறேன் என்று கலைஞர் அவர்கள் ராஜினாமா செய்தார்கள். அப்படி வேறு யாராவது தமிழ் உள்ளம் கொண்ட நீங்கள் முன்வந்தீர்களா? அப்படி முன்வராமல் அவர் செய்த தியாகத்தை, ஏன் இப்படிச் செய்தார்கள் என்று சொல்லிக் கொச்சைப்படுத்துகின்ற வாதம் எந்த அளவுக்கு இந்த மன்றத்திலே பொருந்தமுடையது என்பதை நான் உங்களிடத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படி ஒரு தியாகத்தைச் செய்த தலைவர் மீண்டும் ஜனநாயக முறையில் உள்ள முறைப்படியான தேர்தலின் மூலம், மேலவைக்கு எப்படி வர வேண்டுமோ, ஜனநாயக சட்ட திட்டங்கள் எப்படிச் சொல்கின்றதோ அப்படி மேலவைக்கு வந்திருக்கிறார்கள். எனவே அதிலே என்ன தவறு இருக்கின்றது. உரிய நடவடிக்கைகளை மாநில அரசும், மத்திய அரசும் எடுக்கவில்லை என்பதற்காகத்தான் ராஜினாமா செய்கிறேன் என்று சொல்லி அந்தத் தலைவர் செய்த தியாகத்தைப் பாராட்டாவிட்டாலும் ஜனநாயக முறைப்படி செய்யப்பட்ட தியாகத்தைக் கொச்சைப்படுத்தாதீர் என்று மெத்தப் பணிவோடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவிலே உள்ள விமான தளங்களில் ஒன்றான திருவனந்தபுரம் விமான நிலையத்திற்கு மேலே, இலங்கை விடுதலைப் படை வீரர்களைக் கொன்று குவிப்பதற்காக போர்ச்சுக்கல் போன்ற நாடுகளிலே இருந்து ஆயுதங்களை வாங்கிக் கொண்டு பறந்து வந்து இறங்கிய விமானம் இலங்கைக்குத்தான் செல்கின்றது என்று தெரியும். அதற்குப் பின்னாலே, அந்த விமான தளத்தின் மேலே விமானம் பறந்து கொண்டிருந்த நேரத்தில் எரிபொருள் இல்லையென்று தெரிவிக்கப்பட்ட நேரத்தில், அந்த விமானத்திலே என்ன இருக்கிறது என்று தரைக் கட்டுப்பாட்டிலிருந்தவர்கள் கேட்ட நேரத்தில், அதிலே சாதாரண சரக்குகள் தான் இருக்கின்றன என்று விமானத்தின் உள்ளே இருந்தவர்கள் சொன்னார்கள். சரி, பரவாயில்லை, கீழே இறங்கட்டும் என்று சொல்லி, அதற்கு எரிபொருள் போட்டு (ரீஃப்யூயல்) பின்னாலே அதை சோதனை செய்த நேரத்திலே, இலங்கைக்கு, போர்ச்சுக்கல் போன்ற நாடுகளிலே இருந்து, ஆயுதங்களை, விடுதலைப் புலிகளை, மற்ற சுதந்திர வீரர்களை, ஒடுக்குவதற்காக வாங்கி வைத்திருந்தார்கள். அந்த விமானத்தைத் தரையிலே கட்டுக் காவலோடு வைத்துக் கொண்டு, தரைக் கட்டுப்பாடு அதிகாரி மத்திய அரசோடு தொடர்பு கொள்கிறார். அந்த நேரத்திலே மத்திய அரசிடமிருந்து என்ன தகவல் வருகிறது தெரியுமா? தமிழ் உள்ளம் கொண்டவர்கள், தமிழ் ஈழம் மலர வேண்டுமென்று எண்ணுகிறவர்கள், ஈழத் தமிழன் சாகிறான், அவனுக்கு உள்ளபடியே உதவி செய்திட வேண்டுமென்று உள்ளத் தூய்மையோடு எண்ணுகிறவர்கள், மத்திய அரசு என்ன சொல்லியிருக்கிறது என்பதை அருள் கூர்ந்து கவனிக்க வேண்டும். பேரவைத் துணைத் தலைவர் அனுமதியோடு அதைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் 20 நிமிடங்களுக்கு மேல் பேசிவிட்டார். சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** மத்திய பாதுகாப்புத் துறையிலே இருந்து வந்த செய்தி, இந்தப் பிரச்னையைப் பொறுத்தமட்டில் தாங்கள் தாராள மனப்பான்மையோடு விமானத்தை இலங்கைக்கு அனுப்பி வையுங்கள் என்பதாகும். 'டேக் எ லீனியன்ட் வியூ' (Take a lenient view) என்ற வாசகம் இருக்கிறது. இலங்கையில் விடுதலைப் புலிகளை, தமிழ் ஈழத் தோழர்களை, நம்முடைய உடன்பிறவாச் சகோதரர்களைக் கொள்வதற்காக, இந்தியா

கிலேயிருந்து எடுத்துச் செல்லப்படுகிற அந்த ஆயுதங்களை தாங்கிய அந்த விமானத்தை தாராள மனப்பான்மையோடு அனுப்பி வையுங்கள் என்ற செய்தி மத்திய அரசிடமிருந்து வருகிறது என்றால், அருள் கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். மத்திய அரசு இந்தப் பிரச்சினையிலே எப்படி இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நீங்கள் சொல்லலாம், ராஜ தந்திர முறையிலே இதைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று. ராஜ தந்திர முறைகள் அனைத்தும் இன்றைக்குத் தோற்றுப் போய விட்டன. ராஜ தந்திர அடிப்படையிலே தான் பார்த்தசாரதி அனுப்பப்பட்டார். பார்த்தசாரதியினுடைய வட்ட மேஜை மாநாடு என்ன ஆனது? பார்த்தசாரதியினுடைய பேச்சு வார்த்தை என்ன ஆனது? இவ்வளவும் தோற்ற பின்னாலே ராஜ தந்திர முறைகள் எல்லாம் தோற்ற பின்னாலே இருக்கக்கூடிய ஒரே ஆயுதம், ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டுமென்றால், ஈழத் தமிழர் படுகின்ற துயரங்களைப் போக்க வேண்டுமென்றால், முடிவெடுக்க வேண்டியது நடுவண் அரசு; முடிவெடுக்க வேண்டிய திட்டம் இராணுவத்தை அனுப்பி, ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுவதைத் தவிர, வேறு ஒன்றுமே எனக்குத் தெரியவில்லை. எனவேதான் இந்த மன்றத்திலே உள்ள தமிழ் உணர்வு படைத்த அனைவரையும் கட்சி மாச்சரியங்களை மறந்து அப்படிப்பட்ட முடிவெடுப்பதற்கு உதவிடுமாறு மன்றாடி கேட்டுக் கொள்கிறேன். ஈழத்திலே செத்துக் கொண்டிருக்கிற தமிழர்களுக்காக இங்கேயிருந்து இராணுவத்தை அனுப்புவதற்கு இந்த மன்றத்திலே ஒரு தீர்மானத்தை வடித்துத் தாருங்கள். அதுவாவது இலங்கையிலே இன்றைக்கு இரவும் பகலும் கண் துஞ்சாது போராடிக் கொண்டிருக்கிற, சிங்களக் காடையர்களை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிற அவர்களுக்கு ஆறுதலாக அமையும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய பாரதத்தினுடைய பிரதம அமைச்சர் ராஜீவ் காந்தி அவர்கள் ஒரு கட்சி ஆட்சிதான் கன்னியாகுமரி முனையிலே இருந்து காஷ்மீர் வரை இருக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார். அதற்கு ஆந்திரம் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது, கர்நாடகம் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது. ஒரு கட்சி ஆட்சியை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோமா? அண்ணாவினுடைய பெயரைச் சொன்னார்கள்; அண்ணாவினுடைய பெயரால்தான் ஆட்சி உருவானது என்று சொன்னார்கள். திராவிட



முன்னேற்றக் கழகம் அண்ணாவினுடைய கொள்கையிலிருந்து மாறுபட்ட காரணத்தாலே, திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணாவினுடைய திட்டங்களை நிறைவேற்றாத காரணத்தால், உருவானதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று அந்தக் கட்சியினுடைய நிறுவனர் தெரிவித்தார். ஆனால் அந்த அண்ணா என்ன சொன்னார்? ஒரு கட்சி ஆட்சியை ஒத்துக் கொண்டாரா? இந்திய துணைக்கண்டத்திற்கு கூட்டாட்சிதான் வேண்டும் என்றார். காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரைக்கும் நீண்டு பரந்து கிடக்கும் இந்த பூபாகத்தில் இனத்தால், மொழியால், கலையால், கலாச்சாரத்தால், நாகரீகத்தால், பண்பாட்டால், வேறுபட்ட பல்வேறு மொழி பேசுகின்ற மக்கள் வாழ்கின்ற காரணத்தாலே, நேரு கூட சொன்னார்—யூனிட்டி இன் டைவர்சிட்டி (unity in diversity) வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும்: எமோஷனல் இன்டெகிரேஷன்—(emotional integration) நாம் உணர்வால் ஒன்றாயிருக்க வேண்டுமே அல்லாமல், நிச்சயமாக இங்கே இருக்கக்கூடிய பூகோள அமைப்பு, பேசுகின்ற மொழி, இனம், கலை, நாகரீகம், பண்பாடு இவற்றால் நாம் ஒன்றுபடுவதற்கான சூழ்நிலைகள் இல்லை என்பதை பேரறிஞர் அண்ணா சொன்னார். அந்த அண்ணாவினுடைய வழி நின்று ஆட்சி நடத்துகின்ற உங்களைப் பார்த்து நான் கேட்கிறேன், ஒரு கட்சி தத்துவத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா? ஏற்றுக் கொள்ள உங்கள் மனம் மறுக்குமானால் ஏன் அதைத் தீர்மானமாக வடித்து பாரதத்தினுடைய பிரதமர் ராஜீவ் காந்திக்கு நீங்கள் தெரிவிக்கக் கூடாது? ஆந்திரம் தெரிவித்து இருக்கிறது, கர்நாடகம் தெரிவித்து இருக்கிறது. ஏன் நீங்கள் அதைத் தெரிவிக்கவில்லை? தமிழகத்தினுடைய பத்திரிகைகள் எல்லாம் தலையங்கங்கள் தீட்டியிருக்கின்றன. குமுதம் கூட தலையங்கம் தீட்டியிருக்கிறது. தமிழகத்தினுடைய பத்திரிகைகள் எல்லாம் தலையங்கம் தீட்டிய பின்னாலே ஏன் அண்ணாவினுடைய கொள்கையிலேயிருந்து விலகிச் செல்கிறீர்கள், வழுக்கி விழுகின்றீர்கள் என்பதையும் உங்களிடம் கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) மொழிப் பிரச்னையைப் பொறுத்த வரையில் மாறுபட்ட கருத்துக்கள் இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1985 மார்ச் 13

(முற்பகல் 11-10)

இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் அண்ணா பிறந்த நாள் கூட்டத்தில் பேசுகிற நேரத்தில் எங்களுடைய அன்புத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தெளிவாகக் கேட்டார்கள். நேருவின் உறுதிமொழி அரசியல் சட்டத்திலே ஏற்றப்படுமா என்று கேட்டார்கள். உறுதி யளிக்கின்ற வகையில் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தெரி வித்தார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள் கிறேன். நல்ல காரியங்கள் அனைத்திற்கும் ஆளும்கட்சிக்கு வாழ்த் துச் சொல்லி வரவேற்போம். எதிர்ப்பு சொல்கிற நேரத்திலே எவருக்கும் அஞ்சாமல் எதிர்ப்பைச் சொல்வோம். அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் வழிநின்று நாங்கள் செயல்படுவோம் என்று கூறி விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டது பற்றி இங்கே விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப் பினர் பொன்முத்துராமலிங்கம் தன்னுடைய கருத்தைத் தெரிவித் தார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோது ஒரு சர்வகட்சிக் கூட்டம் இதற்காக போடப் பட்டது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சார்பிலே நான் கலந்து கொண்டேன். அந்த சர்வக்கட்சித் கூட்டத்திலே மத்திய அரசு எடுத்த முடிவை ஆதரித்தார்கள். தாரை வார்க்கலாம் என்ற முடிவை ஆதரித்தார்கள். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நான் வெளிநடப்பு செய்தேன். இதுதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை.

* **திரு. க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே கூறிய இந்தக் கருத்திலேயிருந்து, சர்வக்கட்சித் கூட்டத்திலே நடைபெற்ற அந்த நிகழ்ச்சியை அவர்கள் தெரிவித்தார்களே தவிர அதற்கு முன் னாலே மத்திய அரசோடு எப்படிப்பட்ட பேச்சுவார்த்தை அல்லது கடிதத் தொடர்பு இருந்தது என்பதெல்லாம் அதிலே யிருந்து எதுவும் தெரியாது. ஆனால் இப்போது கூட நான் கேட் கிறேன். இலங்கையிலே தமிழர்களுக்கு இவ்வளவு கொடுமை



1985 மார்ச் 13] [திரு. க. அன்பழகன்]

இழைக்கப்படுவதற்கு கச்சத்தீவை ஒரு மூலபீடமாக அமைத்துக் கொண்டு, இலங்கையிலே உள்ள சிங்கள அரசு கொடுமை செய்கிற போது, இந்திய அரசு அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய முன்வர வேண்டும் என்று இந்தச் சட்டமன்றத்திலே தீர்மானம் நிறை வேற்ற ஆளும்கட்சி, மாண்புமிகு முதலமைச்சர் முன்வருவார் களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, இப்படியெல்லாம் நிகழும் என்று கருதித்தான் நாங்கள் அன்றையதினம் அந்தத் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை. அன்றையதினம் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து அதற்கு ஆதரவு தெரிவித்த நீங்கள் இப்போது எங்களைப் பார்த்து கேட் டுக்கொண்டு இருக்கிறீர்கள். நாங்கள் இப்போதும் சொல்கிறோம். கச்சத்தீவை தாரை வார்த்தது மிகப்பெரிய தவறு.

* **திரு. க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இலங்கை அரசோடு நட்புறவு நீடிக்கும்; நட்புறவோடு செயலாற்றுவோம் என்ற நம்பிக்கையிலே அந்தக் காரியத்திலே ஈடுபட்டு ஏறத்தாழ உறுதி கொடுத்து விட்டார்கள். அதனாலே திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பிலே அப்படி இழக்கத் தேவையில்லை என்று சொன்னபோது அதை ஏற்றுக்கொள்ள வில்லை. ஆனால் ஒரு அரசாங்கம் கருத்தைச் சொல்லி அதற்குப் பின்னாலே அதனாலே பாதகம் விளையாது என்று கூறப்பட்ட உறுதி அடிப்படையில் அன்றைக்கு ஏற்றுக்கொண்டது. ஆனால் இன்றைக்கு ஒரு ஆட்சி நடத்தக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிற இன்றைய ஆளுங்கட்சி, ஏற்பட்டு விட்ட பாதகமான நிலையைக் கருதி மத்திய அரசு ஏற்கெனவே செய்த முடிவு தவறு என்றும், ஏற்றுக்கொண்டது தவறு என்றும் இன்றைக்கு எடுத்துக்காட்ட முன்வருமானால் திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்கு ஒப்புக் கொண்டது என்று சொன்னாலும் இந்த அரசாங்கம் செய்கிற காரியத்தை ஆதரிக்க திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள் பிரச்னையிலே என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ அத்தனையையும் நாங்கள் வெளியே சொல்லவேண்டியதை வெளியே சொல்லியும், நேரடியாக

சந்தித்துச் சொல்லவேண்டியதை சந்தித்துச் சொல்லியும், எங்களுடைய கடமையை சரிவர நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இப்போது இங்கே கொண்டுவந்து பேசப்பட்ட பிரச்னை கச்சத் தீவை தாரை வார்த்ததற்கு ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் துணை நின்றதைப் போல ஒரு கருத்தை உருவாக்கி காட்டியதாலேதான் அதற்கு நாங்கள் உடன்படவில்லை; அதிலும் குறிப்பாக நானும் அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டு வெளிநடப்பு செய்த காரணத்தாலே அதைச் சொல்ல வேண்டிய நிலை வந்தது.

* **திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஆட்சி நடத்துகிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அன்றையதினம் கச்சத் தீவை வழங்குவதற்கு ஒப்புக்கொண்டது என்ற கருத்து இந்த அவையிலே பேசப்படவில்லை. அந்த நோக்கத்திலே பேசப்பட வில்லை. மத்திய அரசு எடுத்த முடிவை முதல்கட்டத்திலே மறுத்து அடுத்தக் கட்டத்திலே ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பது தான் இங்கே சொல்லப்பட்டது. ஆகவே அதற்கு பரிகாரம் காண இன்றைய ஆளும்கட்சி முன்வருமானால் திராவிட முன்னேற்றக் கழகம் அந்தவகையிலே ஒப்புக்கொள்ளும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நாங்கள் எதை எதை ஏற்கிறோம், எதை எதை மறுக்கிறோம், எதை எதைச் சொல்லவேண்டும் என்பதை சொல்ல வேண்டிய கட்டத்தில் நிச்சயமாக நாங்கள் சொல்வோம். இப்போது அதற்கான சரியான சந்தர்ப்பம் இல்லை.

* **திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவரவர்களே, ஆளும் கட்சியாக இருக்கிற காரணத்தால் எத்தகைய சிக்கல் இருக்கிறது என்பது கல்வி அமைச்சர் தெரிவித்த அந்தக் கருத்திலிருந்து புலனாகும். அதே நிலைமைதான் அன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இருந்தது. (கரவொலி).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கச்சத் தீவைப் பொறுத்தவரையில் மத்திய அரசு ஒரு முடிவை எடுத்துவிட்டது என்பதற்காக தமிழ்நாட்டில் இருக்கிற மக்கள் அத்தனை பேரும் இப்போது



ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அவசியம் இல்லை. இப்பொழுதும் கூட தங்களுடைய முடிவை மாற்றுவதோ அல்லது நிறைப்படுத்துவதோ என்பதற்கான முழு அதிகாரமும் மத்திய அரசின் கையிலே இருக்கிறது. நாமே எல்லோரும் சேர்ந்து அந்த கச்சத் தீவு மீண்டும் நமக்குத்தான் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதில் நமக்கு யாருக்கும் ஆட்சேபனையே கிடையாது. அதற்கான வாய்ப்பு-சர்வ கட்சி கூட்டத்திலே நாம் முடிவு செய்கிறபோது ஒரு தீர்மான வடிவிலே கொணடுவந்து மறுபடியும் மத்திய அரசுக்கு நினைவுபடுத்தவோ, மத்திய அரசுக்கு வற்புறுத்தவோ நம்மைப் பொறுத்தவரையில் உரிமை பாதிப்போ, சங்கடமோ இருக்க நியாயமில்லை. அவர்கள் ஒப்புக்கொண்டார்கள் என்பதற்காக நாமும் ஒப்புக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. மீண்டும் மீண்டும் கூட வற்புறுத்தலாம். ஆக, வாய்ப்பு ஏற்பட்டால் இந்த அவை முழுவதும் சேர்ந்து முழுமனதாக அப்படிப்பட்ட தீர்மானத்திற்கு வாய்ப்பு அளிக்கும் என்ற நம்பிக்கை உண்டு. அதை நாம் செய்யலாம்.

* **திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னவர் அவர்கள் தந்திருக்கிற இந்தக் கருத்து அவைக்குத் தரப்பட்ட ஒரு உறுதிமொழியாகும். இந்த அவை முழுவதும் ஒப்புக்கொள்கிறது என்று சொல்லப்படுகிற கருத்து பெரும்பான்மையைத்தான் பெரும்பாலும் குறிக்கும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், அளவில்தான் நான் பேச முடியுமே தவிர அவை முழுவதற்கும் அதன் சார்பாக நான் பேசமுடியாது. ஆனால் முன்னவர் சொன்ன கருத்தை இந்த அவையிலே உள்ள பெரும்பான்மையோர் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். எனவே, பெரும்பான்மையாக இருக்கிற ஆளுங் கட்சியின் சார்பில் அப்படி ஒரு தீர்மானம் வருமானால் எதிர்க்கட்சியிலே இருக்கிற பெரும்பான்மையோர் அந்தத் தீர்மானத்தை ஆதரிக்க முடியும். இல்லை என்றால், எதிர்க்கட்சியினால் அப்படி ஒரு தீர்மானம் கொண்டுவரப்படுமானால் அது ஆளும் கட்சிக்குச் சற்று சிக்கலான இக்கட்டான ஒரு நிலைமையைத் தோற்றுவிக்கும். எனவே ஆளும் கட்சி சார்பில் அப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர முன்னவர் அவர்கள் உறுதி கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் முதலிலே சொல்லிவிட்டேன். சர்வக்கட்சிக் கூட்டத்தில் இப்படிப்பட்ட இலங்கைப் பிரச்சினை பற்றிப் பேசும்போது, இதுவும் முக்கியமான பிரச்சனையாக இருப்பதால், எல்லோருடைய ஒத்துழைப்புடனும் இப்படிப்பட்ட ஒரு முடிவு எடுக்கப்படுமானால், ஆளும் கட்சி சார்பிலே இங்கே அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவர ஆளும் கட்சி ஆயத்தமாக இருக்கும். (கரவொலி)

* **திரு. எச். ஜி. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிற அந்தத் தொகுதி பொது மக்களுக்கும் அதற்காக உழைத்த இந்திய தேசிய காங்கிரஸ், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் செயல் வீரர்களுக்கும் நான் முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை இன்றைக்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் முன்மொழிந்து, இங்கே அதை வழிமொழிந்து பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே எந்தவிதமான திட்டங்களும் இல்லை; உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நான் சொல்வதெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 1972-லே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்தபோது இது 6 மாதம் நிற்குமா, 100 நாள் ஓடுமா என்று பேசியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களாகும்.

(முற்பகல் 11-20)

1972-லே திண்டுக்கல் தேர்தலிலே, 6 மாதக் குழந்தையாக இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினரை அன்றைக்கு, புரட்சித் தலைவர் அவர்கள் நிறுத்தி, இலட்சக்கணக்கான ஓட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றோம்.



அப்படி வெற்றி பெற்றபோது எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் எல்லாம், பெரும் தலைவர்கள் எல்லாம், "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சினிமா போல போய்விடும்" என்று சொன்னார்கள். ஆனால் 1977-லே புரட்சித் தலைவர் அந்தத் தேர்தலைச் சந்திக்கின்ற நேரத்திலே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கோட்பாடுகளையும், கொள்கைகளையும் முன்வைத்து, ஏழை எளியவர்களுக்கு, ஏழை விவசாயிகளுக்கு, ஏழை அரிசன மக்களுக்கு பல நன்மைகள் செய்வேன் என்று அன்றைக்கு ஊர் ஊராகச் சென்று, கிராமம் கிராமமாகச் சென்று, நான் ஆட்சிக்கு வந்தால், இதையெல்லாம் செய்வேன் என்று அன்றைக்கு உறுதிமொழிகள் தந்தார்கள். அந்த உறுதிமொழிகளை எல்லாம் இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லுகின்ற நேரத்தில், அலையிலே நாங்கள் வெற்றிபெற்று விட்டதாகச் சொன்னார்கள். 1977-லே நாங்கள் வெற்றி பெற்றபோது எந்த அலையிலே வெற்றி பெற்று, அன்றைக்கு 127 இடங்களைப் பெற்றோம். அன்றைக்கு 127 உறுப்பினர்களை வெற்றிபெறச் செய்து ஆட்சியை அமைத்தார்கள். 2½ ஆண்டுக் காலம் நான் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவையிலே இருந்தேன். 1977-லே புரட்சித் தலைவர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பின்னாலே, 2½ வருடங்கள், அண்ணாவின் கொள்கைக்கும் கோட்பாடுகளுக்கும் ஏற்ற வகையிலே ஆட்சியை நடத்தினார்கள்.

ஆனால் அன்றைக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மத்திய சர்க்கார் எதிர்க்கட்சியினுடைய சொல்லின் பேராலே அன்றைக்கு இருந்த ஆட்சியைக் கலைத்தார்கள். பிறகு 1980-லே புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்போது. நான் 2½ ஆண்டுக்காலம் நல்ல பல திட்டங்களைக் கொண்டுவந்தேன், எனவே மேலும் நல்ல பல திட்டங்களைச் செய்யவேண்டுமானால் என்னை மீண்டும் தேர்ந்தெடுத்து அனுப்புங்கள் என்று மக்களிடம் சொன்னார்கள். அப்படிச் சொல்கிற நேரத்திலே, 1980-லே 128 இடங்களைப் பெற்று, பெரும்பான்மையாக இடங்களைப் பெற்று, இரண்டாம் முறையாக அவர்கள் முதலமைச்சராக ஆனார்கள்.

[திரு. எச். ஜி. ஆறுமுகம்] [1985 மார்ச் 13

இன்றைக்கு அவர்கள் உடல் நலம் குன்றி பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால், அமெரிக்காவில் படுத்துக்கொண்டு இருந்த நேரத்தில் இன்றைக்கு 133 இடங்களை அண்ணா தி.மு.க. கழகம் பெற்றிருக்கிறது என்றால், இது அலையா? இல்லை, புரட்சித் தலைவருடைய சாதனையா? என்பதை இன்றைக்கு தமிழகத்தில் உள்ள ஏழைய எளிய மக்கள், ஏழை விவசாயிகள் அத்தனை பேரும் நன்றாக உணர்ந்துதான், புரட்சித் தலைவர்தான் இன்றைக்கு தமிழகத்து முதல்வராக வரவேண்டும் என்று லட்சக் கணக்கான மக்கள் தாய்மார்கள் வாக்களித்திருக்கிறார்கள். அப்படி வாக்களித்து 133 சட்டமன்ற உறுப்பினர்களை இங்கே அனுப்பி, புரட்சித் தலைவர் அவர்களை மூன்றாம் முறையாக முதல்வராக ஆக்கியிருக்கிறார்கள்.

இந்த நேரத்திலே, கவர்னருடைய உரையிலே பல திட்டங்களை புரட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னாலே சத்துணவு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அவர் சிறுவயதிலே இலங்கையிலே ஏழ்மையிலே கஷ்டப்பட்டதை வைத்து, அதிகாரிகளிடத்திலே கலந்து பேசி உடனடியாக இந்த சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள், புரட்சித் தலைவர் அவர்கள். அதனால் இன்றைக்கு 80 லட்சம் குழந்தைகள் பயன் பெறுகிறார்கள். பள்ளிக்கூடத்திற்குச் செல்லுகின்ற அந்த ஏழைக் குழந்தைகள், ஒருவேளை உணவு கூட சாப்பிடுவதற்கு வசதியில்லாத குழந்தைகள் இருக்கின்ற காரணத்தால்தான் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து 80 லட்சம் குழந்தைகள், அதன் மூலமாக உணவைப் பெறுகின்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், இந்தத் திட்டத்தினால், விதவைத் தாய்மார்கள் படித்த இளைஞர்களுக்கு எல்லாம்—சுமார் 35 ஆயிரம் பேர்களுக்கு—வேலை கொடுத்திருக்கிறார்கள். அந்தக் காரணத்தால்தான் இன்றையதினம் புரட்சித் தலைவர் அவர்கள் மூன்றாம் முறையாக முதலமைச்சராக வந்திருக்கிறார்கள்.



1985 மார்ச் 13] [திரு. எச். ஜி. ஆறுமுகம்]

அதோடு 1980-லே புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த தற்குப் பின்னாலே, கிராம முன்சீப்புக்கள், கர்ணம் போன்றவர்கள் எல்லாம்—அந்தப் பதவியிலே 90 வயது, 80 வயது, 75 வயது உள்ள வர்கள் கூட இருந்தார்கள்—கொள்ளை அடித்துக்கொண்டிருக் கிறார்கள், அவர்கள் கிராமப்புறங்களைச் சரியாக கவனிக்க வில்லை என்று சொல்லி அவர்களுக்குப் பதிலாக இளைஞர்களாக இருக்கிறவர்கள், வில்லேஜ் அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபிசர்ஸ் என்று சொல்லி, பதவியில் அமர்த்தியிருக்கிறார்கள். இதன் மூலமாக படித்த இளைஞர்கள், அதுவும், எம்.ஏ. பி.ஏ. பி.எஸ்.சி படித்த இளைஞர்கள் எல்லாம் வேலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப் படித்த பல ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு எல்லாம் வேலைவாய்ப்பைக் கொடுத்ததினால்தான். இன்றைக்கு அண்ணா தி.மு.கழகம் மூன்றாம் முறையாக ஆட்சியைப் பிடித் திருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்கள் மூன்றாம் முறையாக முதல்வராக பொறுப்பேற்றிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு 170 கோடி ரூபாய் அளவிலே திருச்சி அருகிலே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க மைய அரசு அனுமதி கொடுத் திருக்கிறது என்பதை கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக் கிறார்கள். அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பத்தாயிரம் பாலர் நிலையங்களை பாலர் பள்ளிகளாக மாற்றுவதாக கவர்னர் உரையிலே குறிப்பிடப்பட்டிருப்பதையும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் அளிக்கப் படும் என்று இருந்ததை 20 ஆயிரமாக உயர்த்திக் கொடுத்திருப்ப தாக கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்றும் உழவுத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், சிறு உழவர்கள் கட்டுமானத் தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கு அவர்கள் பணியில் இருக்கும் போது இறந்தால் அளிக்கப்பட்டு வந்த இழப்பீட்டுத் தொகையை 5 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரமாக உயர்த்தியிருக்கிறார்கள். அதையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எச். ஜி. ஆறுமுகம்] [1985 மார்ச்

தமிழகம் முழுவதும் ஆதரவற்றோர் இல்லங்கள் அமைப்பதற்கான திட்டங்களை வகுத்திருப்பது, சோவியத் நாடு போல தமிழ்நாடு வளர்ந்து வருகிறது என்பதைக் காட்டுகிறது. சத்துணவு வழங்கும் திட்டமானது எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு தங்கக் கிரீடம் சூட்டுவது போன்றது என்று சொல்லி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியான பெண்ணகரம் தொகுதி காடு மேடு நிறைந்த தொகுதி. சுமார் 400 கிராமங்கள் என்னுடைய தொகுதியில் இருக்கின்றன. என்னுடைய சொந்த தொகுதி ரிசர்வ் தொகுதியான அரூர் தொகுதி. நான் 1977-லே தேர்தலில் நின்று ஜெயித்தபோது பரகூர் தொகுதியில்தான் நின்று ஜெயித்தேன். 1980-லே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எனக்கு சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. 1985-லே பென்னகரம் தொகுதியிலேயிருந்து வெற்றி பெற்றிருக்கிறேன்.

என்னுடைய இந்த பென்னகரம் தொகுதியில் 400 கிராமங்கள் இருக்கின்றன. அந்த மக்களுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் பல நல்ல திட்டங்களைத் தீட்டித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஒன்றிக் கொட்டை என்ற கிராமத்தில் உள்ள மக்கள் எங்கு செல்ல வேண்டும் என்றாலும் 6 கிலோ மீட்டர் தூரம் நடக்க வேண்டும். அந்தக் கிராமத்தில் 150 குடும்பங்களுக்கு மேல், கிட்டத்தட்ட 500 நபர்களைக் கொண்ட மக்கள் வாழ்கிறார்கள். அந்தக் கிராமத்திற்கு சரியான போக்குவரத்து வழி பாதையே கிடையாது. பஞ்சாயத்து யூனியன் மூலமாக 2 கிலோமீட்டர் வரையில் தற்போது வழி பாதை போடுவதற்கு சாங்ஷன் செய்யப்பட்டு, பாதைபோடும் வேலை தொடங்கியிருக்கிறது.

அதேபோல பென்னகரம் தொகுதியிலே ஒரு தொழிற்சாலைகூட இல்லை. தர்மபுரி மாவட்டத்திலேயே மிகவும் பின் தங்கிய தொகுதி எது என்றால் அது பென்னகரம் தொகுதிதான் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த தொகுதியிலே உள்ள எந்தக் கிராமத்திற்கும் போவதற்கு போக்குவரத்து வழிப்பாதை இல்லை. வாகனங்கள் நுழையவே முடியாத நிலை. நான் தேர்தலில் நின்ற நேரத்தில் மக்களை சந்தித்து



1985 மார்ச் 13] [திரு. எச். ஜி. ஆறுமுகம்]

[illegible]ட்டுக் கேட்கச் செல்கிற நேரத்தில், நான் சந்தித்த தாய்மார்களும், பெரியோர்களும் என்னிடம் கேட்ட கோரிக்கை எங்களுக்கு சாலை வசதி வேண்டும், குடிப்பதற்கு தண்ணீர் வேண்டும் என்பதுதான்.

இந்த இரண்டைத்தான் அவர்கள் பெரும்பாலும் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே எதிர்பார்க்கிறார்கள். நான் அவர்களுக்கு வாக்கு கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் தான் மறுபடியும் முதல்வராக வருவார்கள். அன்னை இந்திரா காந்தியின் அருமை மகன் ராஜீவ் காந்தி தான் பிரதமராக வருவார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராக வந்தவுடன், நானும் உங்கள் குறைகளை சட்டமன்றத்திலே பேசி, புரட்சித் தலைவர் அவர்களிடத்தும் எடுத்துக் கூறி, இந்த பென்னகரம் தொகுதிக்கு என்னென்ன செய்ய முடியுமோ அவைகளையெல்லாம் அவசியம் செய்வேன் என்று அங்குள்ள வாக்காளப் பெருமக்களிடம் உறுதி கொடுத்திருக்கிறேன்.

அங்கே இன்னும் பல கிராமங்களில் வாகனங்கள் மட்டுமல்ல, நடைபாதை அளவுக்குக் கூட மக்கள் செல்ல முடியாத வகையில் வழி இல்லாமல் இருக்கிறது. பிக்ளி என்ற பஞ்சாயத்து யூனியனிலே மலையூர் என்ற கிராமம் இருக்கிறது. அங்கே மலைமீது ஏறி அந்த மக்களை நான் ஓட்டுக் கேட்கிற நேரத்தில், அவர்கள் என்னிடம் கேட்டது, நாங்கள் இரண்டு பர்லாங் தூரம் கீழே இறங்கி வந்து கிணற்றிலேயிருந்து தண்ணீர் எடுத்துச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே மலையூரிலேயே அந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க ஒரு மேல்நிலை தொட்டி. ஓவர் ஹெட் டாங்க் கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இன்று பஞ்சாயத்து யூனியன் மூலமாக, குடிதண்ணீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, அதற்கான ஏற்பாடுகளைச் செய்து சாங்ஷனுக்கு அனுப்பியிருக்கிறது, அதற்கு அரசாங்க அனுமதியை பெற்றுத்தரவேண்டும் என்று அமைச்சர் அவர்

(முற்பகல் 11-30)

களைக் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் என்னுடைய பென்னகரம் தொகுதியிலே ஒரு சிறிய தொழிற்சாலை கூட இல்லை. அங்கே வாழ்கின்ற மக்கள் எல்லாம் ஏழை எளிய

விவசாயிகள். அங்கே தொழிற்சாலைகள் இல்லாத காரணத்தினால் வேலை இல்லாமல் இருக்கிறது. அவர்களை வாழ வைக்கின்ற ஒரு தெய்வமாக புரட்சித் தலைவர் அவர்கள் மூன்றாவது முறையாக பொறுப்பு ஏற்றிருக்கிறார்கள். அந்த பகுதி மக்களுக்காக பல கோரிக்கைகளை நான் தந்திருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலும், அமைச்சர் பெருமக்களிடத்திலும் அதை செய்து தரும்படி கேட்டுக்கொண்டு, இங்கே கவர்னர் உரை மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

*திரு. கு. தமிழரசன்: சட்டப் பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே, மேதகு ஆளுநர் உரையின் மீதான நன்றி அறிவிப்பை சட்டமன்ற உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் கொண்டு வந்து முன் மொழிந்ததை, இந்திய குடியரசு கட்சியின் சார்பில் நான் வழி மொழிந்து உரையாற்றுகிறேன். என்னுடைய கன்னிப் பேச்சை தொடங்குவதற்கு முன்னால் என்னை போன்ற ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த 45 சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த சட்டமன்றத்திலே இடம் பெறுவதற்கு வழி செய்த எங்கள் வணக்கத்திற்குரிய தலைவர் அம்பேத்கார் அவர்களை நினைவு கூர்வதிலும் என்னை வெற்றி அடையச் செய்த பேரணாம்பட்டு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றி தெரிவிப்பதிலும் மகிழ்ச்சி அடைகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்திலே பல புதிய மக்கள் நலப் பணித் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அவற்றை இந்திய குடியரசு கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். ஏழை எளிய மக்களுக்காக சத்துணவுத் திட்டம், இலவசமாக வேட்டி, புடவை வழங்குதல், எல்லா குடிசைகளுக்கும் ஒளிவிளக்கு அளித்தல், போன்று தாழ்த்தப்பட்ட மக்கள் பயன் அடைகின்ற அளவிற்கு திட்டங்கள் தீட்டுதல் போன்றவற்றிற்கு ஒரு கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த வேளை சோற்றிற்கு வழி என்று ஆராய்வதிலும், சோற்றிற்காக பணம் சம்பாதிப்பதிலேயே தங்களுடைய வாழ்க்கையை கழித்துக்கொண்டுள்ளது தாழ்த்தப்பட்ட சமுதாயம். அந்த சமுதாயத்தினுடைய குழந்தைகளுக்கு சோறு போடுவதற்காக இலவச சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து,



தாழ்த்தப்பட்ட மக்கள் பயன் அடையுமாறு செய்த புரட்சித் தலைவர் அவர்களுக்கு தாழ்த்தப்பட்ட சமுதாயம் மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறது. இந்த தாழ்த்தப்பட்ட சமுதாயம் கடந்த தேர்தலிலே, மத்திய தர வர்க்கத்தாலும், மேட்டுக்குடி வர்க்கத்தாலும் ஏற்பட்ட எதிர்ப்புகளை கடந்து நின்று, தாழ்த்தப்பட்ட மக்கள் வாக்களிக்கக்கூடாது என்று எல்லாத் தொகுதிகளிலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராகப் பணிகள் நடைபெற்ற போதும், அவர்கள் புரட்சித் தலைவர் அரசு மீண்டும் வருவதற்கு மிகப் பெரும்பான்மையான வாக்குகளை அளித்து, புரட்சித் தலைவர் அரசை மீண்டும் கொண்டுவந்திருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கப்பட்ட நல்ல திட்டங்களுக்கு என்றென்றும் அவர்கள் நன்றி உள்ளவர்களாக புரட்சித் தலைவர் பக்கம் இருப்பார்கள் என்பதைத் தான் இது சுட்டிக் காட்டுகிறது.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த சட்டமன்றத்திலே எட்டாம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்கு இலவச துணிகளை வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் பிரதிநிதி என்ற வகையில் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். இப்படிப்பட்ட திட்டங்களினால் பெரும்பான்மையான பலனை அடைவது ஏழை எளிய சமுதாயத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் தான். இந்த நாட்டிலே 90 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வறுமை கோட்டிற்கு கீழே சேரிப் புறங்களில், தாழ்த்தப்பட்டவர்களாக தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கப்பட்டவர்களாக, நசுக்கப்பட்டவர்களாக, குடிக்க தண்ணீர் இல்லாமல், வீடு இல்லாமல், எந்தவித அடிப்படை வசதியும் இல்லாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்த மக்கள் மேலும் வளர்வதற்கும், மேலும் பலன் அடைவதற்கும் நல்ல திட்டங்களை மேதகு ஆளுநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறேன். ஆனால் ஆளுநர் அவர்களுடைய உரையிலே, ஆதிதிராவிடர் நல மேம்பாட்டிற்காக, விரிவான திட்டங்கள் தயாரிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்களே, அது என்ன திட்டங்கள் என்று சொல்லவில்லை. கிராமப்புறங்களிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் பல இன்னல்களை அனுபவித்துக்கொண்டிருப்பவர்களாக இருக்கிறார்கள். மேதகு ஆளுநர் அவர்கள்

தொழிற்துறையைப் பிரித்து, கதர்த் துறை ஒன்றை உருவாக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த மன்றத்தின் மூலமாக ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். கடந்த 10 ஆண்டுக் காலமாக ஆதிதிராவிட நலத் துறையை வருவாய்த்துறையிலிருந்து பிரித்து, தனித் துறையாக ஏற்படுத்தவேண்டுமென்ற கோரிக்கை இருந்துவருகிறது. மாண்புமிகு சௌந்திரபாண்டியன் அவர்கள், இந்த சட்டமன்றத்தில் பேசும்போது, ஆதிதிராவிட நலத்துறையை வருவாய் துறையிலிருந்து பிரித்து, தனித் துறையாக மாற்றுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் ஆதிதிராவிடர் நலம் வருவாய்த்துறையிலே தான் இருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தொழிற்துறையிலிருந்து கதருக்காக ஒரு துறை வைக்கப்படும் என்று சொன்னார்கள். அதுபோன்று வருவாய்த்துறையிலிருந்து, ஆதிதிராவிடர் நலத் துறையைப் பிரித்து, ஆதிதிராவிடர் நலனுக்காக ஒரு தனித் துறையை இங்கே ஏற்படுத்தவேண்டுமென்று நான் இந்த சட்டமன்றத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கவேலு அவர்கள் குறிப்பிட்டதைப் போல எல்லா தனியார் நிறுவனங்களிலும், வேலை வாய்ப்புகளில் 18 விழுக்காடு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்படவேண்டுமென்று நான் வலியுறுத்தவிரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, அரசுத் துறைகளில் எல்லாம் தான் 18 சதவீத விழுக்காடு தரப்படுகிறதே தவிர, கோடிக்கணக்கான பணத்தைப் பெற்று அரசாங்க உதவியோடு நடைபெறும் தனியார் நிறுவனங்களில் இந்தச் சட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை. நாம் எவ்வளவோ வலியுறுத்தினாலும், அங்கே தாழ்த்தப்பட்ட மக்கள் நிராகரிக்கப்படுகிறார்கள். எனவே, தனியார் நிறுவனங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 விழுக்காட்டைத் தரவேண்டுமென்ற உரிமையை அளிக்கவேண்டுமென்ற சட்டத்தை நீங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். கல்விச் [illegible] பெறுவதைப் போல, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு [illegible] தனியார் நிறுவனங்களிலும் மற்றும் தொழில் தொடங்கு





வதிலும் முன்னுரிமை கொடுத்து, 18 விழுக்காட்டை கட்டாயமாகக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து வீடுகட்டிக்கொள்வதில், இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்படுவதில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். 90 இலட்சம் மக்கள் வீடு இல்லாமல், புறம்போக்குப் பகுதிகளில் வீடுகளைக் கட்டிக்கொண்டும், சாலைகளின் ஓரங்களிலும், பிளாட்பாரங்களிலும் வசிப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தேவையின் அடிப்படையில், வீட்டுவசதி பெறுவதற்கு இலவச வீட்டு வசதி செய்துதரவேண்டுமென்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அரசுப் பணிகளிலும், ஏராளமான போலிச் சான்றுகளைப் பெற்று, தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு வழங்கப்படுகின்ற உரிமைகளை மற்ற சமுதாயத்தினர் பெற்று அனுபவித்துக்கொண்டு வருவதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், போலிச் சான்றிதழ் பெற்று ஒரு சட்டமன்ற உறுப்பினரே போனமுறை வந்துவிட்ட அவல நிலையைப் பார்த்தோம். இப்படி போலிச் சான்றுகளைப் பெற்று, தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற உரிமைகளை வேறு சமூகத்தவர் அனுபவிக்கின்ற முறைகேடான கொடுமைகள் இன்றைக்கு நடந்துகொண்டிருக்கின்றன. எனவே அரசாங்கம் ஒரு சட்டம் போட்டு, இப்படி முறைகேடான சான்றுகளைப் பெறுபவர்களை கொடுமையான தண்டனைக்கு உள்ளாக்கவேண்டுமென்று இம்மாமன்றத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து ஆதிதிராவிடர் விடுதிகள் இங்கே இருக்கின்றன. ஆனால் அந்த விடுதிகள் எல்லாம் ஏதோ சத்திரங்களைப் போல் இருந்துகொண்டிருக்கின்றன என்பதை நாம் பார்க்கிறோம். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் ஒரு விடுதியைச் சென்று பார்வையிட்டார், அவர் மிகவும் வேதனைப்பட்டார். இப்படி ஒரு சாதாரண நிலைமையில், மின் விளக்கு, மேசை வசதி போன்ற வசதிகள் இல்லாத நிலைமை தான் இன்றைக்கு இருந்து

கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையை மாற்றி, எல்லா இடங்களிலும் இந்த மாணவர்கள் கல்வி அறிவில் மேம்பட்டு, வளர்ச்சியடையவேண்டுமென்ற வகையில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கல்வி வளர்ச்சி பெற்றால்தான் சமூக அந்தஸ்தை அவர்கள் பெறமுடியும். அப்படி சமூக அந்தஸ்தை அவர்கள் பெறுவதற்கு, கல்வி வசதியைப் பெறுவதற்கு, இந்த விடுதிகள் சிறந்த முறையில், வசதியான முறையில் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து ஆதிதிராவிட மாணவர்களுக்காக வழங்கப்படுகின்ற உதவித்தொகை எந்தக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதோ, அதே நிலையில், அந்தத் தொகையிலேயே இருந்துகொண்டிருக்கிறது, இன்னும் உயர்த்தப்படவில்லை. பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றவாறு, தேவைக்கு ஏற்றவாறு உதவித்தொகை உயர்த்தப்படவில்லை. எனவே உதவித்தொகை உயர்த்தப்படுவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து சாதிக் கொடுமை நாட்டிலே பெருகி இருக்கிறது. முதுகளத்தூர், வெண்மணி, விழுப்புரம், மதுராந்தகம், சிக்கனாங்குப்பம், கோவடி ஆகிய இடங்களில் இவை தொடர் கதையாக இருக்கிறது. அந்தத் தொடர் கதை நிறுத்தப்படவேண்டும். இந்தக் கொடுமையை கண்டிப்பான சட்டங்களின் மூலமாக தடுத்து நிறுத்த ஆவனசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் இந்த நாட்டு அரசியல் சட்டத்தை எழுதித் தந்து, மொழிந்து பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். இந்தியத் துணைக்கண்டம் முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டும் என்று சொன்னால் அந்தப் பாதையில் ஜாதி மதப் பேய்கள் தடுத்து நின்று கொண்டிருக்கின்றன. அவைகளை ஒழிக்காவிட்டால் இந்தியத் துணைக்கண்டம் அரசியலிலும் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் எந்த விதமான முன்னேற்றத்தையும் பெற்றுவிட முடியாது என்று





டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சொன்னார்கள். ஜாதி ஒழிப்பிலே நாம் முழுமூச்சுடன் ஈடுபடவேண்டும். விழுப்புரம், வெண்மணி போன்ற பிரச்சினைகளில் ஈடுபட்டவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுத்து இருந்தால் இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடந்து இருக்காது. எனவே, இப்படிப்பட்ட சம்பவங்களில் ஈடுபடுகிறவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்கவும், சாதி, சமய வேறுபாடுகளை ஒழிக்கவும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மாவட்டங்களைப் பிரிப்பதைப் பற்றி கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். வடஆற்காடு மாவட்டம் இரண்டாக பிரிக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டம் இரண்டாக பிரிக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. மாவட்டங்களுக்கு தலைவர்களின் பெயர்களை வைத்து பிரிக்கின்ற நேரத்திலே வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாக பிரிக்கும் போது ஒரு மாவட்டத்திற்கு டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பெயரை வைத்து அம்பேத்கார் மாவட்டம் ஏற்படுத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்திலேயும், ஈரோட்டிலே ஒரு பத்திரிகை வாயிலாகவும் இதை தெரிவித்து இருக்கிறார்கள். அம்பேத்கார் மாவட்டம் நாங்கள் வைப்போம் என்ற உறுதியை கொடுத்து இருக்கிறார்கள். வரும் ஏப்ரல் மாதம் 14 ஆம் தேதி அம்பேத்கார் அவர்களின் 97-வது பிறந்த நாள் வருகிறது. அந்த நாளிலே அம்பேத்கார் மாவட்டம் ஏற்படுத்தி இந்த நாட்டில் உள்ள 1 கோடி தாழ்த்தப்பட்ட மக்களை மகிழ்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நன்னிலம் திரு. மணிமாறன் அவர்கள் பேசும்போது இந்திய குடியரசு கட்சி பல போராட்டங்களை நடத்தி அம்பேத்கார் சிலையை வைத்தோம் என்று சொன்னார்கள். எங்களுடைய தலைவர் பேராசிரியர் சிவராஜ் அவர்கள் சடலத்தை டெல்லியிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் தான் கொண்டு வர ஏற்பாடு செய்தது என்றும் சொன்னார்கள். எந்த தி.மு.க. பேராசிரியர் சிவராஜ் அவர்களுடைய சடலத்தைக் கொண்டு வர உதவியதோ அதே தி.மு.க.-தான் பேராசிரியர் சிவராஜ் அவர்களு

டைய மகனை எஸ்.பி. யாக இருந்தவரை வேலை நீக்கம் செய்து வீட்டுக்கு அனுப்பியது. தி.மு.க. தான் அதை செய்தது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

பஞ்சாயத்து தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்று இங்கே சொன்னார்கள். ஆளுநர் உரையிலே அது குறிப்பிடப்படவில்லை என்று சொன்னார்கள். பஞ்சாயத்து தேர்தல் நடத்தப்படவேண்டும், நடத்தப்படவேண்டும் என்று எல்லா கட்சியினரும் சொன்னாலும் 18 சதவீதம் ஒதுக்கீடு செயல்படுத்தப்படவேண்டுமா, இல்லை பழைய முறையில் தேர்தலை நடத்தப்படவேண்டுமா என்பதைப் பற்றி யாரும் சொல்லவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிதம் தரவேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். பல கட்சிக்காரர்கள் வழக்கு மன்றத்திற்கு சென்று தடை உத்திரவு வாங்கினார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் வந்துவிடக்கூடாது என்பதற்காக மற்ற சமுதாயத்தினர் மறைமுகமாக இன்றும் ஈடுபடுகிறார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கீடு செய்து பஞ்சாயத்து தேர்தல்களை நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

* **திரு. கே. அன்பழகன் (ஓமலூர்)**: மாண்புமிகு மாமன்றத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின் மீது நான் சார்ந்துள்ள காங்கிரஸ் கட்சியின் சார்பாக கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். மத்தியிலேயும், மாநிலத்திலேயும் நிலையான, வலுவான நல் ஆட்சியை உருவாக்குவதற்கு வீராங்கனை அன்னை இந்திரா காந்தி அவர்களும், புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களும் சேர்ந்து உருவாக்கிய முற்போக்கு கூட்டணியை மகத்தான வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், இந்த மாமன்றத்திலே பேச வாய்ப்பு தந்த ஓமலூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும் இதய பூர்வமான நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1967-ல் தமிழகத்திலே காங்கிரஸ் தோற்றது. அப்போது பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் சொன்னார்கள். மக்களுடைய தீர்ப்புக்கு தலை வணங்குகிறேன். 6 மாத காலத்திற்கு நான்





தி.மு.க. அரசைப்பற்றி விமர்சிக்கமாட்டேன் என்று சொன்னார்கள். அத்தகைய ஜனநாயக பண்பு நிறைந்த பெருந்தலைவர் இருந்த இந்த மாமன்றத்திலே நம்முடைய மக்கள் அளித்த தீர்ப்பை கொச்சைப்படுத்தி, கேவலப்படுத்தி, களங்கப்படுத்தி, அனுதாப அலை என்று இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக, ஜனதா, மார்க்சிஸ்ட்டு கம்யூனிஸ்டு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசியதற்காக நான் மெத்த வருத்தப்படுகிறேன். அன்புக்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சிந்தன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், இன்றைய தினம் தேர்தல் வந்தால், வில்லிவாக்கம் வரும், பெரம்பூர் வரும், எழும்பூர் வரும் என்று சொன்னார்கள், எழும்பூர், பெரம்பூர் வரும் என்று சொன்னவர்கள் அதற்கு பின்னாலே வந்த திருப்பத்தூரையும், பாண்டிச்சேரியையும் சொல்ல மறந்துவிட்டார்கள். இருக்கின்ற வில்லிவாக்கமும், பெரம்பூரும் எதிர்காலத்திலே பறிபோய்விடும் என்பதைத்தான் திருப்பத்தூர், பாண்டிச்சேரி தேர்தல்கள் காட்டுகின்றன. மக்கள் அளித்த தீர்ப்பை, படிப்பினையை திராவிட முன்னேற்றக் கழகம் உணரத் தவறுமேயானால் மதிக்கத் தவறுமேயானால், கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதித்தாலும் மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பொறுப்புக்கு வர தமிழக மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் என தெரிவித்துக் கொள்கிறேன். ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றக் கூடிய நல்ல பல திட்டங்களை மேதகு ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். குழந்தைகளுக்கு இலவச சீருடை, பாட புத்தகங்கள், அரசுப் பணியாளர்களுக்கு குடும்ப நல நிதி உயர்வு, தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை உயர்வு, கிராமப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குதல், கைத்தறி நெசவாளர்களுக்கு உடனடி வீட்டு வசதி தருதல், புதிய தொழிற் கல்வி திட்டம் போன்ற சிறப்பான திட்டங்களை நாங்கள் வரவேற்பதோடு அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இந்த அரசுக்கு பரிபூரணமான நல் ஆதரவைத் தருவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் இலங்கைப் பிரச்சினைப்பற்றி தொட்டுக் காட்டினார்கள். மத்திய அரசு ஏதோ இலங்கைப் பிரச்சினையிலே வாளா இருப்பது போலவும், அக்கறை இல்லாதது போலவும், நீலிக்கண்ணீர் வடித்து அரசியல் ஆதாயம்

தேடுவதில் ஈடுபட்டார்கள். இலங்கைப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதிலே மத்திய அரசும், மாநில அரசும் உறுதியாக இருக்கின்றன. அதற்குரிய நடவடிக்கைகள் ராஜ தந்திர முறையில் எடுக்கப்பட்டு வருகிறது. எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் சொன்னார்கள். ஏதோ விடுதலைப் புலிகளை கொல்லுவதற்காக ஆயுதம் தாங்கிய விமானத்தை திருவனந்தபுரம் விமான நிலையத்திலே பெட்ரோல் அடிக்க வந்த விமானத்தை விடுவித்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். சர்வதேச சட்டப்படி அந்த வழியாக செல்லுகின்ற அயல்நாட்டு விமானத்திற்கு பெட்ரோல் போடுவதற்கு வாய்ப்பு இருப்பதால் பெட்ரோல் போடப்பட்டு அனுப்பப்பட்டதே தவிர விடுதலைப் புலிகளை கொல்லுவதற்காக ஆயுதம் தாங்கிய விமானத்தை விடுவித்ததாக சொல்வது தவறான கருத்து ஆகும். மேதகு ஆளுநர் உரையிலே இருக்கக்கூடிய சில குறைபாடுகளை சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பிலே இருக்கிற காரணத்தால் குறிப்பிட விரும்புகிறேன். உள்ளாட்சித் தேர்தலைப் பற்றி அதில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அது எங்களுக்கு உண்மையில் மிகுந்த ஏமாற்றத்தைத் தருகிறது. உள்ளாட்சி மன்றங்களிலே மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தாலே பஞ்சாயத்து நிர்வாகம் சரியாக இயங்கவில்லை என்பதை நான் சபையின் கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன். பாதை வசதி, குடிநீர் வசதி, சாக்கடை வசதி, கழிப்பிட வசதி, தெரு விளக்கு வசதி, செய்து தரவேண்டும் என்று சொன்னால் விரைவாக உள்ளாட்சித் தேர்தல்களை நடத்த முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அருமையான, சிறப்பான திட்டமாகும், அந்த திட்டத்தை எங்கள் கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் சத்துணவு மையங்களுக்கு காய்கறி சப்ளை செய்யும் சங்கங்கள் கொள்ளை லாபம் அடிக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உதாரணமாக சொல்ல வேண்டுமானால் வெளி மார்க்கெட்டில் ஒரு கிலோ தக்காளி 20 பைசா தான் விற்கிறது. ஆனால் சங்கங்கள் சப்ளை செய்யும் தக்காளியினுடைய விலையோ ஒரு கிலோ 2 ரூபாய். ஆகவே அது மட்டும் அல்லாமல் விலையை அதிகமாக கொடுப்பதோடு மட்டும் அல்லாமல் கெட்டுப்போன காய்கறிகளை சப்ளை



செய்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு காய்கறி சங்கங்கள் ஏதுவாக இருக்கின்றன என்பதையும் அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். பெண்களுக்கு கழிப்பிடம் போன்ற சுகாதார திட்டங்கள் ஆளுநர் உரையில் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தத் திட்டங்கள் பாராட்டக்கூடிய திட்டங்கள். கிராமப் பகுதிகளிலே கட்டப்பட்ட பெண்களுக்கான கழிப்பிடங்களுக்குப் போதிய தண்ணீர் வசதி இல்லாததால் அவைகள் அசுத்தமாகப் பயனற்ற நிலையில் இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவைகளுக்குத் தண்ணீர் வசதி செய்து தருவதோடு, பகலில் துப்புரவுப் பணியாளர்களை அந்தக் கழிப்பிடங்களுக்கு நியமிக்க வேண்டுமென்று அரசிடம் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

ஆட்சி என்ற தேரை விடுவதற்கு ஆற்றல் மிகு சாரதியாகப் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கிறார்கள். சாரதியின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு மிகவும் வேகமாகச் செல்லுகின்ற புரவிகளாக அமைச்சர் பெருமக்கள் இருக்கிறார்கள். ஆனால் நிர்வாகச் சக்கரம் சற்றுப் பழுதடைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

முதியோர் ஓய்வூதியத் திட்டம், ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டம், பட்டா வழங்குகின்ற திட்டம் போன்ற பல்வேறு நல்ல அம்சங்கள் இருந்தாலும், அடிமட்டத்திலே உள்ள அதிகாரிகள் அந்த ஏழை எளிய மக்களுக்குச் சென்று சேர வேண்டிய பயன்களை அவர்களுக்கு எட்டாக் கனியாகச் செய்யும் வகையில், அந்த மக்களை இழுத்தடித்து இழுத்தடித்து துன்பத்திற்கு அவர்களை ஆளாக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகின்ற பணத்தை அடிமட்டத்திலே உள்ள அதிகாரிகள் கிடப்பிலே போட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசுக்குச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன் பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் காங்கிரஸ் கட்சியின் நிலை என்ன என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், உங்களைப்போன்று * * கண்மூடித்தனமாக ஆளுங்கட்சியை எதிர்ப்பது என்பது எங்களுடைய நோக்கமல்ல. ஆக்கபூர்வமான திட்டங்கள் தீட்டப்படுகின்றபொழுது நிச்சயமாக நாங்கள் அவற்றைப் பாராட்டுவோம்; அதைப்போன்றே மக்களுடைய குறைகள் என்று வருகின்றபொழுது நிச்சயமாக அவற்றை எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு பொறுப்பான எதிர்க்கட்சியாகக் காங்கிரஸ் கட்சி செயல்படும் என்பதை இந்த நேரத்தில் அந்த நண்பருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஓமலூர் தொகுதியைப்பற்றிப் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. ஓமலூர் தொகுதியிலுள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயத்தை நம்பியிருப்பதால், தற்போது உள்ள தொப்பையாற்றில் கட்டுகின்ற நீர்த் தேக்கத்தின் மூலம் பாசனத்திற்கு வசதி செய்து தர வேண்டுமென்று அரசினை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சரபங்க ஆற்றின் குறுக்கே ஒரு அணையைக் கட்டி, அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளின் நீண்ட காலக் குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, என்னுடைய தொகுதியிலே உள்ள காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குப்பியாம் கோட்டை ஏரி சிறுபாசனத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஓமலூர் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக ஆணையிட்டு, முதல் தவணையாக பத்து இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்த தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் ஓமலூர் தொகுதி மக்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது





இந்த மாமன்றத்திலே அன்னை இந்திரா காந்தி அவர்களின் திருவுருவப் படத்தை வைப்பதற்கு முன்வந்த தமிழக அரசுக்கு என்னுடைய பாராட்டினைத் தெரிவித்துக்கொண்டு, இங்கே பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவை மாற்றுத் தலைவரவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. ஆ. நடராசன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது * * என்று சொன்னார்கள். அது அவைக் குறிப்பில் இருக்கலாமா? இப்படிப் பேசுவதாக இருந்தால் எங்களுக்குப் அவ்வாறு சொல்லத் தெரியும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) :** * * என்ற வார்த்தை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

***திரு. இரா. சண்முகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்களால் முன்மொழியப் பெற்ற தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றிகூறி என்னுடைய கருத்துக்களைக் கூற நான் விழைகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மூன்றாவது முறையாக மக்களைச் சந்தித்து வாக்குகளைப்பெற்று பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்களைக்கொண்டு, சரித்திரத்தில் பொறிக்கக் கூடிய அளவிற்கு மூன்றாவது முறையாக முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இப்படி மூன்றாவது முறையாக, பொன்னேட்டில் பொறிக்கத் தக்க அளவிற்குப் பதவியேற்றிருக்கின்ற அந்தச் சரித்திர நாயகனைப்பற்றி எதிர்வரிசையிலே இருக்கின்ற நண்பர்கள்—குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நண்பர்கள். உங்களுக்கு வாக்குகளைப் பெரும்பான்மையாக அளிக்கதற்கு நீங்கள் கொடுத்திருக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றிய காரணந்தானா அல்லது தேர்தல் காலங்களிலே மக்களுக்குக் கொடுத்திருக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டீர்கள் என்ற காரணத்தானா அல்லது கள்ளக்

---

* * மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கடைகளையும், சாராயக் கடைகளையும் மூடிவிடுகிறோம் என்று சொல்லி விட்டு மூடிவிடாமல் இருக்கின்ற காரணத்தாலா என்று கேட்டார்கள். அல்லது மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற வறுமையை நாம் ஒழித்துவிட்டோம் என்பதால் ஓட்டுப்போட்டார்களா? அல்லது விலைவாசியைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம் என்று சொல்லி வாக்குகளைப் போட்டிருக்கிறார்களா? அல்லது கிராம அதிகாரிகளை மொத்தமாக ஒழித்துவிட்டோம் என்று சொல்லி வாக்குகளைக் கொடுத்தார்களா? அல்லது என்.ஜி.ஓ.-க்களுக்கு போனஸ் கொடுக்கிறோம் என்று சொல்லி, அதனால் வாக்குகளைக் கொடுத்தார்களா? அல்லது ஐந்து கிலோ அரிசிக்கு ஒரு கிலோ அரிசி இலவசமாகக் கொடுப்போம் என்று சொன்னதற்காக வாக்குகளைக் கொடுத்திருக்கிறார்களா என்றெல்லாம் வருணித்தார்கள். அவர்களுக்கெல்லாம் நான் ஒன்றைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி இவைகளை எல்லாம் நாங்கள் மக்கள் மத்தியிலே எடுத்து வைத்து மக்களுக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகளைச் செய்து தருகிறோம் என்று சொன்ன காரணத்தால்தான் வாக்குகளைப் பெற்று 1977-லே சட்டமன்றத்திற்கு வந்ததற்குப் பிறகு மீண்டும் 1980-லே நாங்கள் இவைகளை எல்லாம் செய்து சாதித்திருக்கிறோம் என்று மக்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலேதான் அவர்கள் வாக்குகளை அளித்திருக்கிறார்கள். 1980-க்குப் பின்னால் 24—12—1984-ல் நடந்த தேர்தலிலே மீண்டும் நீங்கள்தான் தமிழகத்தை ஆளவேண்டும் என்று சொல்லி மக்களுக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகளைப் புரட்சித் தலைவர் ஒருவரால் தான் நிறைவேற்ற முடியும் என்று எண்ணித்தான் அந்த வாக்குகளை அளித்திருக்கிறார்கள் என்று நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல் புரட்சித் தலைவர் அவர்கள் கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் மூடவேண்டும் என்று சொன்னார்களே. அதாவது கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் தவறாக உபயோகப்படுத்தி வருபவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற வகையில் ஏழை எளிய மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் அதிகமாகக் குடித்து விடுவதன் காரணத்தால் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற தாய்மார்கள் எல்லாம் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்





என்பதற்காக குடிப்பவர்களை நாடு கடத்துவேன் என்று சொன்னபோது எதிர் வரிசையிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் நண்பர்கள் எள்ளி நகைத்து, இப்படி நாடு கடத்த முடியுமா என்றெல்லாம் வம்புக்கிழுத்து அப்போது பேசியதை நான் நினைவு கூற விரும்புகிறேன்.

வறுமையை ஒழித்துவிட்டீர்களா என்று கேட்டார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்திவிட்டீர்களா என்று கேட்டார்கள். விலைவாசி ஓரளவிற்குக் கட்டுப்பாட்டோடு இருந்து வருகின்றது. வறுமை ஓரளவுக்கு ஒழிந்திருக்கின்றது. காரணம் அடித்தளத்திலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்களுக்கு அரிசி அதிகப்படியாகத் தேவைப்படுகின்ற உணவு என்பதால் அதைக் கொள்முதல் செய்து வைத்திருக்கின்ற கொள்கையைத் தமிழ்நாடு அரசு கொண்டிருப்பதன் காரணத்தால் அரிசி விலையேற்றம் கட்டுக்கடங்கி இருக்கின்றது. அந்த வகையில் 20 ஆயிரம் நியாயவிலைக் கடைகளைத் துவக்கி மாதம் ஒன்றுக்கு 80 ஆயிரம் டன் விநியோகிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால்தான் அரிசி விலையேற்றம் தமிழ்நாட்டிலே கட்டுப்பாடோடு இருந்து வருகின்றது என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஒரே ஒரு நாள் உத்தரவின்பேரில் பல ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் கேரளாவிற்குப் போவதற்கான வாய்ப்பை உருவாக்கிவிட்டு அதற்குப் பின்னால் செயற்கை முறையிலே தமிழகத்திலே பஞ்சத்தை உருவாக்கிவிட்டார்கள். அதை மக்கள் மறந்துவிடவில்லை என்பதை நினைவு கூற கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி ஒரே நாளில் பஞ்சத்தை உருவாக்கி தமிழகத்திலே அடித்தளத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற, பொருளாதாரத்திலே பின்தங்கியிருக்கின்ற மக்கள் தங்கள் கையிலே ரூபாயை வைத்துக் கொண்டிருந்தாலும் அரிசி கிடைக்கவில்லையே என்று அவதிப்படுகின்ற அவல நிலையை உருவாக்கியது அவர்களுக்கு நினைவில் இருக்காது என்று நினைக்கிறேன். ஆனால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுநாள் வரையில் அரிசி கிடைக்கவில்லை; விலையேற்றம் ஏறியிருக்கின்றது என்று யாரும் சொல்லாத அளவுக்கு நியாய விலைக் கடைகளின் மூலமாக 80 ஆயிரம் டன் அரிசியைக் கொண்டுவந்து

[திரு. இரா. சண்முகம்] [1985 மார்ச் 1[illegible]

இங்கே விநியோகம் செய்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் செய்திருக்கின்ற காரியத்தை மக்கள் உற்று கவனத்தோடு பார்த்ததற்குப் பிறகுதான் மூன்றாவது முறையாக அவர்கள் தலைமைதான் வேண்டும், அந்தத் தானைத் தலைவன் எட்டு ஆயிரம் மைல்களுக்கு அப்பால் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தாலும், உலகத்திலே எங்குமே நடைபெறாத அளவுக்கு மக்கள் வாக்களித்து வெற்றிபெறச்செய்தார்கள். அப்போது அவர்கள் உடல்நலம் குன்றியிருந்தார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் தமிழக

(நண்பகல் 12-00)

மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் செய்திருக்கிற நல்ல காரியங்கள், அடிப்படை வசதிகள் எல்லாம் ஓரளவுக்கு முற்று அடைந்திருக்கின்றன என்பதுதான் உண்மையாகும். ஆனால், அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, ஏதோ அனுதாப அலையாலே வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று ஈனமாக இந்த அவையிலே பேசுவது அவ்வளவு சாமர்த்தியமானதாக இருக்குமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். தோற்றத்திற்கு மனதிற்குச் சமாதானமாக அவர்கள் சொல்லிக் கொள்ளலாமே தவிர, அதையே முழுக் காரணமாக அவர்கள் ஏற்றுக் கொள்வார்களானால், இப்படிப்பட்ட தன்மையிலே நடந்து கொள்வதன் காரணமாகத்தான் முன்பிருந்த எண்ணிக்கையை விட குறைத்து உங்களை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். 1977-லேயிருந்தபொழுது ஏதோ வேறு ஒன்றைச் சொல்லி, அவரை நடிகர் என்ற ஸ்தானத்திலே வைத்து பேசிய பொழுது உங்களுக்குக் கிடைத்த வெற்றியையும் முதல்வர் நோய்வாய்ப்பட்டிருக்கும்பொழுது அனுதாபம் என்று சொல்கிறீர்களே, இப்பொழுது உங்களுக்குக் கிடைத்துள்ள வெற்றியையும் பாருங்கள். அனுதாபம் என்று சொல்வது தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிற ஒன்றாக அமைந்து விடுமே ஒழிய அதை மக்களுக்கு அறிவிப்பாகக் கொடுக்கவேண்டும். இன்னும் மக்கள் அதையே நம்பிக் கொண்டிருக்க வேண்டுமென்ற எண்ணத்தை நீங்கள் வைத்துக் கொண்டிருந்தால் அது எந்த விதத்திலே நியாயம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தேர்தல் நேரத்திலே ஆளுகிற கட்சியும் எதிர்க் கட்சியும் பிரச்சாரம் செய்யும்போது, ஆளுகிற கட்சி நாங்கள் ஆளுகிற பொழுது, இன்ன செய்திருக்கிறோம், நாங்கள் தேர்தல் காலத்திலே



1985 மார்ச் 13] [திரு. இரா. சண்முகம்]

கொடுத்திருக்கிற வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறோம் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்குமானால் மீண்டும் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் எங்களை அமர்த்துங்கள் என்று கேட்பதும், எதிர் அணியிலே இருப்பவர்கள் அவர்கள் ஆள்கிறபொழுது, இவை, இவைகளைச் செய்ய மறுத்து விட்டார்கள், செய்ய முடியாமல் விட்டு விட்டார்கள், எங்களை ஆட்சிப் பொறுப்பில் நீங்கள் அமர்த்துவீர்களானால் நாங்கள் அதைச் செய்வோம் என்று சொல்வதுதான் நியாயமாக இருந்திருக்கும். ஆனால், எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர் ஒருவர், இந்த அவையின் நேரத்தை விணடிப்பது சரியில்லை என்று சொன்னார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் இங்கே இருந்தபோது, திருத்தணியிலே தங்கவேலை யாரோ களவாடி விட்டார்கள் என்று பேசினார்கள். அப்பொழுது முதல்வர்; தானைத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் பதில் அளித்த நேரத்தில், அந்தத் தங்கவேல் எங்கும் போகவில்லை, களவாடப்படவில்லை. இன்னும் திருத்தணி கோயிலிலே இருக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறி அதற்காக ஒன் மேன் கமிஷனையும் போட்டு, அந்த கமிஷன் அங்கேயிருந்து ஒரு மாத காலமாக பொதுமக்களிடமிருந்து எல்லா விஷயங்களையும் கேசரித்து அதற்குப் பின்னாலே ஒரு முடிவைச் சொன்னது. அந்தத் தங்க வேல் இருக்கிறது என்று 1977-லேயே சொல்லப்பட்டது. அதற்குப் பின்னால், 1980-லே தேர்தல் நடைபெற்றது. அப்பொழுது சொல்லாமல், 24—12—1984 அன்று நடைபெற்ற தேர்தலின்போது, வானொலிப் பெட்டியிலும், தொலைக்காட்சிப் பெட்டியிலும் பேசுகிறபொழுது, ஒரு சந்தேகத்தை இந்த அவையிலே கிளப்பி, முதலமைச்சர் பொறுப்பிலே இருப்பவர் அதற்கு விளக்கம் அளித்த பின்னாலே அதை ஏற்றுக்கொண்டு, அமைதியாக உட்கார்ந்திருந்து விட்டு, திருத்தணி தங்க வேலைக் கொண்டு போய் விட்டார்கள், திருடியவர்களுக்கா உங்கள் வாக்குகள் என்று சொல்கிற நிலையிலே, என்னுடைய தொகுதியிலே அந்த ஒரே ஒரு கருத்தை வைத்துப் பல இடங்களில் எழுதியதையும் பிரச்சாரம் செய்ததையும் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு கட்சித் தலைவர் பொறுப்பை ஏற்று இருக்கிறார், ஒரு பொய்யான தகவலை மக்களிடத்திலே எடுத்துச் சொல்லி. மீண்டும் ஆட்சிக்கு வந்து விட முடியும் என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். மக்கள்

மீண்டும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்றுதான் வெற்றி பெற்ற பின்னாலே நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். இப்படி அவர்கள் வெளியிலே தேர்தல் நேரத்திலே பேசியதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

கவர்னர் உரையிலே ஒன்றுமே இல்லையென்று சொன்னார்கள். கவர்னர் உரையிலே ஆளுங்கட்சி எண்ணங்களை விளக்கி எடுத்து வைத்திருக்கிறார்கள். எல்லா தரப்பிலும் இருக்கக்கூடியவர்களை எடுத்துக் கொண்டு, பொருளாதாரத்தின் கீழ்மட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்குப் பயன்படும் திட்டங்களைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நான் ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிற மக்களுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 15 மானியமாகக் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்பதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு உரத்தைக் கொடுக்கிற பொழுது அதிலே ஒரு பகுதியை மானியமாகக் கொடுப்பார்களானால் விவசாயத்திலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு அது மிகவும் ஒத்துழைப்பாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் உரையில் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நல்லமுறையில் துவங்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல மற்றொரு சர்க்கரை ஆலை மயிலாடுதுறையில் துவங்கப்படவிருக்கிறது என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஒன்று முதல் எட்டு வரை படிக்கும் மாணவர்களுக்கு சத்துணவு அளிப்பதோடு அவர்களுக்கு சீருடையும் அளிக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தையும், அவர்களுக்கு இனாமாக புத்தகங்களை கொடுக்க வேண்டுமென்ற நல்ல கருத்தையும் கூறி இருக்கிறார்கள். அவற்றை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பாழ்பட்ட பள்ளிக்கூடங்களை செம்மைப்படுத்துவதோடு, 10 ஆயிரம் குழந்தைகள் நல மையங்களை பாலர் தொடக்கப்பள்ளிகளாக மாற்றுவோம் என்று அறிவித்திருப்பது 10 ஆண்டுகள், 20 ஆண்டுகளுக்குப் பின்னாலே அதனுடைய பலனை நாம் நல்லமுறையில் பெறுவதற்கு ஏற்றநிலையில் அமைந்திருக்கிறது. இந்த வாய்ப்பை நல்கிய அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.



**திரு. அ. ரகுமான்கான்:** தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். நம்முடைய தமிழக முதலமைச்சருடைய மருத்துவச் செலவு குறித்து முதலமைச்சர் கையொப்பமிட்டு அறிக்கையொன்று பத்திரிகை நிருபர்களுக்கு தரப்பட்டிருக்கிறது. சபை நடந்து கொண்டிருக்கிறபோது வெளியே தரப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை):** மாண்புமிகு உறுப்பினர் நீண்ட நாட்களாக இந்தச் சபையில் உறுப்பினராக இருந்து வருகிறார்கள். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்பது அவையில் நடைபெறும் நடவடிக்கையை ஒட்டியதாக இருக்க வேண்டும். அவர்கள் இப்போது கேட்பது அவை நிகழ்ச்சியை ஒட்டியதல்ல. எனவே இதுபற்றி ஒழுங்குப் பிரச்னை எதுவும் எழவில்லை. (குறுக்கீடு) அதுபற்றி எழுத்து மூலம் கொடுங்கள்.

* **டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி கூறுவதற்கு முன்னால் என்னைப் போன்ற இளைஞர்களுக்கு இங்கே பங்குபெறுவதற்கு வாய்ப்பளித்த இந்தியாவின் தனிப்பெரும் தளபதி, தானைத் தலைவர், பாரதப் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களுக்கும், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி வாக்காள பெரு மக்களுக்கும் என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரையென்பது அழகான காகித பூவைப் போல காட்சியளிக்கிறது. நிறம் என்பது அதனுடைய நிறை. மணம் இன்மை என்பது அதனுடைய குறை. எனவே ஆளுநர் உரையில் இருக்கிற நிறைகளை நான் பாராட்டுகிறேன். அதிலே உள்ள குறைகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறபோது தொழிலாளர்கள் இறக்க நேரிட்டால் அளிக்கப்படும் இழப்பீட்டுத் தொகை ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000-மாக உயர்த்தி இருப்பதாகவும், அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் குடும்ப நலநிதி ரூ. 10,000-லிருந்து ரூ. 20,000-மாக உயர்த்தி இருப்பதாகவும், படிக்கும் மாணவர்களுக்கு 1-ம் வகுப்பிலிருந்து 8-ம் வகுப்பு வரையில் இலவச புத்தகமும், இலவச சீருடையும் வழங்க இருப்பதாகவும், சென்னையில் ஒரு மருத்துவப் பல்கலைக்கழகம் தொடங்க இருப்பதாகவும், கைத்தறி துறை என்று புதியதாக ஒரு துறை

[டாக்டர் ந. மாசிலாமணி] [1985 மார்ச் 13

துவங்கவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக என்னுடைய மகிழ்ச்சியையும், வாழ்த்தையும், நன்றியையும் இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் இராஜராஜ சோழன் இந்த மண்ணிலே பிறந்தான், இந்த மண்ணிலே வளர்ந்தான், வாழ்ந்தான். அவன் இந்த மண்ணையும் ஆண்டவன். குடவோலை முறையை உண்டாக்கி மக்களாட்சியை இந்த மண்ணிலே முதன்முதலாக நிறைவேற்றியவன் அந்த இராஜராஜ சோழன். அவனுக்கு நாம் இப்போது ஆயிரமாவது முடிசூட்டு விழா கொண்டாடிக் கொண்டிருக்கிற நேரத்தில், அவனுக்கு நன்றி கூறும் முகத்தான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் மக்கள் ஆட்சியை நிலைநாட்டுவதற்காக நீங்கள் உள்ளாட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

"கறந்தை கால்புகா கதிரவன் ஒளிபுகா மறலி மறம் புகாது... இந்த அணிமதில் இலங்கை" என்று கம்பன் சொல்கிறான். ஒளி புகாது, ஒலி புகாது. அறம் என்பது அறவே இடையாது என்ற நிலை கம்பன் இருந்தபோது இருந்தது. கம்பன் கண்ட இராமச்சந்திரன் இந்த நாட்டை ஆண்டபோதே இலங்கையில் இருந்தது. அதேபோல் மரியாதைக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவர் M.G. இராமச்சந்திரன் இந்த நாட்டை ஆண்டுக் கொண்டிருக்கும்போதும் அதே நிலை தான் இலங்கைக்கு இருக்கிறது. எனவே இதில் திட்டவட்டமாக, உறுதியான, இறுதியான முடிவை எடுக்க இந்த அரசை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அது மட்டுமல்ல. கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது என்பதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு விளக்கம் தந்தார்கள். உலகிலே வாழுகின்ற தமிழர்கள் விடுகின்ற கண்ணீர் தான் இந்த கடல் நீர் உப்பாக இருப்பதற்குக் காரணம் என்று சொன்னார்கள். அந்த வார்த்தை எவ்வளவு தீர்க்கதரிசனமாக இருக்கிறது என்பதை இங்கே நான் நினைவுபடுத்த கடமைப் பட்டிருக்கிறேன்.



1985 மார்ச் 13] [டாக்டர் ந. மாசிலாமணி]

அதைப்போன்று, நீலநிறமாக உள்ள இந்த இந்தியப் பெருங் கடல் ஈழத் தமிழர்கள் விடுகின்ற குருதியால் செந்நீராக மாறுவதற்கு முன்னால் இந்த மாநில அரசு ஒரு நல்ல உறுதியான, இறுதியான, திடமான, திட்டமான திட்டத்தைச் சட்டமாகத் தீட்டி மத்திய அரசு உதவியோடு செயல்பட முன்வர வேண்டு மென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போன்று, என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் ஏகப்பட்ட பிரச்சனைகள் இருக்கின்றன. எனக்கு முன்னால் பேசிய ஒட்டப்பிடாரம் உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, தமிழ்நாட்டிலேயே என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. ஜெயங்கொண்டான் சட்ட மன்றத் தொகுதியில் விவசாயப் பெருமக்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆதிதிராவிட மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். 1947 ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் அடைந்தபோது தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகள் "நாம் பெற்றது உண்மையான சுதந்திரம் அல்ல; என்று ஏழை எளிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் நிரந்தரமாகப் பெறுகிறார்களோ அன்றுதான் இந்த நாடு சுதந்திரம் அடைந்த நாடாகும்" என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலேதான் R.L.E.G.P. என்.ஆர்.இ.பி., ஐ.ஆர்.டி.பி, போன்ற திட்டங்களை மத்திய அரசு தீட்டி, செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டங்கள் இந்த மாநிலத்தினுடைய கிராமங் களுக்கு எல்லாம் போய்ச் சேர்ந்திருக்கின்றனவா, சரியான முறையில் இங்கே செயல்படுத்தப்படுகின்றனவா, நடைமுறைப் படுத்தப் படுகின்றனவா என்று எண்ணிப்பார்த்தால் அது கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஜெயங்கொண்டான் ஒன்றியத்தில் மத்திய அரசின் ஒரு திட்டத்திற்கு மானியமாக 3.5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது 1984-85-ல். ஆனால் மக்களுக்குச் செலவழித்த தொகை 35,000 ரூபாய்தான். மீதமுள்ள தொகை அரசுக்குத் திருப்பிச் செலுத்தப்பட்டது. இப்படிச் செயல்படுத்தும்போது உண்மையிலேயே உள்ளாட்சித் துறை அதிகாரிகள் இந்த நாட்டு மக்களுக்கு உண்மையாக உழைக் கிறார்களா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். திட்டங்களைச்

செயல்படுத்துவதிலே குறை செய்கிறார்கள், ஊழல் செய்கிறவர்களை எந்த கஷ்டத்தையும் எதிர்பார்க்காமல் திறமையோடு அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், ஜவகர்லால் நேரு அவர்கள் ஒருமுறை சொன்னார்கள். என்னென்ன மூலப்பொருள் எங்கெங்கே கிடைக்கிறதோ அங்கங்கே அது சம்பந்தப்பட்ட தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். என்னுடைய ஜெயங்கொண்டான் தொகுதியில் முந்திரி மரங்கள் நல்லமுறையில் வளருகின்றன; முந்திரி உற்பத்தி அதிகமாக இருக்கிறது. அதைப்போன்று யூக்கலிப்டஸ் என்று சொல்லப் படுகிற நீலகிரி தைல மரங்களும், காஷுரினா என்கிற சௌக்கு மரங்களும் அதிகமாக வளருகின்றன. கைத்தறி நெசவாளர்களும் அதிகமாக இருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு அங்கே ஒரு முந்திரித் தொழிற் சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்கள் அதிகமாக இருப்பதால் அங்கே ஒரு கூட்டுறவு நூற்பாலையை உருவாக்க தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதைப்போன்று சௌக்கு மரம், யூக்கலிப்டஸ் மரம் அதிகமாக இருப்பதால் ஒரு பேப்பர் மில் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன; அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டால் தொழில் துறையில் முன்னேற்றம் காண முடியும் என்பதால் இந்த வேண்டுகோளை விடுகிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் பிரச்சனையைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியில் 3.5 கோடி ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றை அரசாங்கம் கொள்முதல் செய்து, அந்த நெசவாளர்களுடைய கண்ணீரைத் துடைக்குமாறு பணிவன்போடு வேண்டுகிறேன்.

விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால் அங்கே [illegible]னாறு என்று சொல்லுகின்ற ஓரே ஒரு ஆறுதான் [illegible] 'ஐயர்' என்று





[illegible]ழ்த்தினார்கள். வரப்பு உயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும்; நெல் உயர குடி உயரும், குடி உயர கோன் உயரும் என்று அதற்கு விளக்கம் கொடுத்தார்கள். ஆனால் அந்த ஆற்றிலே ஒவ்வொரு வருஷமும் தலைவாயில் மண் புகுந்துவிடுவதால், பாசனம் தடைபடுகிறது. அதனால் அந்த விவசாயிகள் கண்ணீர் [illegible] பொன்னையாற்றில் தண்ணீர் [illegible]லே கண்ணீர் ஓடுகிறதே தவிர [illegible] இல்லை. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அதை எண்ணிப்பார்த்து, அதற்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கங்கைகொண்ட சோழன் உருவாக்கிய சோழகங்கம் என்ற பெயரில் ஒரு ஏரி இருக்கிறது. அதை ஆழப்படுத்தி, பாசனத்திற்கு வழிவகைச் செய்யும்படி மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவத் துறையைப் பொறுத்த மட்டில் இரண்டாயிரமாவது ஆண்டில் அனைவருக்கும் சுகாதார வசதி அளித்து, நோயற்ற வாழ்வை உருவாக்குவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மருத்துவத் துறையில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நிறைய இருக்கின்றன. நான் மருத்துவத் துறையைச் சார்ந்திருப்பதால் அதிகமாக அதைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நிறைய ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருந்தும் மருத்துவ அதிகாரிகள் போதுமான அளவுக்கு இல்லை.

அது மட்டுமல்ல. ஆயிரக்கணக்கான பட்டதாரி மருத்துவ அதிகாரிகள் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலே அரசின் நடவடிக்கை இப்படி மெத்தனமாக இருப்பதைக் கண்டு நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அதே சமயத்தில் இந்தத் துறை அமைச்சர் அவர்கள் மருத்துவ பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கும்படியும், நோயற்ற வாழ்வை உண்டாக்கும்படியும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் அன்னை இந்திரா காந்தியார் அவர்கள் அறிவித்த [illegible] தொழுநோயைக் கட்டுப்படுத்துவதற்கு [illegible] 20 அம்ச திட்டத்தில் [illegible] வந்திருக்கிறார்கள். அதன்படி டாக்டர் [illegible]

சுவாமிநாதன் கமிஷன் என்ற ஒரு கமிஷன் மத்திய அரசால் நியமிக்கப்பட்டு, அதனுடைய பரிந்துரைகள் அனுப்பப்பட்டு இருக்கிறது. எனவே டாக்டர் சுவாமிநாதன் அவர்கள் பரிந்துரையை மாநில அரசு ஏற்று அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தொழு நோயை கி.பி. 2000 ஆண்டிலே கட்டுப்படுத்த வேண்டும் என்று நான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சத்துணவுத்திட்டத்தை இந்த மாநில மக்களுக்கு அளித்து உண்மையிலேயே புரட்சி செய்தவர் தமிழக முதல்வர் அவர்கள். அவர்கள் எப்படி சத்துணவிலே புரட்சி செய்தாரோ, அதேபோல் தொழில் துறையிலேயும் ஒரு புரட்சியைச் செய்யவேண்டும், விவசாயத்துறையிலேயும் ஒரு புரட்சியைச் செய்யவேண்டும். அதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம். இன்றைக்கு மட்டுமே பயன்படுகின்ற திட்டங்களாக போடாமல் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு நிலைத்து இருக்கிற அளவிற்கு திட்டங்களைப் போடவேண்டும். நாமெல்லாம் தமிழ்ப் பரம்பரையிலே வந்தவர்கள். தமிழ்க் குடியிலே பிறந்தவர்கள், தமிழ் மன்னர்கள் வழியிலே வந்தவர்கள். எனவே அந்த நிலையிலே மாண்புமிகு புரட்சித் தலைவரிடமிருந்து தமிழக மக்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள். எனவே நல்ல ஒரு திட்டத்தை அவர்கள் தீட்டி அவர்களுடைய புகழ் ஆண்டாண்டுகாலம் இந்த நாட்டிலே நிலைத்து நிற்கக் கூடிய வண்ணம், இந்த மன்றம், அனைத்து உறுப்பினர்களும் பாராட்டுகின்ற அளவிற்கு, எவருமே சொல்லாத அளவிற்கு ஒரு திட்டத்தைத் தீட்டி, இந்தக் தமிழகத்தை தொழில் மயமாக்கி, தமிழ்நாடு தொழில் புரட்சி மிகுந்த மாநிலமாக ஆவதற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று அரிசனத் துறையை எடுத்துக்கொண்டால், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியிலே அதிகமான அரிசனங்கள் வாழ்கிறார்கள். அன்புச் சகோதரர், சட்டமன்ற உறுப்பினர் கே. பி. இராமலிங்கம் அவர்கள் கூறியதைப் போல் அரிசனங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு [illegible] கட்டித்தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





இன்றைய நிலையிலே மின்சாரப் பற்றாக்குறையால் விவசாயம் பெரியும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் விலைவாசி ஏற்றத்திற்கும் தொழில் சுணக்கத்திற்கும் அதிகமாக வழிகோலும் என்பதைச் சொல்லி, அதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மொழிப் பிரச்சனையைப் பற்றி இங்கே சொன்னார்கள். நான் இரு கழகங்களையும் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன். உண்மையிலே நீங்கள் கட்சியின் பெயரைச் சொல்வதற்கு முதலிலே கற்றுக்கொள்ளவேண்டும். அதைச் சரியாக உச்சரிப்பதற்கு நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டும். "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" என்று பாரதியார் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் பல மொழிகளைக் கற்ற பின்னாலே, தமிழ் மொழி, சிறந்த மொழி என்று சொன்னார்கள். ஒரு மொழியை மட்டும் கற்றுவிட்டு அவர் [illegible] கட்டிக்குள்ளே குதிரை ஓட்டவில்லை". எனவே நீங்கள் எப்படி ஒரு மொழியை இந்த நாட்டிலே திணிப்பது என்பதைக் குற்றம் என்று சொல்கிறீர்களோ, அதைபோல்தான் இந்த நாட்டு மக்கள் எந்த மொழியை விரும்புகிறார்களோ, அதைப் படிப்பதைத் தடுப்பது என்பதும் குற்றம் என்று நான் சொல்கிறேன். எனவே, இந்தியா ஒரு மொழி சார்பற்ற நாடு, இன சார்பற்ற நாடு, மத சார்பற்ற நாடு. அப்படிப்பட்ட இந்தியாவிலே எந்தப் பக்கத்திலே வாழ்பவர்களும் அவர்கள் அறிந்துகொள்வதற்காக, தெரிந்துகொள்வதற்காக, எந்த மொழியைக் கற்றுக்கொள்ள விரும்புகிறார்களோ, அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மற்றவர்களுக்கு எல்லாம் நீங்கள் அதிகமான நேரம் கொடுத்து இருக்கிறீர்கள். அதைப்போல எனக்கும் கொஞ்சம் நேரம் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய கன்னிப் பேச்சை கன்னிப் போக வைக்காதீர்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று திருவள்ளுவர் மாவட்டம் என்று ஒரு மாவட்டத்தை பெரம்பலூரைத் தலைநகராகக் கொண்டு அமைக்க இருக்கிறார்கள். அந்த மாவட்டத்திற்கு நடு நாயகமாக விளங்குவது

[டாக்டர் ந. மாசிலாமணி] [1985 மார்ச் 13

அரியலூர். அதுமட்டுமல்ல, அங்கே அரசு அலுவலகங்கள் அதிக மாக இருக்கின்றன. எனவே அதனுடைய தலைநகரை அரியலூ ராக மாற்றினால் மக்களுக்கு நன்மையாக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோன்று, தீரன் சின்னமலை என்கிற ஒரு பஸ் போக்கு வரத்தைத் துவக்க இருக்கிறார்கள். திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கரிகால் சோழன் வாழ்ந்த இடம் அது. அதுபோன்றே கங்கைகொண்ட சோழன் வாழ்ந்த இடம் அது. எனவே அவர்களுடைய நினைவாக அந்த பஸ் போக்குவரத்துக் கழகத்திற்குப் பெயர் வைத்தால் மிக நன்றாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு" என்று வள்ளுவர் பெருந்தகை சொல்லியிருக்கிறார்கள். அதற்கு இலக்கணமாக கம்பன் கொண்ட ராம ராஜ்யத்தையும் காந்தி கண்ட சுயராஜ்யத்தையும், வள்ளுவர் வகுத்துத் தந்த இலக்கண நாட்டையும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மக்களுக்கு உண்டாக்கித்தரும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் எல்லாம் அவர்களோடு கூட்டு வைத்துக்கொண்டவர்கள், என்ற நன்றி விசுவாசத்தை நாங்கள் என்றும் மறக்க மாட்டோம். இந்தியாவைப் பொறுத்தவரையில் மத்திய அரசை ஆதரிக்கக் கூடிய எதிர்க்கட்சி என்று சொல்லக் கூடிய ஒரே கட்சி அண்ணா தி.மு.க. கழகம் தான். அந்த வகையிலே நாங்கள் எங்களுடைய நன்றியைத் தெரிவிக்க வேண்டிய கடமை இருப்பதால், புரட்சித் தலைவரே, பொன்மனச் செம்மலே, மூடி துறவி கண்ட முத்தமிழ் நாயகனே நீங்கள் நீடூழி வாழ்க வாழ்க என வாழ்த்தி, நின் வாழ்நாளோடு என் வாழ்நாளையும் இணைத்து வாழ்க வாழ்க என்று வாழ்த்தி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 12-20)

திரு. சி. சுப்பராயர்: மாண்புமிகு மாற்றுத் தலைவர், அவர்களே, ஆளுநர் உரையின் மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவதிலே நான் பெருமைப்படுகிறேன். பல அரிய தலைவர்கள் தொண்டாற்றிய இந்தச் சட்டமன்றத்தில், நான் தொண்டாற்றுவதற்கு எனக்கு வாய்ப்பை



136365 சென்னை-600 008

[1985 மார்ச் 13] [திரு. சி. சுப்பராயர்]

ஏற்படுத்திக் கொடுத்த எனது கம்பம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு என் உரையைத் தொடங்குகிறேன்.

புரட்சித் தலைவர் அவர்களின் அரசின் கொள்கை விளக்கங்களைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்ல கவர்னர் உரையில் ஒன்றும் இல்லை என்று சொல்பவர்கள், உண்மையை மறைத்து வைத்தே பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். பல கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டு வரும் சத்துணவு திட்டம் எல்லோராலும் பாராட்டப்பட்டு நடந்து வரும் திட்டம் என்பதை எல்லோரும் அறிவார்கள். சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு இலவசக் கல்வியோடு இலவசச் சீருடை வழங்கும் திட்டம், எவ்வளவு சிறப்புடைய திட்டம் என்பதை அதனால் பயன்பெறும் ஏழை எளிய மக்கள்தான் உணர்வார்களே ஒழிய நீங்கள் உணர மாட்டீர்கள்.

ஆயிரம் கோடி ரூபாய் செலவில் உருவாக்க இருக்கும் தொழில் கல்வித் திட்டத்தை நான் முழு மனதாக வரவேற்கிறேன். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத தமிழகத்தில் தான் இந்த தொழில் கல்வித் திட்டம் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இது மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்மாதிரியாகவே இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்தத் தலைமுறையைப் பற்றிச் சிந்திப்பவன் அரசியல்வாதி, அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திப்பவன் அரசியல் ஞானி என்று சொல்வார்கள். இந்தத் தொழில் கல்வித் திட்டம் அதற்கு விளக்கமாக நின்று கொண்டிருக்கிறது. இந்தத் தொழில் கல்வித் திட்டத்தை 20 ஆண்டுகளுக்கு முன்பே கொண்டு வந்திருந்தால், தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாமல் போயிருக்கும்.

12 ஆண்டுகளுக்கு பின்னால் நாம் கண்டு பிடித்த உண்மை பள்ளிப் படிப்பு புள்ளிக்கு உதவாது என்பது. இந்தத் தொழில் கல்வித் திட்டம் ஒரு பெரிய சமுதாய மறுமலர்ச்சித் திட்டம் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். பள்ளியில் படிக்கும் மாணவனை வளர்த்து ஆளாக்கி, அவனால் நாளும் எதிர்காலத்தில் ஆதரவு பெற்று வாழ முடியும் என்று நினைக்கும் பாமர மக்களின் [illegible] போக்க இதை விட சிறந்த திட்டம் வேறெதும் இருக்காது என்றே நினைக்கிறேன். ஏழைகள் வாழ வழிதேடும் திட்டம் தான் தொழில் கல்வி திட்டம்.

புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு தொலை நோக்கோடு தான் பிரச்னைகளைப் பார்க்கிறார், அதற்குப் பரிகாரம் காண்கிறார். அந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டதுதான் தொழில் கல்வி திட்டம்.

இலவசக் கல்வியை இதற்கு முன்பு அறிமுகப்படுத்திய முந்தைய அரசுகள் பள்ளிகளில் கல்வி கற்பிக்க போதுமான வசதிகள் பெற்றிருக்கின்றனவா என்று பார்க்கவேயில்லை. ஆனால் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, இன்று பள்ளிக் கட்டிடங்களின் தேவையைக் கருதி, குறிப்பிட்ட காலத்திற்குள் அவைகளை நிறைவேற்ற திட்டத்தை தீட்டி, அதை ஆளுநர் உரையில் அறிவித்திருப்பது மற்றொரு பெரும் சிறப்பாகும்.

கடந்த இரண்டு மாதங்களாக நான் என் தொகுதியில் நன்றி அறிவிப்பு செய்வதற்காக சென்று வருகையில், என்னிடம் குடிநீர் வசதி வேண்டும், ரோடு வசதி வேண்டும் என்று கேட்டு வந்த மனுக்களைக் காட்டிலும், வேலை கேட்டு வந்த மனுக்கள் தான் அதிகம் இருந்தன. அந்த வகையில் நினைத்துப் பார்க்கும் போது, இந்த தொழில் கல்வியை அமுல் படுத்தி வந்தால் இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளில் தமிழ் நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டமே இல்லாமல் போய்விடும் என்று கருதுகிறேன். ஆகவே, நல்ல முறையில் தொழில் கல்வியைத் தந்து, கற்கிற கல்வியை வாழ்க்கைக்கு பயன் உள்ள கல்வியாக ஆக்குவதை விட வேறு எந்த திட்டம் வருங்கால சமுதாயத்தினருக்கு பயனை விளைவிக்கும் என்று, இங்கே குறை கூறி பேசிக் கொண்டிருப்பவர்கள் எடுத்துச் சொல்லட்டும்.

உயர் கல்வியையும், ஆராய்ச்சியையும் வளர்க்க பல பல்கலைக் கழகங்களை ஏற்படுத்திய புரட்சித் தலைவர் அரசு, இன்று மருத்துவப் பல்கலைக் கழகமும் அமைக்க இருப்பதாக அறிவித்திருப்பது மக்களால் வரவேற்கப்படும் திட்டங்களில் ஒன்றாகும்.

மின்சாரப் பற்றாக்குறை பற்றி இன்று புரட்சித் தலைவர் அரசு மீது குறை கூறி வருபவர்கள், பல உண்மைகளை மனதில் மறைத்து வைத்துத்தான் பேசுகிறார்கள் என்று கூற வேண்டும். மின்சாரத்தைப் பொறுத்த வரையில், தனி மனித உபயோகம், பெர்மிட்டட் கன்சம்ப்ஷன், திமுக அரசை விட பல மடங்கு





உயர்ந்துள்ளது. இன்று எண்ணற்ற தொழில்கள் உருவாகியிருக்கின்றன. அப்படியும், தொழிற்சாலைகளுக்கும், விவசாயத்திற்கும் தேவையான அளவிற்கு மேலேயே மின்சார விநியோகத்தைச் செய்து அரசு சமாளித்து வருகிறது என்றால் அதற்குக் காரணம் புரட்சித் தலைவரது திட்டங்களும், செயல்களும் தான். திராவிட முன்னேற்றக் கழக அரசு மின்சாரத்தை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கு எத்தகைய திட்டமும் கொண்டு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்போது, குந்தா திட்டத்தை ஏதோ தாங்கள் தான் கொண்டு வந்தது போலக் கூறினார். ஆனால் குந்தா மின் திட்டம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே முடிக்கப்பட்டு செயல்படத் தொடங்கி விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் நம்முடைய புரட்சித் தலைவரது அரசு மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்காக பல புதிய திட்டங்களைக் கொண்டு வந்துள்ளது. சோலார் எனர்ஜி மற்றும் விண்ட்மில் எனர்ஜி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய பல வழி வகைகளை புரட்சித் தலைவரது அரசு கொண்டு வந்துள்ளது. அதன் தொடர்பாக சோலார் எனர்ஜிக்குத் தேவையான உபகரணங்களைத் தயாரிப்பவர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காற்றாடி மின் விசை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வது என்பதும் மிகச் சிறந்த திட்டமாகும்.

தூத்துக்குடியிலும் என்தொகுதியான கம்பம் பகுதியிலும் ரூ. 2 கோடி செலவில் காற்றாடி மின் விசைத் திட்டத்தை முன்மாதிரித் திட்டமாக அமைக்க அரசு திட்டம் தீட்டி உள்ளதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனது தொகுதியான கம்பம் பகுதியில் ஒரு கோடி ரூபாய் செலவில் காற்றாடி மின் விசைத் திட்டம் அமைக்க அரசு முன் வந்தமைக்காக புரட்சித் தலைவர் அவர்களின் அரசிற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக அரசு எடுத்த முழு முயற்சியின் விளைவாகத்தான் கல்பாக்கத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தின் முழுப் பயனும் தமிழகத்திற்குக் கிடைத்தது என்பதை எடுத்துக் கூறி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். புன்செய் நிலங்களைப் [illegible] விளை நிலங்களாக மாற்றுவது 20 அம்சத் திட்டத்தில் ஒரு அம்சமாகும். தமிழகத்தினைப் பொறுத்தவரை, இருக்

கின்ற நிலங்களுக்கு வேண்டிய நீர் ஆதாரங்கள் இல்லாதவர்களாக இருக்கிறோம். ஆகவே கேரள மாநிலத்தில் வீணாகும் உபரி நீரை கிழக்கே திருப்பி உற்பத்திப் பெருக்கத்திற்கும் வறண்ட தென் தமிழ் நாட்டு உழவர்களின் நலிவை நீக்கவும் வழிவகை செய்ய வேண்டும். இதில் பாரத அரசும் இங்குள்ள காங்கிரஸ் தலைவர்களும் உதவுவது இத்திட்டத்தை அறிமுகப்படுத்திய அன்னை இந்திராவுக்கு செய்யும் நன்றிக் கடனாக அமையும்.

எனது தொகுதியில் 18 வது கால்வாய் திட்டம் செயல்படாமல் காலம்தாழ்ந்து வருகிறது. இத்திட்டம் செயலுக்கு கொண்டுவந்தால் ஏராளமான விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான பேச்சு வார்த்தையும் உடன்பாடும் ஏற்பட்ட காலம் தாழ்த்தாது முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்று ஆண்டுகளில் ஆதிதிராவிடர்களது அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றுகிற திட்டம், புரட்சித் தலைவரை என்றும் வணங்கும் தெய்வமாக மதிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் இனத்தாலும், ஜாதியினாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் சமுதாயத்தில் சம உரிமைபெற வேண்டும் என்ற பேரறிஞர் அண்ணாவின் தீவிரமான கொள்கையை நிறைவேற்றும் திட்டம் தான் இந்த ஆதிதிராவிடர் நல சிறப்புத் திட்டம்.

தீண்டாமையை ஒழித்துவிட்டாலும் வறுமை அந்த ஆதிதிராவிட மக்களைத் தீண்டாமல் பார்த்துக்கொள்ள புரட்சித் தலைவரின் திட்டங்கள் பயன்படுவதை நான் பார்க்கிறேன்.

20 அம்ச திட்டங்களில் எல்லா அம்சத் திட்டங்களையும் தமிழக அரசுதான் சிறப்பான முறையில் நடைமுறையில் கொண்டு வந்துள்ளது. எனவே அதற்குத் தேவைப்படுகிற [illegible] நிதியை, ஆளுநர் உரையில் குறிப்பிட்டதுபோல ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் உரிய அளவு பங்கினை பெறுவோம் என்கிற எங்களது விருப்பத்தை மத்திய அரசு நிறைவேற்றும் என்று நம்புகிறோம்.

சத்துணவுத் திட்டம், இலவச சீருடைத் திட்டம், வறுமையை ஒழிக்கும் திட்டம், இதே போல பல சமுதாயத் திட்டங்களை மக்கள் மீது எந்தவிதமான புது வரியும் போடாமல், மக்களுக்கு எந்த





வித சுமையும் வைக்காமல் நிறைவேற்றுவதுதான் புரட்சித் தலைவரின் சாதனை ஆகும். மாண்புமிகு திருப்பூர் உறுப்பினர் திரு. சுப்பிரமணியன், பேசும்போது சுப்ரீம் கோர்ட்டில் தமிழகத்தில் தான் போலீஸ் அராஜகம் அதிகம் என்று தீர்ப்பில் சொல்லப்பட்டதாக சொன்னார். ஆனால் எந்த தீர்ப்பில் எந்த நீதிபதி அப்படிக் கூறினார் என்று குறிப்பிடவில்லை. ஏனென்றால் அப்படிப்பட்ட தீர்ப்போ கண்டனமோ வரவில்லை. நீதிமன்றத்தையும் பொய் சாட்சி சொல்ல அழைக்கிறார்கள்.

கண்ணகி கோயில் என்னுடைய தொகுதியில் தான் இருக்கிறது. கண்ணகி கோயிலுக்குச் செல்வதென்றால் கேரள மாநிலத்திற்கு சென்று அங்கு வனத்துறை அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுத்தான் கோயிலுக்கு செல்ல வேண்டும். நமக்கு சொந்தமான கண்ணகி கோயிலுக்கு நாம் சுதந்திரமாக செல்வதற்கு வழியில்லை, வாய்ப்பு இல்லை. தமிழகத்தின் எல்லையில் பாதை அமைக்க அரசு முன்வந்தால் கண்ணகி கோயில் வழிபாடு பிரச்சனைகள் தீரும் என்று கருதுகிறேன். எனவே அரசு அதற்குத் தேவையான முடிவை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் விவசாயத்தில் முன்னணியில் இருந்தாலும் எந்தவித தொழிற்சாலையும், தொழில் நுட்பக் கல்லூரியும் இல்லாமல் இருக்கிறது. எனவே எனது தொகுதி தொழில்துறையில் பின்தங்கிய ஏரியாவாக இருக்கிறது. எனவே எனது தொகுதியில் ஒரு பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்துமாறு அரசை கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்கு ஒரு மகளிர் பாலிடெக்னிக் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

18 ஆம் கால்வாய்த் திட்டத்தையும் வட்டாறு அல்லது சண்முகா நதி திட்டத்தையும் எனது தொகுதியில் விரைவாக செயல்படுத்த அரசு முன் வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கம்பம் பள்ளத்தாக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ. 3 கோடி செலவில் தமிழக அரசு கொண்டுவந்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கோம்பை, பண்ணைபுரம், தேவாரம் ஆகிய மூன்று ஊர்களுக்கு ரூ. 2 கோடி அளவில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் வர இருப்பதாகக் கேள்விப்பட்டேன். எனவே அத்திட்டத்தை உடனடியாக செயல்படுத்துமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. சுப்புராயர்] [1985 மார்ச் 13

ஆளுநர் உரையில் என்ன இருக்கிறது என்று எதிர்க்கட்சிக் காரர்கள் கேட்கிறார்கள். ஆளுநர் உரை ஒரு கலங்கரை விளக்கம்; அது கண் உள்ளவர்களுக்குத்தான் தெரியும், எதிர்க்கட்சிக்காரர் களுக்கு அதனுடைய வெளிச்சம் தெரிய நியாயம் இல்லை. காரணம், அவர்கள் ஏறி வந்த கூட்டணிக் கப்பல் சரியாக ஓட்டத் தெரியாத மாலுமியால் கப்பலே கவிழ்ந்துவிட்ட பின்னால் தண்ணீரில் தத்தளித்துக்கொண்டிருக்கின்ற நிலையில் இருக் கிறார்கள், அவர்களுடைய அரசியல் வாழ்க்கை அல்லாடிக்கொண் டிருக்கிறது என்பதைத் தெரிவித்து ஆளுநர் உரையை வரவேற்று நன்றி கூறி அமர்கிறேன்.

(பிற்பகல் 12-30)

* திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நான் சார்ந்துள்ள காந்தி-காமராஜ் தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். மேதகு ஆளுநர் உரையில் பல நல்ல திட்டங்கள் இருந்தாலும், கிராமப்புற மக்கள் எதிர்பார்த்த கிராம முன்னேற்றம் பற்றிய விவரம் எதுவும் அறிவிக்கப்படவில்லை. இதில் பொதுமக்களாகிய கிராம மக்கள் விரும்புவது சாலை வசதி, லைட் வசதி, குடிநீர் வசதி, நியாய விலைக் கடைகள் மூலம் பொருள்கள் வழங்குவது போன்ற நல்லவைகளை இந்த அரசு செய்துவைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இருக்கிறார்கள்.

மேலும் ஊராட்சிமன்றத் தேர்தல் இல்லாமலும், நகராட்சி மன்றத் தேர்தல் இல்லாமலும், கிராமங்களிலே தனி அதிகாரிகள் மூலம் சில அத்தியாவசியமான பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத நிலை இன்று இருந்து வருகிறது. தனி அதிகாரிகளிடம் நாம் எந்த அளவிற்குப் போய் சொன்னாலும், அவர்கள் அதனைக் கவனிக்காத முறையில் கிராம மக்களுக்கு அத்தியாவசியமான தெரு விளக்குகள், குடிநீர் போன்றவைகளை உடனுக்குடன் கொடுக்க முடியாத நிலை இருந்து வருகிறது. எனவே ஊராட்சி மன்றத் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முதியோர் பென்ஷன் பெறக் கோரி மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, சுமார் ஓராண்டு, ஒன்றரை ஆண்டு



1985 மார்ச் 13] திரு. எஸ். என். இராமசாமி]

ாதியும் முதியோர் பென்ஷன் வழங்க முடியாத நிலை இருந்து வருகிறது. ஆகவே உடனடியாக முதியோர் பென்ஷன் வழங்கு வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

குழந்தைகளுக்கு உணவு அளிப்பது மிகச் சிறந்த திட்டம். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் மிகவும் ஊழல்கள் புரிந்து செயல்படுகிறார்கள். சத்துணவு மையங்களுக்குக் கொடுக்கும் பொருள்களின் அளவு குறைவாகக் கொடுக்கப்பட்டு, சரியான அளவு கொடுக்கப்பட்டதுபோல் கையெழுத்து பெறப் படுகிறது. சரியான அளவு வேண்டுமென்று நிறுத்துக் கேட்டால், அந்த மைய அமைப்பாளர்கள் நடவடிக்கைகளுக்கு உள்ளாகி றார்கள்.

சத்துணவுத் திட்ட அமைப்பாளர்கள் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காக ஆள் பிடிக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படு கிறது. குழந்தைகளுக்கு உணவு அளிக்க வேண்டிய தலையாய பொறுப்பில் இருப்பவர்கள் இப்படி ஆள் தேடி அலையக் கூடாது. ஆகவே அவர்களைக் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஆள் பிடிக்கும் பொறுப்பிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். சத்துணவிற்கான அனைத்து செலவுகளையும் அரசே ஏற்றுக் கொள்கிறது. ஆனால் தனியார் பள்ளிகளில் உள்ள அமைப்பாளர்களை அந்த நிர்வாகமே நியமிக்கிறது. அந்த அமைப்பாளர்களை அவர்கள் இஷ்டப்படி நீக்குகிறார்கள். இதில் தலையிட அரசுக்கு உரிமையில்லை என்று சொல்கிறார்கள். சத் துணவு என்பது தனி அமைச்சரின் கீழ், அரசால் நடத்தப்படு கிறது. எனவே அமைப்பாளர்களை நியமனம் செய்வதற்கும், நீக்குவதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்க வேண்டும்.

அடுத்து ஏழைகளுக்கு வீடு வழங்கும் திட்டம் ஒரு நல்ல திட்டம். ஆனால் பல ஏழைகளுக்கு வீடோ, மனைகளோ இல்லை. ஆனால் அவர்கள் முன்பு இலவசமாகப் பெற்று, பிறகு அதை விற்றுவிட்டு, மீண்டும் இடம் தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே கட்டிக் கொடுக்கும் வீட்டை 20 வருடங்களுக்கு விற்க முடியாத அளவிற்கு குடி இருப்பவர்களுக்குச் சொந்தமாக்கித் தர வேண்டும்.

கிராம மக்களுக்குக் குடிநீர் கொடுக்க வேண்டுமென்று, தமிழகத்திலுள்ள எல்லா கிராமங்களுக்கும் இப்போது அடி பம்பு போடப்பட்டு வருகிறது. ஆனால் அடி பம்பு சரியான முறையில் இயங்குவது இல்லை. ஒரு அடி பம்பு போடுவதற்கு ரூ. 22,000 செலவு செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே கிராம மக்களுக்குக் குடிநீர் கிடைக்கக்கூடிய அளவில், கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக அந்த கிராம மக்களுக்கு குடிநீர் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எங்களுடைய தொகுதியில் பல இடங்கள் வறட்சிப் பகுதியாக இருக்கின்ற காரணத்தாலே அங்கே இருக்கக் கூடிய மக்களுக்கு குடிநீர் கொடுக்க தாமிரபரணி நதியிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும் இப்போது ஹைவேஸ் ரோடுகள் அனைத்திலும் தார்கள் போடப்படாமல், மண் சாலைகளாகக் காட்சியளிக்கின்றன. அதனால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்படுகிறது. உடனடியாக அந்தச் சாலைகளை தார் சாலைகளாகப் பராமரித்துத் தந்தால்தான் போக்குவரத்து நல்ல முறையில் இயங்குவதற்கு வசதியாக இருக்கும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், தாமிரபரணி பாசனத்தில் ஆழங்கால் வடிகால் திட்டம் ஒன்று அரசினுடைய பரிந்துரைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த வடிகால் இல்லாத காரணத்தால் மழைக் காலத்தில் அங்கே தண்ணீர் நிரம்பி, அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே கோட்டூர், குருகாட்டூர் கடம்பா பாசனத்தில் ஏற்பாடு செய்யப்படக்கூடிய அந்த ஆழங்கால் வடிகால் திட்டத்தை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடம்பாமருகாலிலே மரங்களை வைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருப்பவைகளை அப்புறப்படுத்தி அந்த வடிகாலிலே அதிக நீர் வடிந்து செல்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

உள்ளாட்சி எழுத்தர்கள் 37½ ரூபாய்க்கு பகுதி நேர ஊழியர்களாக இருக்கிறார்கள். அரசு வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்களுக்கு சம்பளம் 150 ரூபாய் இருக்கவேண்டும் என்ற நிலைமை இருந்தும் அந்த எழுத்தர்கள் குறைவான சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் முழு நேர ஊழியர்களாக ஆக்கப்பட்டு சுமார் 150 ரூபாய் சம்பளம் பெறக்கூடிய அளவில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





இன்றுள்ள கோ-ஆப்பரேட்டிவ் பாங்க், சங்கங்களுக்கு உடனடியாகத் தேர்தல் மூலமாக அங்கே தலைவர்களை நியமித்து மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதியாக இருந்து வருகிறது. அங்குள்ள மக்களுக்கு அத்தியாவசியமாக குடிநீர் கிடைப்பதற்கு அரசு ஒரு நல்ல திட்டத்தைத் தீட்டி தாமிரபரணி ஆற்றில் இருந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தை கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. மு. தங்கமணி**: வரலாற்றுப் புகழ் மிக்க பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே பேசுகின்ற வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தித் தந்த தானைத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு கடந்த மார்ச் 8 ஆம் நாள் தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகின்ற வாய்ப்பை எனக்கு அளித்த மயிலாடுதுறை தொகுதி வாழ் பெரியோர்களுக்கும், அன்புத் தாய்மார்களுக்கும், இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாயவரம் தொகுதியை மயிலாடுதுறை தொகுதி என்று பாரம்பரியம் மிக்க தொகுதியாக மாற்றிய புரட்சித் தலைவர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 15 ஆண்டுக் காலம் காங்கிரஸ் பேரியக்கத்திடமும், 17 ஆண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்திடமும் இருந்த மயிலாடுதுறை தொகுதியில் என்னைப் போன்ற சாதாரணமானவரை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த வாக்காளப் பெருமக்களுக்கும் அன்புத் தாய்மார்களுக்கும் என்னுடைய சார்பாகவும், மாண்புமிகு புரட்சித் தலைவர் சார்பாகவும் இதய பூர்வமான நன்றியைக் காணிக்கை ஆக்கிக் கொண்டு பேச விழைகிறேன்.

கடந்த 3 தினங்களுக்கு முன்பு இந்த அவையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் மயிலாடுதுறை தொகுதியிலே நடந்த இடைத் தேர்தலிலே அ.இ.அ.தி.மு. கழகம் புரட்சித் தலைவர் பிரச்சாரம் செய்த பின்பும் தோல்வியுற்றது என்று குறிப்பிட்டார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர்

ரகுமான்கான் அவர்களுக்கு குறிப்பிட விரும்புவது எல்லாம் எங்களுடைய கட்சி தோல்வியுற்றது உண்மை தான். உங்களுடைய கட்சி வேட்பாளர் 1,200 வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றிப் பெற்றார்கள். அதையும் ஒத்துக்கொள்கிறோம். ஆனால் 5 மாதக் காலத்திற்கு பின்பு பொதுத் தேர்தல் வந்தது. அந்தப் பொதுத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. சார்பில் நான் போட்டியிட்டேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பழைய நண்பர் போட்டியிட்டார்கள். ஆனால் தொகுதியிலே உள்ள மக்கள் அரசியலில் யார், யார் என்ன என்ன செய்கிறார்கள், சொல்கிறார்கள் என்று உற்று கவனித்ததன் விளைவாக அங்கு 4,171 வோட்டுகளை அதிகமாக அளித்து என்னை வெற்றிப் பெறச் செய்தார்கள். அவர்களுடைய தலைவர் இடைத் தேர்தலுக்கும் வந்து பிரச்சாரம் செய்தார்கள். பொதுத் தேர்தலுக்கும் வந்து பிரச்சாரம் செய்தார்கள். எங்களுடைய தானைத் தலைவர் இடைத் தேர்தலுக்கு வந்து பிரச்சாரம் செய்தார்கள். பொதுத் தேர்தலுக்கு பிரச்சாரம் செய்வதற்கு என்னுடைய துரதிருஷ்டமோ என்னமோ தெரியவில்லை உடல் நலம் குன்றி அமெரிக்காவில் சிகிச்சை பெற்றார்கள். இருந்தாலும் எங்களுடைய அறுதிப் பெரும்பான்மையில் வெற்றி பெற்று நாங்கள் 3 ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கிறோம். இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அ.இ.அ.தி.மு. கழக அரசு என்ன சாதித்து இருக்கிறது, அவர்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை, ஜனநாயகத்திற்கு விரோதமாக இருக்கிறோம் என்ற குற்றச்சாட்டை கடந்த 3 நாட்களாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். நான் தி.மு.க. மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கூறிக்கொள்ளுவது, தி.மு.க. தலைவர்களும், அதைச் சார்ந்தவர் களும் தவறான பிரச்சாரத்தை, பொய் பிரச்சாரத்தை தமிழ் நாடு முழுவதும் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். இதனால் தான் தமிழக மக்களால் அவர்கள் இந்தச் சட்ட மன்றத்தில் 3 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டு இருக்கிறார்கள், என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். எனவே நீங்கள் உங்கள் பிரச்சாரங்களை எல்லாம் மக்களுக்காக, மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு நீங்கள் செயல்பட வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் நிச்சயமாக நீங்கள் உங்கள்





பணியை முழுவதும் மக்களுக்காகச் செய்ததாக இருக்கும், மக்களிடம் நன்மதிப்புப் பெற முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் என்ன என்ன காரியங்களை இந்த அரசு செய்து இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12.40)

தொழில் துறையை எடுத்துக் கொண்டால் என்னுடைய மயிலாடுதுறை தொகுதியில் ஒரு சர்க்கரை ஆலையை 101 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவி அதில் சுமார் 1,500 தொழிலாளர்கள் வேலை செய்கின்ற அளவுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் நிறுவித் தந்ததற்கு என் தொகுதி மக்கள் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மண்ணபந்தல் என்ற இடத்தில் பால் குளிரூட்டும் நிறுவனத்தை 20 லட்சம் ரூபாய் செலவில் நிறுவ வேலை ஆரம்பிக்கப்பட்டு 10 ஆயிரம் லிட்டர் பால் குளிர் பதனம் செய்து மக்களுக்கு வினியோகம் செய்யப்படுகிற அளவிலே அங்கே தொழில் துறை சிறப்பாக இயங்குவதற்கு அது எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதை நான் கூறிக்கொண்டு அதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு மயிலாடுதுறையில் பழைய பாலம் ஒன்று இருக்கிறது. நீண்ட நெடிய நாட்களாக பழைய பாலமாக அது இருந்து வருகிற காரணத்தால் பேருந்துகள் செல்லுகிறபோது தடைப்பட்டு மயிலாடுதுறை நகரத்திற்கு போக்குவரத்து தடைப்படுகிற நிலைமை ஏற்படுகிறது. மயிலாடுதுறை மக்களின் நீண்ட நெடுநாள் கோரிக்கையாக அது இருந்து வருகிறது. அதற்கு மாற்றுப் பாலமாக அரசு மருத்துவ மனைக்கும், திருவழுந்தூர் பகுதிக்கும் இடையே உள்ள பாலத்தை அகலப்படுத்தி பேருந்துகள் செல்வதற்கு ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மயிலாடுதுறைக்குப் பாதாள சாக்கடைத் திட்டத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று மக்களின் சார்பாகக் கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஏ. தெய்வநாயகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனது அன்னை மாண்புமிகு இந்திரா காந்தி மற்றும் மதுரை மக்களின் சார்பாக அஞ்சலியை செலுத்திக் கொண்டு இந்த மாமன்றத்தின் சார்பிலே எனக்கு பேச வாய்ப்பளித்து என்னை வெற்றி பெற செய்த மதுரை மத்திய தொகுதி வாக்காள பெருமக்களுக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரத பிரதமர் பொறுப்பை ஏற்றிருக்கும் அன்புச் சகோதரர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்ற உடன் ஏகோபித்த முடிவுக்காக நாட்டிலே இந்த தேர்தல் ஏற்படுத்தினார்கள். ஏழை எளிய மக்களுக்கு நான் உறுதியாக எதிர்காலத்தில் பாடுபடுவேன் என்ற உறுதியைக் கூறினார்கள். அதை ஏற்று மக்கள் வெற்றி வாய்ப்பை அளித்தார்கள். அவர்கள் எதிர்காலத்தில் நல்ல பல திட்டங்களைச் செய்வதாக வாக்குறுதியை அளித்தார்கள். அதனால் மக்கள் தேர்ந்தெடுத்தார்கள். இங்கு கூறுவது போல் எந்தவித அலையும் எழவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், பாரத பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கு பக்க பலமாக இருந்து நல்ல திட்டங்களைச் செயலாக்குவதற்கு துணை நிற்பார்கள் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைப் பற்றி பேசும்போது கொடுங்கோல் ஆட்சி செய்யும் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே அவர்களால் இலங்கைத் தமிழர்கள் சித்திரவதைக்கு ஆளாக்கப் பட்டு தமிழகம் நோக்கி வந்த வண்ணம் இருக்கிறார்கள். அவர்கள் தென் தமிழ் நாட்டில் நிலைபெறச் செய்வதற்கு நமது தமிழக அரசு நல்ல ஒரு முடிவினை எடுத்து அதற்குப் பக்க பலமாக நமது பாரத பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இதை தேசியப் பிரச்சினையாக கருதி அவர்கள் எடுக்கும் நடவடிக்கை களுக்கு திட்டவட்டமான ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறுவதைப் போல் நாம் ஏனோ தானோ என்று இருக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.







இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குற்றம் சாட்டினார்கள், இங்கே திருவனந்தபுரத்திலே ஒரு ஆகாய விமானம் ஆயுதம் தாங்கி வந்தது. அது தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப் பட்டது என்று சொன்னார்கள். ஆனால் அப்படி அந்த ஆயுதங்கள்தான் பயன்படுத்தப்பட்டன என்பதற்கு எந்த விதமான உறுதியும் இல்லை. எனவே, அப்படிப்பட்ட குற்றச்சாட்டை நான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மறுக்கிறேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மதுரை மத்திய தொகுதியானது ஒரு கலைப் பொக்கிஷமாக விளங்குகின்றது. அறநிலையங்களைச் சார்ந்த கோயில்கள், மருதிகள் ஆகிய அத்தனையையும் கொண்டது அந்தத் தொகுதி. அங்கே தண்ணீர்த் தட்டுப்பாடு, மின்சாரம் இல்லாத நிலைமை, கோயில்களில் சரியான பராமரிப்பு இல்லாத நிலை ஆகியவற்றின் காரணமாக மதுரை மாநகரம் சீர்கெட்டு இருக்கின்றது. அவைகளைச் சீர்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் தமிழகம் முழுமைக்கும் நல்ல பல திட்டங்கள் கூறப்பட்டிருக்கின்றன. மதுரை நகரத்தைப் பொறுத்தவரையில், குடிநீர்த் திட்டத்திற்கு உலக வங்கியிலிருந்து கடன்பெற்று ஆவன செய்யப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் அந்தத் திட்டம் மட்டும் போதாது.

கனரகத் தொழில்கள் மதுரைக்கு வர வேண்டுமென்று ஆணித் தரமாகக் கூறிக்கொள்கிறேன். ஏனென்றால் வளர்ந்து வரும் மாநகரமாக, சென்னைக்கு அடுத்தபடியாக ஒரு மாபெரும் நகரமாக மதுரை மாநகரம் இருக்கிறது. அந்த மாமதுரை நகரம் சிறப்பு மிக்க நகரம். பிற்காலத்தில் அது ஓங்கி வளரக் கூடிய நகரம். அங்கு இதுவரையில் சிறுதொழில்கள்தான் இருக்கின்றனவே தவிர, பெரிய தொழில்கள் இல்லை. முன்பு தலைவர் காமராஜ் அவர்கள் தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த பொழுது தற்பொழுது உதவி ஜனாதிபதியாக இருக்கின்ற மதிப்பிற்குரிய திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தொழில் பேட்டையை உற்பத்தி செய்து மிகவும் சிறப்புமாகச் செய்து காட்டினார்கள். அதன் பலனாக இன்றைக்குப் பல சிறிய சிறிய

(திரு. எ. தெய்வநாயகம்) [1985 மார்ச் 13

தொழில்கள் அங்கே இருக்கின்றன. ஆனால் பெரிய தொழில்கள் என்று சொல்லப்படுகின்ற கனரகத் தொழில்களை அங்கே ஏற்படுத்தினால்தான் தொழிலாளர் வர்க்கத்திற்கு நல்ல நிலைமை அமையும், அவர்களது போக்குவரத்திற்கான சூழ்நிலை அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மதுரையில் உயர்நீதி மன்றம் ஒன்று வேண்டுமென்று முன்பே கூறப்பட்டு, அது எல்லோராலும் பேசப்பட்டிருக்கின்றது. மதுரை மக்களால் எதிர்பார்க்கப்பட்டு வருகின்ற இது இதுவரையில் தொடங்கப்படாததற்கான காரணம் எனக்குப் புரியவில்லை. எனவே, அந்த உயர் நீதிமன்றத்தை எங்களுக்கு அளிக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கின்றேன்.

மதுரை நெருக்கடி மிகுந்த நகரமாக இருக்கின்றது. கிட்டத் தட்ட எட்டாண்டுக் காலமாக அது கார்ப்பரேஷனாக மாறி, நான்கு மேயர்களைக் கண்டிருக்கிறது. இப்படி நான்கு மேயர்களைக் கண்டும்கூட அங்கே எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. பாதாள சாக்கடை வசதி அங்கே இல்லை. ஏற்கனவே, கார்ப்பரேஷன் ஆவதற்கு முன்பு இருந்த பாதாள சாக்கடை தான் இருக்கின்றது; கார்ப்பரேஷன் ஆனவுடன் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் இருக்கின்றது என்பதை இந்த மன்றத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பஸ் ஸ்டாண்ட், இராஜாஜி மருத்துவமனை, கீழ வாசல் போன்ற இடங்களில் சுரங்கப் பாதைகள் கட்டப்பட வேண்டும். ஏனென்றால் அங்கே ஏற்படுகின்ற போக்குவரத்து நெருக்கடியினால் மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுகின்றது. போக்குவரத்திற்கும் இடைஞ்சல் ஏற்பட்டு பெரும் சிரமமாகக் இருக்கின்றது. எனவே, அங்கெல்லாம் சுரங்கப் பாதைகளை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரயில்வே மேம்பாலத்தை பொறுத்தவரையில் ஏற்கனவே அமைக்கப்பட்டது இருக்கிறது. அருப்புக்கோட்டை—டி.பி. ரோட்டிலே அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தியும் இதுவரையில் அது சம்பந்தமாக எந்த வேலையும் நடைபெறாமல் இருக்கிறது.



1985 மார்ச் 13] (திரு. எ. தெய்வநாயகம்)

மதுரை மத்திய தொகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களுக்கு வீட்டு மனைகளை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எதிர்பார்க்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பேசப்படுகிறது. அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்று நான் இந்தத் தருணத்தில் எதிர்பார்க்கிறேன்.

மதுரை மத்திய தொகுதியில் இந்துக் கோவில்கள், முஸ்லீம் தோழர்களின் கோயில்கள் நிறைந்து இருக்கின்றன. அங்கே அர்ச்சகர்கள், புரோகிதர்கள், ஹோட்டல் தொழிலாளர்கள், சமையல்காரர்கள் இப்படிப்பட்ட ஏழை எளிய மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களும் அந்தணர்களைச் சார்ந்தவர்களாகவும், வேளாளப் பெருமக்களைச் சேர்ந்தவர் களாகவும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு ஒதுக்கீடுகளைச் செய்து, வீட்டு வசதி, தண்ணீர் வசதி, பள்ளிக்கூட வசதி, மருத்துவ வசதி போன்றவைகளில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை மத்திய தொகுதியில் சுகாதாரக் கேடுகள் அளவுக்கு மீறி இருக்கின்றன. காரணம், கார்ப்பரேஷனைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கின்ற லாரிகள், பஸ்கள் எல்லாம் ஒர்க் ஷாப்பில் இருக்கின்றன; அவைகள் செயல்படாமல் இருக்கின்றன. அவைகள் செயல்படுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் மராமத்து அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மதுரை மத்திய தொகுதியில் அனுப்பானடி வாய்க்கால், கொட்டுதட்டி வாய்க்கால், கிருதமால் நதி வாய்க்கால் ஆகியவை நீண்ட காலமாகத் தூர் வாரப்படாமல் உள்ளன. அத்தனை

(பிற்பகல் 12.50)

வாய்க்கால்களிலும் பிரயோசனம் இல்லாத வாய்க்கால்களை எல்லாம் மூடுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சாலைப் பராமரிப்பைப் பொறுத்தவரையில் உலகத் தமிழ் மாநாடு நடக்கும்போதுதான் சாலைப் பராமரிப்பு மதுரையில் நடந்தது. அதற்குப் பிறகு எந்தவிதமான பணியும்

நடைபெறவில்லை. எனவே அதற்கும் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இங்கே பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

* **திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முதற்கண் நன்றியைக் கூறிக்கொண்டு ஆண்டுதோறும் பல சந்தர்ப்பங்களில் வங்கக் கடலில் புயலைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற நாகைப் பகுதி மக்கள் கடந்த டிசம்பரில் அடித்த அரசியல் புயலையுந் தாங்கி நின்று எதிர் வரிசையிலே அமர்ந்து பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த நாகைத் தொகுதி மக்களுக்கு நன்றியை முதற்கண் கூறிக்கொண்டு இங்கே மூன் வைக்கப்பட்டிருக்கக்கூடிய ஆளுநர் உரையில் உப்பு இருக்கின்றதா, உரப்பு இருக்கின்றதா என்ற ஆராய்ச்சிக்கு நான் செல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல முக்கியமான தமிழ் நாட்டு மக்களுடைய பிரச்சினையில் இந்த ஆளுநர் அறிக்கை தமிழ் நாட்டு மக்களை ஏமாற்றி இருக்கின்றது என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் குறிப்பிட்ட இரண்டொரு கருத்துக்களை இந்த அவை முன் வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக நமது 8 ஆவது சட்ட மன்றம் அமைக்கப்பட்டதற்குப் பிறகு உள்ளாட்சி அமைப்புக்கள் முழுவதற்கும் தேர்தல் நடத்தப்பட்டு அந்த ஜனநாயக அமைப்பு மீண்டும் செயல்பட அனுமதிக்கப்படும் என்று தமிழ் நாட்டு மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகியவற்றிற்கெல்லாம் தேர்தல் நடத்தப்பட்டு அந்த அமைப்புக்கள் செயல்படும் என்று நம்பிய மக்களை ஆளுநர் உரை ஏமாற்றி இருக்கின்றது.

எனவே தான் எங்கோ நீங்கள் நியமனங்களைத் தவிர்த்து அரசு அமைப்புக்களில் இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புக்களிலும் கூட்டுறவு அமைப்புக்களிலும் நியமனத்தின் மூலமாகவே அவற்றை நடத்துகின்ற சூழ்நிலைக்கு நீங்கள் சென்று இருக்கிறீர்கள். எனவே அது சரியானதல்ல. இதன் விளைவாக நம்முடைய சட்ட மன்ற மேலவையில் கூட மூன்றில் ஒரு பகுதி இடம் இன்னும் நிரப்பப்படாமல் காலியாகவே இருக்கின்றது என்பதைத் தமிழகம் அறியும். அதன் விளைவாக இங்கே எதிர்ப்பவர்களும், வரவேற்பவர்களும் என எல்லோரும்





சேர்ந்து ஏகமனதாக மாமன்றத்தின் ஒத்த குரலாக அவ்வளவு பேரும் இங்கே பேசியதை நாம் பார்க்க முடிகிறது. தமிழ் நாட்டு மக்களுக்குக் குடிதண்ணீர் பிரச்சினை என்பது இல்லாத ஊர் இல்லை; அப்பிரச்சினை இல்லாத நகரம் இல்லை. அப்பிரச்சினை இல்லாத தொகுதி இல்லை என்று சொல்லக் கூடிய அளவுக்கு அனைவரும் எடுத்துக் காட்டினார்கள்.

அதோடு மட்டுமல்ல. குடிதண்ணீர் பிரச்சினை என்பது தலை விரித்தாடக் கூடிய ஒரு பிரச்சினையாக இருக்கின்றது என்பதையும் எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். எனவே தான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற, ஏகோபித்த குரலாக இங்கே வந்திருக்கின்ற இந்த குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் ஜனநாயக ரீதியாக இந்த அத்தனை அமைப்புக்களுக்கும் உடனடியாகத் தேர்தலை நடத்தியாக வேண்டும். அப்படி தேர்தல்களை நடத்தி மக்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் படாத நிலைமைகள் இருக்கும் வரையில் குடிதண்ணீர் பிரச்சினை என்பது தீர்க்கப்பட முடியாத ஒன்று என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்ததாக போலீஸ் கொடுமைகள் பற்றிச் சொன்னதற்கு, இந்த மாமன்றத்தில் உள்ள பல உறுப்பினர்கள் மேற்கு வங்கத்தில் நடக்கவில்லையா, திரிபுராவில் நடக்கவில்லையா என்று சொன்னார்கள். நான் ஒன்றை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் நாகூர் நகரம் என்பது உங்களுக்குத் தெரியும். உலகம் முழுவதும் இருக்கக் கூடிய முஸ்லிம் மக்களால் புனிதமாகக் கருதப்படக்கூடிய ஒரு நகரமாகும். அங்கே ஆண்டுதோறும் நடைபெறக்கூடிய விழா இந்த ஆண்டும் நடைபெற்றது. அதிலே அன்னிய நாட்டுப் பொருட்களை வைத்திருப்பவர்களைக் கண்டுபிடிக்கிறோம் என்ற பெயரால்—இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்கிறேன். எங்களுடைய கட்சி அன்னிய நாட்டுப் பொருட்களைக் கடத்துவதைக் கண்டுபிடிப்பதை ஆட்சேபிக்க வில்லை. ஆனால்—அந்த நகரத்திற்கு நாடு முழுவதிலிருந்தும் வந்திருக்கின்ற இலட்சக்கணக்கான மக்கள் கூடியிருக்கக்கூடிய நேரத்தில் இம்மாதம் 6 ஆம் தேதியன்று அங்கே கொடி இறக்கக்

கூடிய கடைசித் திருவிழாவின்போது காலையிலிருந்து மாலை வரையில் அங்கே பல்வேறு வீடுகளில் சோதனை செய்யப்பட்டு எந்த அன்னியப் பொருட்களும் கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்த காவல் துறை அதிகாரிகள் கூடியிருந்த பல இலட்சக் கணக்கான மக்களைப் பிடித்து அவர்களுடைய பாத்திரங்களை இழுக்கக் கூடிய நிலைக்குச் சென்று பதட்ட நிலை ஏற்பட்டு துப்பாக்கிச் சூடு நடத்தக்கூடிய அளவுக்குச் சென்றிருக்கின்றது. அப்படிப்பட்ட நடவடிக்கை தேவைதானா? இதுபோன்ற நடவடிக்கைகள் எங்கோ, மேற்கு வங்கத்திலோ அல்லது திரிபுராவிலோ நடந்ததாக உறுப்பினர்கள் எடுத்துக் காட்ட முடியுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

உள்ளாட்சி அமைப்பு ஒரு அடிப்படையான தேவை; அதற்குத் தேர்தல் நடத்த வேண்டியது அவசியமானதாக இருக்கிறது. அதேபோல் தமிழகத்து மக்களின் குடிநீர் பிரச்னை. இது கட்சிப் பிரச்னைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டு, மக்களுடைய பிரச்னையாக உருவாகியிருக்கிறது. அதேபோல் தான் அடிப்படையான பிரச்னையாக இருக்கக்கூடிய, ஏழை மக்களை கைதூக்கி விடக்கூடிய பிரச்னையாக இருக்கக்கூடிய, அனைவரும் ஏகோபித்து இந்த அவையிலே கூட நிறைவேற்றி அனுப்பப்பட்ட பினாமி சட்டத்தை என்ன செய்யப் போகிறீர்கள்?

அடுத்து, தமிழகத்தில் இருக்கக்கூடிய உபரி நிலங்களை எடுத்து, நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுக்க இந்த அரசுக்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை இந்த ஆளுநர் உரையிலே பார்த்தேன், எங்கும் கோடிட்டுக் கூட காட்டவில்லை. நீங்களே கூறியிருக்கிறீர்கள், பலமுறை. இந்த உச்சவரம்பு சட்டத்தினால் உபரி நிலம் கிடைக்கவில்லை. ஆனால், நிலத்தையெல்லாம் ஏமாற்றி, நிலத் திருடர்கள் தங்கள் கையிலே வைத்துக்கொண்டு தமிழகத்திலே இருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு அந்த நிலத் திருடர்கள் எல்லாம் ஓடி விட்டார்களா? அல்லது அந்த நிலத் திருடர்கள் இன்றைக்கும் இருக்கிறார்களா? அந்த நிலத் திருடர்கள் கையிலே நிலம் இருக்கிறதா என்பதை நீங்கள் எந்த இடத்திலும் கோடிட்டுக் காட்டவில்லை. அதை எடுத்து, நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுப்பதற்கான திட்டங்கள் ஏதும் இந்த அறிக்கையிலே இருக்கிறதா என்று எங்கே தேடிப் பார்த்தாலும்





கிடைக்கவில்லை. எங்களைப் பொறுத்தமட்டில், உள்ளபடியே இன்றைக்கு இருக்கக்கூடிய உச்சவரம்புச் சட்டத்தில் இருக்கக் கூடிய ஓட்டைகளை மட்டும் அடைத்துவிடுவோமானால் ஒரு குடும்பத்திற்கு 15 சாதாரண ஏக்கர் நஞ்சை நிலம், 25 சாதாரண ஏக்கர் புஞ்சை நிலம் என்று வரம்பு கட்டி, விதிவிலக்கை ரத்து செய்துவிட்டால், ஏறத்தாழ 20 இலட்சம் ஏக்கர் நிலங்களை மிச்ச நிலமாக எடுக்க முடியும். அதனால் ஒரு குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் நிலம் கொடுத்தால் கூட, 20 இலட்சம் குடும்பங்களுக்கு நிலம் கொடுத்து, ஏழைகளை வறுமைப் பிடியிலிருந்து விடுவிக்க முடியும் என்று நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து 60 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள். அந்த 60 இலட்சம் தொழிலாளர்களுடைய வேலையைப் பற்றி இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிக்க சட்டம் இருக்கிறது. அந்தக் கூலிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா? அந்தக் குறைந்தபட்சக் கூலி இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கக் கூடிய வாழ்க்கை நிலைக்கு பொருந்தக் கூடியதாக இருக்கிறதா? அந்தக் குறைந்தபட்சக் கூலியை உயர்த்த அரசுக்கு உத்தேசம் உண்டா? உயர்த்தப் போகிறீர்களா? அப்படி உயர்த்தி அதை அமுல்நடத்துவதற்கான நிர்வாக ஏற்பாடுகள் செய்வதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதும்கூட இந்த அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை.

அதோடு வேலைவாய்ப்பு பற்றி குறிப்பிட்டிருக்கிறீர்கள். கிராம வேலை வாய்ப்புத் திட்டம், நிலமற்றோர் வேலை வாய்ப்பு திட்டம் ஆகியவை இருக்கின்றன. அவற்றிற்காக ஒதுக்கியிருக்கிற தொகை முழுவதும் அந்த நிலமற்ற ஏழை தொழிலாளர்கள் வேலை செய்வதற்குப் போய்ச் சேருகிறதா? அதற்குப் பதிலாக அது கான்ட்ராக்டர்களுக்குப் போய் சேர்ந்து, கான்ட்ராக்டர்கள்தான் கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டம் என்ற பெயரால் இருக்கக் கூடிய வேலைகளையும் நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டம் என்ற பெயரால் இருக்கக்கூடிய வேலைகளையும் செய்கிறார்களே தவிர, அந்த விவசாயத் தொழிலாளர்கள் செய்கிறார்களா என்றால் இல்லை. ஆனால், அவர்கள் செய்தார்கள் என்று கணக்குகள் காட்டப்படுகின்றன; நடைமுறையில் கான்ட்ராக்டர்கள்தான் செய்கிறார்கள் என்பதை இம்மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர கடமைப் பட்டிருக்கிறேன்.

(திரு. கோ. வீரய்யன்) [1985 மார்ச் 13

அதே போல்தான் குத்தகை விவசாயிகள் சுமார் 10 இலட்சம் பேர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகளினால் கடன் தொல்லைகளுக்கு ஆளாகி கடனைக் கொடுக்க முடியாமல் அவதிக்குள்ளாகிறார்கள். அவர்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக சமீபத்திலே அரசு வேறு ஒரு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது. தமிழகத்தை 4 பகுதிகளாகப் பிரித்து 4 ரெவினியூ கோர்ட்டுகளை ஏற்படுத்தி, அந்தக் குத்தகை விவசாயிகளிடம் இருக்கிற பாக்கிகளுக்கு வழக்குகள் தொடர்ந்து சட்ட ரீதியாகவே அவர்களை நிலத்திலேயிருந்து வெளியேற்றம் செய்ய ஏற்பாடுகள் செய்திருப்பது எந்த வகையிலும் நியாயம் இல்லை. அது ஏழைகளுக்கு உதவக் கூடியதாக இல்லை. எனவே, குத்தகை விவசாயிகளுக்கு இயற்கை இடர்ப்பாடுகளினால், இயற்கை பாதிப்பினால் ஏற்பட்ட நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களுடைய பாக்கிகளைத் தள்ளுபடி செய்து, இந்த ஆண்டிலிருந்து 75-25 நியாய வாரச் சட்டத்தை நடைமுறைப் படுத்த முயற்சிகள் செய்ய வேண்டும்.

அதோடு இன்னொன்றை இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இதுவரையிலே தமிழகத்தில் இதற்கு முன்னால் இருந்த அரசுகள் முழுவதும் குத்தகை விவசாயிகள் என்று சொன்னால், அவர்களை இரண்டு ஜாதிகளாகப் பிரிக்காமல், ஒரே ஜாதியாக வைத்திருந்தார்கள். தனியார்களிடம் குத்தகை செய்யக் கூடிய விவசாயிகள் ஒரு பகுதி, கோயில் நிலங்களில் விவசாயம் செய்யக் கூடிய குத்தகை விவசாயிகள் ஒரு பகுதி என்று இதற்கு முன்னாலிருந்த காங்கிரஸ் அரசோ அல்லது திராவிட முன்னேற்றக் கழக அரசோ பிரிக்கவில்லை. அத்தனைச் சட்டங்களும் குத்தகை விவசாயிகளுக்கு என்று ஒரே மாதிரியாக விதிக்கப்பட்டது. ஆனால், இந்த அரசு கோயில் நிலத்திலே விவசாயம் செய்யக் கூடிய அத்தனை விவசாயிகளுக்கும் இந்த விவசாயிகள் பாதுகாப்புச் சட்டங்கள் எதுவும் பொருந்தாது என்ற வகையில் சட்டத்தைத் திருத்தப் போகிறோம் என்று அறிவித்துக் கொண்டிருக்கிறது. தயவுசெய்து தேன் அடையில் கை வைக்கிற காரியத்தை நீங்கள் செய்யக் கூடாது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அது அரசுக்கும் உதவியாக இருக்காது. விவசாயிகளுக்கும் உதவியாக இருக்காது.



1985 மார்ச் 13] [திரு. கோ. வீரய்யன்]

(பிற்பகல் 1.00)

அடுத்ததாக கொள்முதலைப்பற்றிக் கூறினீர்கள். சென்ற
ஆண்டு கொடுத்த தொகையைக் கூட இந்த ஆண்டு கொடுக்க
இல்லை. சென்ற ஆண்டு ரூ. 35 குவிண்டாலுக்கு மானியமாக
கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ. 15 கொடுக்கப்படுகிறது.
அதுவும் ரொக்கமாக இல்லை. டோக்கனாகக் கொடுக்கப்
படுகிறது. மார்ச் 31-ம் தேதிக்குள்ளாக அவர்கள் உரத்தை
வாங்கிக் கொள்ளவேண்டும். இல்லையென்றால் அது அவர்
களுக்கு செல்லுபடியாகாது. உரத்தை இப்போது வாங்கினால்
அடுத்த மகசூலில் சாகுபடி காலத்தில் ஜூன், ஜூலையில்தான்
உபயோகப்படுத்த முடியும். எனவே அது அந்தவகையில்
பயன்படாது. எனவே உதவித்தொகை என்பது ரூ. 35 ஆக
உயர்த்தி ரொக்கமாக கொடுக்க வேண்டும்.

அதேபோல இலவச மின்சாரத்தைப் பற்றி குறிப்பிட்
டிருக்கிறீர்கள். ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்
வழங்குகிறோம் என்று 1977-இருந்து 1984 செப்டம்பர் 15
வரையில் 12 காசுகள் விலையி:ு யார் சிறு விவசாயிகள் என்று
அங்கீகரிக்கப்பட்டு மின்சாரத்தைப் பெற்று வந்தார்களோ,
அதிலே 10 சதவீதம் பேர்களுக்குத்தான் இன்றையதினம்
இலவச மின்சாரம் என்று சொல்லியிருக்கிறீர்கள். பாக்கி 90
சதவீத பேர்களுக்கு மற்றவர்களுடைய ரேட்டிலே சேர்த்து
கொடுக்கவேண்டுமென்று அதற்கான காரணங்கள் விளக்கப்
பட்டுள்ளது—சொல்லப்படுகிறது. இந்த 10 சதவீத பேர்களுக்கு
கூட மின்சாரமே வரவில்லை. அவர்களுக்கு இலவச மின்சாரம்
எங்கே கிடைக்கிறது. 30 ரூபாய் மின்சாரம் இலவசமாக கிடைத்
தால் 300 ரூபாய் காயில் தீய்ந்து போய்விடுகிறது, மின்சாரம்
எப்போது வருகிறது என்று தெரியாத காரணத்தால். இதில்
அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோலதான் நில்வரி. ஆறு ஆண்டுகளாக கிராம
அதிகாரிகள் இல்லாத காரணத்தால் தேங்கியதன் விளைவு;
இயற்கை பாதிப்பினால் தள்ளுபடி செய்யப்பட்ட நிலவரியும்
அதிகாரிகள் இல்லாமல் வசூலிக்கப்படாமல் இருந்த
நிலவரியையும் அவற்றையெல்லாம் ஒரே ஆண்டிலே வசூலித்து
முடிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு நிலவரிக்கு வட்டி
விதித்து வயல்கள் எல்லாம் கொடி நட்ட அந்த சோக காட்சி

[திரு. கோ. வீரப்பன்] [1985 மார்ச்

தஞ்சை மாவட்டத்திலே நடந்தது. தமிழகம் முழுவதும் இப்போது நிலவரியை முழுவதும் சேர்த்து அதற்கு வட்டி விதித்து அதனை வசூலிக்கிற முறையில் எடுக்கிற நடவடிக்கைகள் அரசு கைவிட வேண்டும். விவசாயிகள் சிரமப் இல்லாத முறையில் 1 பிளஸ் 1 என்ற முறையில் வழங்குவதற்கும், தள்ளுபடி செய்யப்பட்ட வரிகளை தள்ளுபடி செய்வதற்கும், ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பாக்கி இருக்கிறதென்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டு அந்த முறையில் வசூலிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு இன்றியமையாத இடுபொருள் தண்ணீர் என்று அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த இன்றியமையாத இடுபொருளாக இருக்கிற தண்ணீரை பெற காவேரி பிரச்னைக்கு தீர்வு காணப்பெற வேண்டும். காவேரியில் இருக்கிற சொட்டு தண்ணீருக்கு கூட நமக்கு உரிமை இல்லையென்று நிலை ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்தில் காவேரி பிரச்னையை தீர்ப்பதற்கு இந்த அரசு என்னென்ன முயற்சிகளை மேற்கொள்கிறது என்பது குறித்து இந்த அறிக்கை குறிப்பிடப்படவில்லை.

அதேபோல பருவமழை தவறி வறட்சி பல இடங்களில் துவங்கியிருக்கிறது. அதுபற்றியும் குறிப்பிடப்படவில்லை. அதேபோல்தான் நோயால் பாதிக்கப்பட்டு, மதுரை மாவட்டத்தில் மட்டும் ஏறத்தாழ 20 கோடி ரூபாய் தானியத்தை விவசாயிகள் அறுவடைக்கு வருகிற நேரத்தில் இழந்திருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் அப்படி பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்கான எந்த முயற்சியும் எடுத்ததாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

அதேபோலத்தான் மலிவு விலைக் கடைகளைப் பற்றிக் கூறினீர்கள். மலிவு விலைக்கடைகளில் கொடுக்கப்படுகிற அரிசி 20 கிலோ இப்போது வழங்கப்படுகிறதா என்பதை தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கொள்முதல் பெருமளவில் செய்திருக்கிறோம் என்று சொன்னீர்கள். கூறு யிலே கொள்முதல் செய்த நெல்லைப் பாதுகாப்பாக வைப்ப தற்கு நிர்வாக ஏற்பாடுகள் இல்லாமல், நான் அறிந்தவரையில் தஞ்சை மாவட்டத்தில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் டன் நெல் நாற்று முளைத்து நாசம் அடைந்திருக்கிறது. [illegible]



1985 மார்ச் 13] (திரு. கோ. வீரப்பன்)

அரிசியை, வாங்கி சாப்பிடுகிற மக்களுடைய தலையிலேதான் சுமத்தப் போகிறீர்கள். இப்படிதான் மலிவு விலைக் கடைகள் நடக்கின்றன. அவை மக்களுக்கு பயன்படுகிற வகையில் முழுநேரக்கடைகளாக நடத்தப்பெற வேண்டும்.

இந்த மன்றத்திலே பல உறுப்பினர்கள் சொன்னார்கள். நல்லதை வரவேற்கக் கூடாதா என்று கேட்டார்கள். நிச்சயமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் யார் சொல்கிறார்கள் என்பதை பார்த்தல்ல, என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்த்து தீர்மானிக்கக்கூடிய கட்சி என்பதை இந்த மாமன்றம் அறியும். இப்போது மீண்டும் சொல்கிறேன். ஏதாவது சொன்னார்கள் என்றால், அது சரியா, தவறா என்று கட்டாயம் நாங்கள் பார்ப்போம். சரி என்றால் அதை வரவேற்பதிலே எங்களுக்கு எந்த சங்கடமும் இல்லை. தவறு என்றால் திருத்திக் கொள்ளுங்கள் என்று அதை எடுத்துக் காட்டுவதிலும் எந்த சங்கடமும் ஏற்பட்டதில்லை என்பதை மீண்டும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில் இங்கே பேசிய உறுப்பினர்கள் அத்தனைபேர்களும் குறிப்பிட்டப் பிரச்சனைகள் என் தொகுதி முழுவதும் இருக்கின்றன. குடிதண்ணீர் வசதி இல்லை; ரோடு வசதி இல்லை, பாலங்கள் தேவையான இடங்களில் கட்டப்படவில்லை. கடந்த 7 ஆண்டு காலத்தில் ஒரு வாய்க்காலில்கூட பாலம் கட்டப் படவில்லை.

என்னுடைய தொகுதியில் நாகூர் நகரம் மிகப்பெரும் நகரமாக இருக்கிறது. அதை ஒரு தனி நகரியமாக்க வேண்டும். அதைப்போன்று நாகையை தலைநகராகக் கொண்டு காயிதே மில்லத் மாவட்டம் அமைப்பதாகக் கூறியிருப்பதை இந்த ஆண்டு இறுதிக்குள்ளாவது அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் இங்கே கூறிய பிரச்சனைகள் மட்டுமல்லாமல், இன்னும் அரசு விட்டுப்போன விஷயங்களை எல்லாம்கூட நிச்சயமாக கவனத்தில் எடுத்துக்கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

[1985 மார்ச் 13

* திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பேரவையில் பேச வாய்ப்பளித்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவருக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் இந்தியப் பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்களுக்கும், என்னை இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு தேர்நதெடுத்த காட்டுமன்றார்கோவில் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், என்னுடைய வெற்றிக்கு அரும்பாடு பட்ட இந்திய தேசிய காங்கிரஸ், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் செயல் வீரர்களுக்கும் இந்த மாமன்றத்தின் மூலம் என்னுடைய நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

இங்கே பல உறுப்பினர்கள் பேசும்போது பல அரசியல் நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறினார்கள். என்னைப் பொறுத்த மட்டில் பல அரசியல் நிகழ்ச்சிகளை விவாதிப்பதை விட, என்னுடைய தொகுதியைப்பற்றி மட்டும் கூற விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதி கடந்த பல வருஷங்களாக எந்த விதமான அரசாங்க சலுகையையும், உரிமையையும் பெறாமல் தனிப்படுத்தப் பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, தமிழ்நாட்டிலே பெரும் மழை பெய்கிறபோதெல்லாம் திருச்சி மாவட்டத்திலிருந்து காட்டாற்று வெள்ளம் என்னுடைய தொகுதியில் இருக்கின்ற அங்கே வடவாற் உள்கரை வழியாக வந்து சேரும். அந்த நேரத்தில் வடவார் உள்கரை உடைக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களும், ஏழை எளிய விவசாயக் குடும்பங்களும் வெள்ளத்தால் சூழப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின்போது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நேரில் வந்து பார்வையிட்டார்கள். இந்த நிலையைத் தவிர்க்க வருகின்ற பட்ஜெட்டில் அந்த வடவாற் உள்கரையை சீர்செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார்கள். ஆனால் அந்த உறுதிமொழி இதுவரையிலும் நிறைவேற்றப்படவில்லை. உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் வீராணம் ஏரியில் பல ஆண்டுகளாக தூர் எடுக்காமல் சுமார் மூன்றடி மண் தூர்ந்திருக்கிறது. அதனால் மழைக் காலங்களில் வடவாற்கரை வழியாக வருகின்ற



1985 மார்ச் 13] [திரு. சா. ஜெயச்சந்திரன்]

மழைத் தண்ணீர் வீராணம் ஏரியில் தேக்கி வைப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் வெள்ளியங்காளில் இருந்து விடப்படுகிறது. இதனால் வெள்ளியங்கால் ஓடையில் உடைப்பு ஏற்பட்டு, பல ஏக்கர் நிலம் வீணாவதும் குடிசைகள் தண்ணீரால் சூழப்படுவதும் வழக்கமாகி விட்டது. எனவே வடவாற்றங்கரை, உள்கரை வெள்ளியங்கால் ஓடையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி கரைகளை வலுப் படுத்துவதோடு, வீராணம் ஏரியை ஆழப்படுத்துவதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

அடுத்ததாக காட்டுமன்னார்கோவில் தாலுகாவாக ஆக்கப் பட்டு கடந்த 7 வருடங்களுக்கு மேலாகியும், அங்கே ஒரு குற்றவியல் நீதிமன்றமோ அல்லது உரிமையியல் நீதிமன்றமோ அமைக்கப்படவில்லை. ஆகவே காட்டுமன்னார்கோவில் தாலுக்காவில் வசிக்கின்ற சுமார் 3 லட்சம் மக்களும் சட்டரீதியாக கோர்ட்டுக்குச் செல்ல வேண்டும் என்றால், பக்கத்திலே 25 கி.மீ. தூரத்தில் உள்ள சிதம்பரம் சென்றுதான் கோர்ட்டுகளை சந்திக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த அரசு காட்டுமன்னார் கோவிலிலே ஒரு குற்றவியல் நீதிமன்றம், ஒரு உரிமையியல் நீதிமன்றமும் அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, காட்டுமன்னார்கோவில் பல வருடங்களாக தாலுக்காவாக ஆக்கப்பட்டும், அங்கே ஒரு தீயணைப்பு நிலையம் இல்லை. பக்கத்திலே உள்ள கிராமங்களில் தீ பிடித்துவிட்டால், பக்கத்திலே சுமார் 25 கி.மீ. தொலைவிலுள்ள சிதம்பரத்திலிருந்துதான் அந்தத் தீயை அணைக்க வண்டியை வரவழைக்க வேண்டியிருக்கிறது, அல்லது சுமார் 60 கி. மீ. தொலைவிலுள்ள கும்பகோணம் நகரத்திலிருந்துதான் வரவழைக்க வேண்டியிருக்கிறது, அல்லது மாயவரத்திலிருந்துதான் வரவழைக்க வேண்டியிருக்கிறது. எனவே இந்த நிலையைப் போக்க காட்டுமன்னார்கோவிலில் ஒரு தீ அணைப்பு நிலையத்தை இந்த அரசு உடனடியாக திறவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக காட்டுமன்னார்கோவிலில், அரசு மருத்துவமனை பல காலமாக சீரமைக்கப்படாமல், விரிவாக்கப்படாமல், ஒரே ஒரு டாக்டரைக் கொண்டு அங்கே செயல்பட்டுக்கொண்டு வருகிறது. அந்தத் தொகுதியில் கிட்டத்தட்ட 3 லட்சத்திற்கும் மேற்பட்ட

மக்கள் வசிக்கிறார்கள். காட்டுமன்னார்கோவிலுக்குப் பக்கத்திலுள்ள சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ள மக்கள் எல்லாம் இங்கு வந்துதான் மருத்துவம் பார்க்க வேண்டும். ஆகவே அங்கே உள்ள இந்த மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டும். அங்கே உள்ள தாய்மார்கள் பிரசவப் படுக்கைகளை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பெண் டாக்டர்களையும் நியமிக்க வேண்டும்.

அடுத்ததாக, காட்டுமன்னார்கோவில் தாலுக்கா கடந்த பல வருடங்களாக மிகவும் பின்தங்கிய பகுதியாக இருந்து வருகிறது. 90 சதவீத மக்கள் விவசாயத்தையே நம்பியிருக்கிறார்கள். எனவே அங்கே தொழில் கல்விநிலையத்தை தொடங்கவும், ஒரு தொழிற்சாலையைத் தொடங்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, காட்டுமன்னார்கோவில் பகுதியில் உள்ள கொள்ளிடம் வடகரை என்று சொல்லப்படுகிற அந்த வடகரை சுமார் 30 கி.மீ. தொலைவில் உள்ளது. அங்கே பெருமழை பெய்கின்ற நேரங்களில் பல இடங்களில் உடைப்பு ஏற்படுகிறது. அதனால் பல பெரிய அபாயங்கள் ஏற்படுகின்றன. ஆகவே அந்த வெள்ளப்படுகையிலிருந்து அணைக்கரை வரையில் கொள்ளிடம் வடகரையை மேம்படுத்தி, அங்கே உள்ள பல கிராமங்கள் வசதி பெறும் அளவிற்கு தார் சாலைகள் போட்டு, பல வழித்தடங்களை அமைத்து, போக்குவரத்து வசதிகளைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, காட்டுமன்னார்கோவில் பகுதியில் இருக்கிற ஆதி திராவிட மக்களுக்கு மட்டுமல்லாமல், தமிழகத்திலே வாழ்கின்ற ஆதி திராவிட மக்களுக்கு 'தாட்கோ' மூலமாக கட்டிக் கொடுக்கப்படுகிற இலவச வீடுகள் தற்போது ரூபாய் 6 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இப்படி குறைந்த ரூபாயில் கட்டுவதால், பல இடங்களில் அந்த வீடுகளைக் கட்டுவதற்கு முடியாமல் போய்விடுகின்றது. காரணம் இந்த 6 ஆயிரம் ரூபாயில் கட்டுவதற்கு கட்டுப்படியாகவில்லை என்று காண்ட்ராக்டர்கள் பாதியிலேயே கட்டிடத்தை நிறுத்திவிட்டு போய் விடுகிறார்கள். ஆகவே அந்தத் தொகையை 6 ஆயிரத்திலிருந்து ரூபாய் 10 ஆயிரம் வரை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அதேபோல் தமிழகத்திலே வாழ்கின்ற அரிசன மக்களுக்கு மயான வசதி இல்லாமல் மிகவும் சிரமமான ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதுசம்பந்தமாக காட்டுமன்னார் கோவில் தொகுதியில் உள்ள பல அதிகாரிகளை நான் பல தடவை சந்தித்து, முறையிட்டும் கூட, அங்கே உள்ள ஆதி திராவிட மக்களுக்கு பாதை வசதிகள் அளிக்க முடியவில்லை. இதற்குக் காரணம், நில ஆர்ஜிதம் செய்யும்போது, அங்கே உள்ள நிலச் சொந்தக்காரர்கள் அதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போய்விடுகிறார்கள். ஆகவே தமிழகத்திலே வாழ்கின்ற ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்கவும், மயான வசதிகளை அமைக்கவும், ஆதி திராவிட நல அதிகாரிகள் நில ஆர்ஜிதம் செய்யும்போது, அங்கே உள்ள நிலச் சொந்தக்காரர்கள் சட்ட பூர்வமாக கோர்ட்டுக்குச் செல்ல முடியாத அளவிற்கு தனியாக இதற்கென்று ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியிலிருக்கும் தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கடலூரைத் தலைநகராகக் கொண்டு தென்னாற்காடு மாவட்டமாகவும், விழுப்புரத்தை தலைநகராகக் கொண்டு வள்ளலார் மாவட்டமாகவும் பிரிக்கப்பட இருப்பதாக கடந்த பட்ஜெட் உரையின் போது தமிழக அரசாங்கம் அறிவித்தது. ஆனால் அது இதுவரையில் செயல்படுத்தப்படவில்லை. அதை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையிலே வாழ்கின்ற மக்கள் ஏழை எளிய மலைவாசி மக்கள். அவர்கள் வசிக்கக் கூடிய இடங்களில் காட்டு இலாகாவினர் நுழைந்து மரக்கன்றுகள் நட்டு வருகிறார்கள். அந்த இடங்களை ஆக்கிரமித்து வருகின்றனர். அந்த மக்கள் அனுபவித்து வரும் அந்த பகுதிகளை அவர்களுக்கே சொந்தமாக்கித் தர வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காட்டுமன்னார் கோயிலின் வழியாகச் செல்லுகின்ற சிதம்பரம்-திருச்சி சாலை தற்போது மாவட்ட பெரும் சாலையாக (M.D.R. Road) இருந்து வருகிறது. காட்டு

மன்னார் கோயில் பல லட்சக் கணக்கான மக்களைக் கொண்டது. அந்த மக்களுக்கு அது பெரும் இடைஞ்சலாக உள்ளது. சிதம்பரத்திலிருந்து காட்டுமன்னார்கோயில் செல்லவேண்டும் என்றாலும், மற்ற இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்றாலும் அந்த வழியாகத்தான் செல்லவேண்டும். ஆகவே, அதை மாநில நெடுஞ்சாலையாக (S. H. Road) மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல காட்டுமன்னார் கோயில் வழியாகச் செல்கிற சிதம்பரம்-திருச்சி சாலையில் இருந்து சர்வராஜன் பேட்டைக்கு மக்கள் போக வேண்டுமென்றால் வெள்ளியங்கால் ஆற்றைக் கடந்துதான் செல்ல வேண்டும். அங்கே சரியான வழி இல்லாததால் வருடா வருடம் இரண்டு மூன்று பேர்கள் இறக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே வெள்ளியங்கால் ஆற்றிலே செல்வராயன் பேட்டைக்கு நேராக ஒரு பாலம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல திருச்சி-சிதம்பரம் சாலையில் இருந்து, சிறகிழந்த நல்லூர் கிராமம் செல்ல வேண்டுமென்றால் அதற்கு சரியான பாதை வசதி கிடையாது. ஆகவே அங்கே இணைப்புச் சாலைகளை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு வெள்ளியங்காலில் பாலம் கட்ட வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே மக்களின் குறைகளை எடுத்துச் சொல்லி, அதை இந்த அரசு நிறைவேற்றுவதற்காக என்னை இங்கே அனுப்பி வைத்த பரகூர் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும் எங்களுடைய இயக்கத்தின் செயல் வீரர்களுக்கும், தோழமை இயக்கத்தின் செயல்வீரர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை சொல்லிக் கொள்வதோடு, என்னை வேட்பாளராக போட்டியிட வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த புரட்சித் தலைவர் அவர்களுக்கும் இதய பூர்வமான நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

அன்னை இந்திரா காந்தியின் பெயரிலும் புரட்சித் தலைவர் அவர்களின் பெயரிலும் உள்ள அனுதாபத்தின் காரணமாகத்தான் வெற்றி பெற்றதாக எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் எல்லாம்





சொன்னார்கள். அதேபோல அனுதாபம் இல்லை, புரட்சித் தலைவர் அவர்களுடைய பணியின் வெற்றிதான், இந்த வெற்றியை பெறச் செய்தது என்று எங்கள் இயக்கத்தை சேர்ந்தவர்களெல்லாம் சொன்னார்கள். ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் பரகூர் தொகுதியிலே நான் அனுதாபத்தின் பெயரிலேதான் வெற்றி பெற்றேன். காரணம், தேர்தல் நேரத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் செய்த பணிகளை யெல்லாம் சொல்லி, அவர் மருத்துவத்திற்கு வெளிநாடு சென்றிருக்கிறார்கள். சென்றிருக்கிற முதல்வர் அவர்கள் மீண்டும் தமிழகத்திற்கு முதல்வராகவே வரவேண்டும், அவர்களுடைய நல்ல பணியெல்லாம் தொடர்ந்த தமிழகத்திலே செயல்பட வேண்டும் என்று சொல்லி நாங்கள் வாக்குகளைக் கேட்டோம். ஆனால் என்னை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வேட்பாளரும், மற்ற இயக்கத்தைச் சேர்ந்தவர்களும், புரட்சித் தலைவர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். இன்னும் சொல்லப் போனால் நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். எங்கள் இயக்கத்தைச் சார்ந்த நண்பர்கள் எல்லாம் கூட அந்த நேரத்திலே மிகவும் வருத்தத்தோடு யோசித்துக் கொண்டிருந்தோம். புரட்சித் தலைவர் அவர்கள் இல்லை, இறந்து விட்டார்கள், ஜூஸ் பெட்டியிலே வைத்திருக்கிறார்கள். அப்படி இறந்துவிட்ட ஒருவருக்கு நீங்கள் ஓட்டு போட வேண்டுமா என்று சொன்னார்கள். அதுமட்டுமல்ல. அவர்கள் நடந்துகின்ற ஆட்சி எல்லாம் முறையற்ற ஆட்சி என்று சொன்னார்கள். இப்படி அவர்கள் சொன்னதன் காரணமாக நாங்கள் ஓட்டு கேட்கச் சென்றபோது அங்கே உள்ள தாய்மார்கள் எல்லாம் என்னை தம்பி என்று செல்லப் பெயரால் அழைப்பார்கள்—அந்த அடிப்படையிலே சொன்னார்கள்—தம்பி

(பிற்பகல் 1.20)

ஓட்டு போடுவது இருக்கட்டும், முதலிலே புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறார்களா சொல்லுங்கள் என்று கேட்டார்கள். நான் சொன்னேன் இருக்கின்றார்கள். நல்லபடியாக முன்னேறி வருகிறார்கள். இன்றும் செய்தித்தாளில் வருகிறது. நீங்களே பார்க்கிறீர்கள். அப்படி இருந்தும் இப்படிக் கேட்கிறீர்களே

என்று சொன்னேன். அதுமட்டுமல்ல. இந்தச் செய்தி அங்கே எங்கள் தலைவருக்கு தெரிவிக்கப்பட்ட பிறகு தான் அவர் எந்த நிலையிலே மருத்துவமனையிலே இருக்கிறாரோ அந்த நிலையில் புகைப்படம் எடுத்து போஸ்ட்டர் அடித்து கிராமம் கிராமமாக ஒட்டினோம். அதற்கு பிறகுதான் அவர் இருக்கின்ற நிலைமையினை வீடியோ படத்திலே காட்டினோம். அதற்கு பிறகு ஏற்பட்டதுதான் இந்த அனுதாபம். ஏனென்றால் இப்படி ஒரு நல்லவரை, தமிழகத்திலே இருக்கின்ற 80 இலட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்குகின்ற சரித்திர நாயகனை இறந்துவிட்டதாக சொல்கிறார்களே, அவர்களுக்கு நாம் ஓட்டு போட வேண்டுமா? தேர்தலிலே போட்டியிடுவதற்கே இப்படியெல்லாம் பேசுகிறார்களே, இன்னும் இவர்கள் வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிட்டால் என்னென்னவெல்லாம் சொல்வார்கள் செய்வார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டு, புரட்சித் தலைவர் நல்லபடியாக வரவேண்டுமென்று லட்சக் கணக்கான பேர்கள், ஜாதி, மதம், இனங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு வேண்டிக் கொண்டு, நல்லபடியாக திரும்பி வருகின்றவரை இப்படி பேசுகிறார்களே என்று அந்த அனுதாபத்தின் அடிப்படையிலேதான் வாக்களித்தார்கள்.

சாதாரணமாக அல்ல. என்னுடைய பரகூர் தொகுதியைப் பொறுத்தவரையில் 32,818 ஓட்டுக்கள் என்னை எதிர்த்து போட்டியிட்டவரை விட கூடுதலாக போட்டார்கள். 32,800 ஓட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றியடையச் செய்தார்கள். அனுதாபத்தை பெற்றோம், மறுக்கவில்லை. ஏனென்றால் வீதி வீதியாக சென்றார்கள். ஊர்வலத்திலே பேசினார்கள். இப்படி கடுமையாக பேசியதால், அந்த வெறுப்பு எங்கள் மீது அனுதாபத்தை ஏற்படுத்தியது. புரட்சித் தலைவருடைய நல்லாட்சி தமிழகத்திலே பல்வேறு நன்மைகளை ஏற்படுத்தியது என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டார்கள், என்பதினுடைய பிரதிபலிப்பு தான் இந்த ஒரு மிகப் பெரிய இமாலய வெற்றி. இந்த வெற்றியை யாரும் மறுக்க முடியாது. இந்த வெற்றியின் காரணம் முழுவதுமாக புரட்சித் தலைவருடைய ஆட்சியின் சாதனையும், அவருடைய ஆண்டிலே, இந்த சட்ட சபையிலே வந்திருக்கின்ற



நாங்களும் முழுவதுமாக, உண்மையாகத் தொண்டாற்றுவோம் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு பல்வேறு நல்ல கருத்துக்களை சொல்லியிருந்தாலும் கூட அதனை மறுத்து சொல்வது தான் இங்கு இருக்கின்ற மரபோ, என்னவோ எனக்கு புரியவில்லை. ஏனென்றால் நான் இன்றைக்கு பேசுகின்ற பேச்சு கன்னிப் பேச்சு. நான் இங்கே முதல் முறையாக பேசுகின்ற நிலை இருப்பதால் நான் பார்க்கிறேன் ஏதோ அவர்கள் வாதத்திற்காக பேசுகிறார்களா அல்லது விவாதத்திற்காக பேசுகிறார்களா என்று புரியவில்லை. நல்லவைகளை ஏற்றுக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். ஏற்றுக்கொண்டதாக சொன்னவர்கள் ஒரு சிலரே இருக்கிறார்கள். இருந்தாலும் நல்லவைகளை ஏற்றுக்கொண்டு எப்படியெல்லாம் இன்னும் சிறப்பாக செயல்பட வேண்டுமென்று சொல்வது தான் எதிர்க்கட்சிக்கு அழகாக இருக்கும் என்று சொல்வதை நான் கேள்விப் பட்டிருக்கிறேன். அந்த அழகோடு சொன்னால் சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற ஒன்றிரண்டு பிரச்சனைகளை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன், மீதி இருப்பவைகளை மானிய கோரிக்கைகள் வருகின்ற நேரத்திலே சொல்லலாம் என்று நினைக்கிறேன். எங்களுடைய மாவட்டம் தோட்டப் பகுதிகள் கொண்ட மாவட்டம் ஆகும். அங்கே ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் மா பயிரிடப் பட்டிருக்கின்றன. அந்த மாங்கனிகள் எல்லாம் எங்கள் பகுதியிலேயிருந்து பல்வேறு மாநிலங்களுக்கு எடுத்துச் செல்கிறார்கள். அவற்றை எடுத்துச் செல்கின்ற நேரத்திலே, பல இடைத் தரகர்கள் மூலமாக விவசாயிகளிடமிருந்து விலைக்கு வாங்கப்படுவதால் நியாயமான விலை அவற்றை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்குப் போய் சேருவதில்லை. ஆகையினால் எப்படி விவசாய விளைபொருள்களுக்கு எல்லாம் 'ரெகுலேட்டட் மார்க்கெட்' என்று இருக்கிறதோ, அந்த அமைப்பின்படி இங்கே உற்பத்தியாகின்ற மாங்கனிகள்,

[திரு. டி. எம். வெங்கடாசலம்] [1985 மார்ச் 13]

திராட்சைக் கனி போன்றவை அதுபோன்ற திராட்சை ஆயிரக் கணக்கான ஏக்கர்களில் பயிர் செய்கிறார்கள். இதுபோன்ற வியாபாரிகள் கையில் சிக்கி நியாயமான தொகை கிடைக்காத அவல நிலையில் இருக்கிறது. அந்த விவசாயிகளுக்கு நிவர்த்தி ஏற்படுகின்ற வகையிலே அவைகள் எல்லாம் எந்த சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளுக்காக வாங்குகிறார்களோ, அந்தத் தொழிற் சாலைகளுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இந்த அரசு முன்வர வேண்டும். இதற்கு அரசு முன்வரும் என்ற எண்ணத்தோடு நான் இதை வெளிப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோன்று தர்மபுரி மாவட்டத்தில் கலைக் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. ஆனால் மகளிருக்கு என்று ஒரு தனி கல்லூரி இல்லை என்ற குறை இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் குறை நடப்பு ஆண்டிலாவது அவசியம் தீர்த்து வைக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இன்னும் கீழே இறங்கிப் பார்க்கின்றபோது அங்கே எதிர்க் கட்சி சம்பந்தப்பட்ட சில அதிகாரிகள் இருக்கின்ற காரணத்தால், அங்கே கிடைக்கின்ற சலுகைகள் கூட கிடைக்காமல் இருக்கக் கூடிய நிலை இருக்கிறது. காரணம், அங்கே சில கிராமங்கள் முழுவதும் குடும்பக் கார்டுகள் கொடுக்கப்படாத நிலையில் இருக்கின்றன. அந்த கிராமங்களுக் கெல்லாம் சென்று விசாரிக்கும்போது அங்கே கணக்கெடுப்பவர்கள் ஒரு கட்சியைச் சார்ந்தவராக இருந்திருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லப் போனால், வேப்பனம்பட்டி முழுமையாக விடப் பட்டிருக்கிறது. அந்த கிராமம் முழுவதும் குடும்பக் கார்டுகள் இல்லாத நிலையில் இருக்கிறது. அங்கேயிருந்த ஒரு ஆசிரியர் கணக்கெடுத்திருக்கிறார்கள். ஏதோ காழ்ப்புணர்ச்சியின் காரணமாக என்னமோ, தெரியவில்லை அந்தக் கிராமம் விடுபட்டிருக்கிறது. அந்தக் கிராமங்களுக்கெல்லாம் நடப்பாண்டிலாவது கணக்கெடுத்து, அங்கே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் நியாயமான விலையில் உணவுப் பொருள்கள் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1985 மார்ச் 13] [திரு. டி. எம். வெங்கடாசலம்]

அதுமட்டுமல்ல, தர்மபுரி மாவட்டத்திலே நிறையத் தொழிற் சாலைகள், குறிப்பாக ஓசூரில் துவங்கயிருக்கிறார்கள். அதுபோல தாலுக்கா தலைமை இடங்களில் ஒரே இடத்தில் வருகிற காலத்தில் தொழிற்சாலைகளைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அப்படித் துவக்கப்படுகின்ற தொழிற்சாலைகளில், எந்த மாவட்டத்திலிருந்து வந்து அந்த தொழிலதிபர்கள் துவக்குகின் றார்களோ, அந்தப் பகுதியிலிருப்பவர்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது. அந்தப் பின்தங்கிய மாவட்டத்திலே ஆரம்பிக்கப் படுகின்ற தொழிற்சாலைகளுக்கு எல்லாம் பல்வேறு சலுகைகள் கொடுத்தும், அந்த மாவட்டத்தின் மக்களுக்கு, அங்கு படித்த மாணவர்களுக்கு எல்லாம் வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டு மென்ற அடிப்படையில்தான் இந்தப் பின்தங்கிய மாவட்டங் களிலே தொழிற்சாலைகளை துவக்க வேண்டுமென்று இருந் தாலும், முழுமையான பலன் அந்த மக்களைச் சென்று அடைய வில்லை என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் துவக்கப்படுகின்ற தொழிற்சாலைகளில் எல்லாம் குறைந்தபட்சம் 50 சதவீதம் அங்கே படித்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்படி இன்னும் கொடுக்க முடியாத நேரத்தில், இன்னும் பெரிய காரணங்களைச் சொல்கிறார்கள். அதற்கு உண்டான பயிற்சி அவர்களிடம் இல்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் பயிற்சியை முழுமையாக முடிக்கும் வரையில் அவர்களுக்கு எல்லாம் பாதிச் சம்பளமாவது கொடுக்க வேண்டும். அவர்கள் முழுப் பயிற்சியையும் முடித்தவுடன் முழுச் சம்பளம் பெறுவதற்கான வழி வகுக்கலாம். அந்த நிலையை ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவத்தில் அந்த மாணவர்கள் இருக்கிறார்கள்.

கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்திலிருந்து கால்வாய் எங்களுடைய தொகுதிக்கு அருகாமையிலேயே உள்ள வேப்பனப்பட்டி கிராமம், வேலம்பட்டி கிராமம் வரையிலும் வருகிறது. அந்தக் கால்வாயைச் சந்தூர் கிராமம் வரையிலும் நீட்டித்துக் கொடுத்தால் அங்கே வாழ்கின்ற ஏழை எளிய பொதுமக்களுக்கு நல்ல வசதியாக இருக்கும். விவசாயமும் நல்லபடியாக நடக்கும். அதுமட்டுமல்லாமல், அங்கே குடிநீர்ப் பிரச்சினை தீர்வதற்கான

[திரு. டி. எம். வெங்கடாசலம்] [1985 மார்ச் 13

வாய்ப்பு இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, இந்த வாய்ப்பை நல்கிய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (14—3—1985) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 4. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

75. வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 11—7—1984 ஆம் நாளிட்ட II (1)/C.T. R.E. 95(a) /84 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் ஒன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 22—11—1984 ஆம் நாளிட்ட 1265 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

76. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு நகராட்சி ஹைப்ரிட் விதிகளை வகுப்பது குறித்து மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறையின் 1—9—1984 ஆம் நாளிட்ட 1160 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

77. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துகள் வளர்ப்போர்கள் இணையத்தாரால் விற்கப்படும் கோடி முந்திரி எண்ணெய்க்கு விதிக்கப்படும் வரிகளிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 26—9—1984 ஆம் நாளிட்ட 1077 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1970) 4 (3) பிரிவின்கீழ் பேரவை முன்